தமிழறியும் பெருமாள் கதைப்பனுவல்கள்

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப் பெற்றது.

பதிப்பு

மு. வையாபுரி

மேற்பார்வையாளர்

முனைவர் வீ. அரசு
பேராசிரியர் – தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
மெரினா வளாகம், சென்னை - 600 005
மே - 2004

தமிழறியும் பெருமாள் கதைப்பனுவல்கள்

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப் பெற்றது.

பதிப்பு

மு. வையாபுரி

மேற்பார்வையாளர்
முனைவர் வீ. அரசு
பேராசிரியர் – தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
மெரினா வளாகம், சென்னை - 600 005
மே - 2004

முனைவர் வீ. அரசு
பேராசிரியர் – தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005

மேற்பார்வையாளர் சான்றிதழ்

சென்னைப் பல்கலைக்கழக, சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காக, 2003-2004ஆம் கல்வியாண்டில் **"தமிழறியும் பெருமாள் கதைப்பனுவல்கள்"** என்னும் தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இவ்வாய்வேடு என் மேற் பார்வையில் ஆய்வாளர் திரு மு. வையாபுரி அவர்களின் சொந்த முயற்சியில் உருவானதாகும் எனச் சான்றளிக்கிறேன்.

நாள்:
இடம்: சென்னை

(வீ. அரசு)
மேற்பார்வையாளர்

மு. வையாபுரி
ஆய்வாளர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005

ஆய்வாளர் உறுதிமொழி

சென்னைப் பல்கலைக்கழக, சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காக, 2003-2004ஆம் கல்வியாண்டில் **“தமிழறியும் பெருமாள் கதைப்பனுவல்கள்”** என்னும் தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இவ்வாய்வேடு என் சொந்த முயற்சியில் உருவானதாகும் என உறுதி கூறுகிறேன்.

நாள்:
இடம்: சென்னை

(மு. வையாபுரி)
ஆய்வாளர்

நன்றியுரை

"தமிழறியும் பெருமாள் கதைப்பனுவல்கள்" என்னும் தலைப்பில் ஆய்வு செய்ய வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு நன்றி.

ஆய்வுத் தொடர்பான அனைத்துச் செயல்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்து; இவ்வாய்வேடு உருவாகக் காரணமாக இருந்த எனது மேற்பார்வையாளரும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறையின் தலைவருமான பேராசிரியர் வீ. அரசு அவர்களுக்குப் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன்.

ஆய்வேடு உருவாக்கத்தில் பல ஆலோசனைகளை வழங்கி ஊக்கப்படுத்திய சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரை யாளர்கள் முனைவர் ய. மணிகண்டன், முனைவர் கோ. பழநி ஆகியோர் நன்றிக்குரியவர்கள்.

என் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் சிறந்த வழி காட்டியாகவும், என்னை இயக்குகிற 'சக்தி' யாகவும் இருக்கும் என் அம்மா, அப்பா மற்றும் குடும்பத்தார் அனைவரையும் அன்போடும் பாசத்தோடும் வணங்குகிறேன்.

ஆய்விற்குத் தேவையான அனைத்து மூலச்சுவடிகளையும் எனக்கு வேண்டும் பொழுதெல்லாம் மனமுவந்து கொடுத்து உதவிய அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக காப்பாட்சியர், நூலகர் மற்றும் உதவியாளர்களுக்கும் தமிழறியும் பெருமாள் கதையின் முதல் அச்சுப் பிரதியினைக் கொடுத்துப் படியெடுக்க உதவிய மறைமலையடிகள் நூலகத்தாருக்கும், உலகத் தமிழா ராய்ச்சி நிறுவன நூலகத்தாருக்கும், உ.வே.சாமிநாதய்யர் நூலகத் தாருக்கும், சென்னைப் பல்கலைக்கழகக் கீழைக்கலையியல் ஆய்வு நூலகத்துக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

என் ஆய்வுப்பணிகளுக்குப் பல்வேறு நிலைகளில் பக்க பலமாக இருந்துவரும் நண்பர்களுக்கும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்இலக்கியத்துறை அலுவலக உதவியாளர் சங்கரன் அவர் களுக்கும், பாலகுமாரன் அவர்களுக்கும் நன்றி.

இந்த ஆய்வேட்டினைச் செம்மையுற கணினியில் அச்சிட்டுக் கொடுத்த எஸ். தனசேகர் அவர்களுக்கும் நன்றி.

உள்ளடக்கம்

	பதிப்புரை	i - viii
	ஆய்வு முகவுரை	ix - xvi
1.	தமிழறியும் பெருமாள் கதை	1
2.	அளகேசுவரராசன் கதை	57
3.	தமிழறி மடந்தை கதை	85
	பின்னிணைப்பு	

பதிப்புரை

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காக "தமிழறியும் பெருமாள் கதைப்பனுவல்கள்" அனைத்தையும் ஒப்பிட்டு அவற்றை அதன் தன்மை மாறாமல் அப்படியே பதிவு செய்யும் வகையில் இப்பதிப்புப் பணி அமைந்துள்ளது.

தமிழ்ச் சமூகத்தில் வழங்கி வந்துள்ள பல்வேறு வாய் மொழி கதைமரபுகள், கதைப் பாடல்களாகவும், வில்லுப் பாட்டுகளாகவும் கும்மிப்பாடல்களாகவும் ஆனந்தக்களிப்பு, மாலை, சிந்து, தூது முதலிய பல்வேறு வடிவங்களில் மக்க ளிடையே சொல்லப்பட்டும் பாடப்பட்டும் நிகழ்த்தப்பட்டும் வழங்கி வந்துள்ளன. இவ்வாறான கதை சொல்லல் மரபின் சமூகச் செயல்பாடு என்பது, ஒரு குறிப்பிட்ட வட்டாரம் சார்ந்த மக்களின் பண்பாடு சார்ந்த வெளிப்பாடாக, திருவிழாக்கள், சிறுதெய்வ வழிபாடுகள், குடும்ப விழாக்கள் போன்ற இயங்குதளங்களில் நிகழ்த்தப்படுகின்றன. இவற்றின் மூலமே இவைகள் நிலைபேறுடையனவாக உள்ளன.

இவையல்லாமல் பாட்டிகள் சொல்லும் கதைகள், தனிப்பட்ட நபர்கள் சார்ந்த கதைகள், தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள சில புலவர்கள், கதை மாந்தர்கள் குறித்த புனைவுகளைக் கற்பனையோடு வாய்மொழியாகச் சொல்லும் கதைகளும் உண்டு. இக்கதைகள் நாடக வடிவிலோ, செய்யுள் வடிவிலோ, வசனமும் செய்யுளும் விரவிய வடிவிலோ 17, 18ஆம் நூற்றாண்டுகளில் ஓலைகளிலும், தாள்களிலும் பதிவு செய்யப் பட்டுள்ளன. இவற்றில் செய்யுள் நூல்கள் அதிகம். வசன நூல்கள் மிகக் குறைவு. இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள "தமிழறியும் பெருமாள் கதைப் பனுவல்கள்" வசனமும் செய்யுளும் விரவிய நடையிலமைந்தவை. தமிழ் வசன நூல் உருவாக்கத்தில் இக்கதைப் பிரதிகளுக்கும் முக்கியப் பங்குண்டு என்ற வகையில் இக்கதைப் பிரதிகள் முக்கியத்துவம் உடையனவாக அமைந் துள்ளன.

தமிழறியும் பெருமாள் கதைப்பனுவல்கள் - அறிமுகம்:

தமிழறியும் பெருமாள் கதைப் பனுவல்களைப் பதிவு செய்வதற்காகப் பல்வேறு நூலகங்களின் சுவடி விளக்க அட்டவணைகளைப் பார்வையிட்டதில், சென்னை, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தைத் தவிர மற்றெந்தச் சுவடிகள் விளக்க அட்டவணைகளிலும் இக்கதைப் பிரதிகள் காணப்படவில்லை. எனவே அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள தாள் மற்றும் ஓலைச் சுவடிகளைப் பரிசோதித்தபொழுது, இக்கதை அடங்கிய ஓலைச் சுவடிகள் மூன்றும் தாள் சுவடிகள் மூன்றும், இக்கதையில் இடம் பெற்றுள்ள செய்யுள்களுக்கான உரைப்பிரதி ஒன்றும் கிடைத்தன. இந்தப் பிரதிகளை ஒப்பிட்டுப் பார்த்ததில், அனைத்துப் பனுவல்களிலும் ஒரே கதை பல்வேறு பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது தெரிந்தது.

இந்தப் புரிதலோடு, சென்னை லிங்கிச் செட்டித் தெருவிலுள்ள மறைமலையடிகள் நூலகத்தின் பழைய நூல் பட்டியல்களைப் புரட்டியபோது, நாவல்கள் என்னும் பட்டியலின் கீழ் தமிழறியும் பெருமாள் கதைப் பிரதியின் அச்சுப் பிரதி ஒன்று இருப்பதை அறிந்தேன். இந்த அச்சுப்பிரதி செப்பனிடப்பட்டு முழுமையானதாக அச்சிடப்பட்டுள்ளது. இந்தப் பிரதியை முதன்மையாக வைத்து மற்ற கதைப்பிரதிகளையும் படியெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டேன்.

இந்த அச்சுப்பிரதியோடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள எண். D.2096, தமிழறியும் பெருமாள் கதை ஓலைச்சுவடியையும், எண். R.8103, தமிழறியும் பெருமாள் கதை தாள் சுவடியையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் இவை மூன்றும் ஒரே பிரதிகள் என்றறிந்தேன். இந்த சுவடிகளில் இருந்தே இக்கதை அச்சிடப்பட்டுள்ளது.

அடுத்ததாக எண். R.1319இல் தமிழறி மடந்தை கதை என்னும் பெயரில் ஒரு பனுவல் உள்ளது. இப்பனுவலை மற்ற பனுவல்களோடு ஒப்பிட்டு பார்த்ததில் சிறிது மாறுபட்டு அமைந்துள்ளதோடு, குறையுடையதாகவும் உள்ளது. அடுத்ததாக, "அளகேசுவரராசன் கதை" என்னும் பெயரில் ஓலைச் சுவடி ஒன்றும் தாள் சுவடி ஒன்றும் உள்ளது. இவற்றின் எண். D.379, D.377. இந்த இரு பிரதிகளும் ஒன்றே. மற்ற பிரதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்ததில் அவற்றினின்றும் இவ்விரண்டு பிரதிகளும் சிறிது வேறுபட்டு அமைந்துள்ளன. அடுத்ததாக, எண். R.7546இல் "அளகேஸ்வரராசன் கதைச் செய்யுள் உரை" என்னும் பெயருடைய ஒரு தாள் சுவடி உள்ளது. இது

தமிழறியும் பெருமாள் கதைப் பனுவல்களில் இடம் பெற்றுள்ள 50 செய்யுள்களின் உரையாகும்.

மேற்கண்ட நான்கு பனுவல்களும் இதுவரை அச்சாக வில்லை. இச்சுவடிகளைப் பற்றிய விவரங்கள்.

மறைமலையடிகள் நூலகம்:

நூல்:	தமிழறியும் பெருமாள் கதை
எண்:	03:31
ஆசிரியர்:	சிதம்பரம் கருணானந்த சுவாமிகள் - (பதிப்பாசிரியர்)
பதிப்பு , ஆண்டு :	சிந்தாதிரிப்பேட்டை பிரபாகர் அச்சுக்கூடம், அக்ஷய வருடம், ஐப்பசி மாதம் 1866.
அளவு:	கையடக்கப் பதிப்பு
பக்கங்கள்:	93
நூலின் நிலை:	சிதைவு (முழுமை)

அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்:

(1)	நூல்:	தமிழறியும் பெருமாள் கதை
	எண்:	D.2096, D.2196
	ஆசிரியர்:	--
	காலம்:	--
	சுவடி:	ஓலை, 97 ஏடுகள்
	அளவு:	30 × 3 செ.மீ. பக்கத்திற்கு 5 வரிகள்
	நடை:	வசனம் / செய்யுள்
	நிலை:	ஓரளவு நல்லநிலை, அச்சாகியுள்ளது.
(2)	நூல்:	தமிழறியும் பெருமாள் கதை
	எண்:	R.8103
	ஆசிரியர்:	--
	காலம்:	--
	சுவடி:	தாள்
	பக்கங்கள்:	115, பக்கத்திற்கு 24 வரிகள்
	நடை:	வசனம் / செய்யுள்
	நிலை:	நல்ல நிலை, (D.2096 இன்படி)

(3) நூல்: தமிழறி மடந்தை கதை
எண்: R. 1319
ஆசிரியர்: --
காலம்: --
சுவடி: ஓலை, 30 ஏடுகள்
அளவு: 16 × 3 செ.மீ பக்கத்திற்கு 9 வரிகள்.
நடை: வசனம் / செய்யுள்
நிலை: சிதைவு, (குறைவுடையது), அச்சாகவில்லை

(4) நூல்: அளகேசுவரராசன் கதை
எண்: D.379
ஆசிரியர்: --
காலம்: --
சுவடி: ஓலை, 42 ஏடுகள்
அளவு: 40 × 5 செ.மீ. பக்கத்திற்கு 5 வரிகள்
நடை: வசனம் / செய்யுள்
நிலை: மிகவும் சிதைவு / குறையுடையது. அச்சாகவில்லை.

(5) நூல்: அளகேசுவரராசன் கதை
எண்: D.377
ஆசிரியர்: --
காலம்: --
சுவடி: தாள், A4 அளவு
பக்கங்கள்: 70 பக்கத்திற்கு 24 வரிகள்
நடை: வசனம் / செய்யுள்
நிலை: நல்லநிலை, (D. 379ன்படி)

(6) நூல்: அளகேஸ்வரராசன் கதைச் செய்யுள் உரை
எண்: R. 7546
ஆசிரியர்: --
காலம்: --
சுவடி: தாள் (full scape)
பக்கங்கள்: 28, 50 செய்யுள்கள்
நடை: செய்யுள் / வசனம்
நிலை: நல்லநிலை. அச்சாகவில்லை.

இக்கதையின் பெயரினை யொத்த மற்ற இரு சுவடிகள் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ளன. அவற்றுள் ஒன்று, அழகேச ராசா கதை வசனம். இதனுடைய நூலக எண். R. 5213. ஓலைச் சுவடியில் எழுதப்பட்டுள்ள இக்கதை உரைநடை யிலமைந்துள்ளது. முற்றிலும் சேதமடைந்துள்ளது. மற்றொன்று, 'அழகேசராசாக் கதை' இக்கதையின் எண். R.7178. இந்த இரண்டு சுவடிகளும் ஒன்றே. "அழகேசராசாக் கதை" உரை நடையும் செய்யுளும் கலந்து எழுதப்பட்டுள்ளது. அழகேச ராசா கதை வசனம் முற்றிலும் உரைநடையில் உள்ளது. இரண்டுக்கும் கதையில் எந்த வேறுபாடும் இல்லை. இவ் விரண்டு சுவடிகளும் 'நாலு மந்திரி கதை' என்னும் கதையோடு தொடர்புடையது. தமிழறியும் பெருமாள் கதைப் பனுவல் களுக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

தமிழறியும் பெருமாள் கதைப் பனுவல்கள் - பெயர்:

"தமிழறியும் பெருமாள் கதை" என்பதுதான் முற்று முதல் பெயர். இக்கதையைப் பற்றிய குறிப்புகள் ஆ. சிங்காரவேலு முதலியாரின் அபிதான சிந்தாமணியிலும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரரகராதியிலும் காணப்படுகின்றன. மேலும் 1866இல் சிதம்பரம் கருணானந்த சுவாமிகளால் மேற்பார்வை யிடப் பெற்று சென்னைப் பிரபாகர் அச்சுக் கூடத்தில் பதிப் பிக்கப்பெற்றதிலும் தமிழறியும் பெருமாள் கதை என்னும் பெயரே உள்ளது. இதனால் இதன் பெயர் பற்றி ஒருவாறு விளங்கும்.

மற்றொரு பெயர் 'அளகேசுவரராசன் கதை' இப்பெயர் சுவடி எழுதுபவர்களால் இடப்பட்டதாக இருக்கலாம். தமிழறியும் பெருமாள் கதையில் இடம் பெற்றுள்ள 'அளகேசுவரன்' என்னும் ராசாவின் பெயர் கதைக்கு வழங்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக, 'தமிழறி மடந்தை கதை' இப்பெயரும் சுவடி எழுதியவர்களால் இடப்பட்டிருக்க வேண்டும். தமிழறியும் பெருமாள் கதையின் முக்கிய பாத்திரமான தமிழறியும் பெரு மாள், கதையில் தமிழறிவாள், தமிழறி மடந்தை என்றும் குறிப்பிடப்படுகிறாள். அது கருதியே இப்பெயர் இடப்பட்டி ருக்கலாம். பெயர்கள் வேறுபட்டாலும் கதை அமைப்பில் அனைத்தும் ஒற்றுமையுடையதே. இவற்றில் 'தமிழறி மடந்தைக் கதை' என்னும் பனுவலுக்கு மட்டும் தாள் சுவடி இல்லை. மற்ற அனைத்திற்கும் தாள் சுவடி உண்டு.

ஆசிரியர் காலம்:

கதைப் பனுவல்களில் ஆசிரியர் குறித்து எந்தக் குறிப்பும் இல்லை. ஆனால் கதையில் பயிலப்பட்டுள்ள மொழியின் அடிப்படையில் ஒருவாறு ஊகித்தறியலம். இக்கதையின் மொழி நடையானது, கி.பி. 1714இல் பைபிளைத் தமிழ்ப்படுத்திய சீகன்பால்கு அவர்களின் மொழியடையயைப் போல இருப்ப தால் அக்காலப் பகுதியில் இது பதிவு செய்யப் பட்டிருக்கலாம். பதிவு செய்யப்பட்ட 17ஆம் நூற்றாண்டே இக்கதையாசிரி யரின் காலமாக இருக்க வேண்டும்.

கதையின் காலம்:

'தமிழறியும் பெருமாள்' கதையின் காலம் என்று பார்க்கும் பொழுது, இக்கதையில் இடம் பெற்றுள்ள சில குறிப்புகளைக் கொண்டு ஒருவாறு ஊகித்தறிய இயலும். இக்கதையில் பல இடங்களில் 'செட்டி' என்னும் சாதிப்பெயர் ஆளப்பட்டுள்ளது. செட்டி, ரெட்டி, அருந்ததியர் முதலிய சாதிக் குழுக்கள் விஜய நகரப் பேரரசின் காலத்தில் தமிழகத்தில் குடியேற்றப்பட்டனர் என்னும் வரலாற்றைக் கொண்டு பார்க்கும் பொழுது இக்கதை பதிவு செய்யப்பட்ட காலம் 17-18ஆம் நூற்றாண்டுகளாக இருக்க வாய்ப்புண்டு. ஆனால் இக்கதையில் வருகின்ற ஔவை யார், உறையூர், தமிழ்ச்சங்கம், நக்கீரர் ஆகிய குறிப்புகளைக் கொண்டு நோக்கும் போது இக்கதையின் காலம் முரண் பட்டதாக உள்ளது. இக்கருத்தினையே அபிதான சிந்தாமணி ஆசிரியரும் கொண்டுள்ளார்.

மொழி நடை:

ஓர் இலக்கியப் பிரதியின் இயங்குதளம் ஒரு சமூகம். அந்தச் சமூகம் சார்ந்த மொழிப் பயன்பாடு என்பது அந்தக் குறிப் பிட்ட இலக்கியப் பனுவலின் அல்லது வாய்மொழி வழக்காறு களில் இடம் பெறுவதென்பது இயல்பானது. தமிழறியும் பெருமாள் கதைப் பனுவல்களின் மொழி நடை வேறுபட்ட தன்மைகளை உடையதாக உள்ளன. பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் இக்கதையில் எடுத்தாளப்பட்டுள்ளன.

முதன்முதலில் 1866இல் அச்சான தமிழறியும் பெருமாள் கதைப்பனுவல் ஓரளவு செவ்வியல் தன்மையுடையதாக தமிழகம் தழுவிய நடையுடையதாக உள்ளது. இப்பதிப்புப் பலப் சுவடிகளை ஒப்பிட்டு செய்யப்பட்டதாகலாம். ஏனெனில் கீழ்த் திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள சுவடிகள் இதன் மொழி நடையிலிருந்து மாறுபட்டுள்ளன. 'அளகேசுவரராசன் கதை'

என்னும் பனுவலில் நாஞ்சில் நாட்டு வழக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது. சான்றாக,

> "அளகாபுரி, விடச் சொல்லுங்கோள், ராவைக்கு போட்டான், போகவேணு, தப்பி, இரண்டு காசுக்கு மரித்துக் கிடக்கிற, கேழ்க்க, நாச்சியார், சின்னமா, வெள்ளாட்டி, உங்களண்டைக்கு, நீர் நீரெப்படி"

போன்ற சொற்கள் பரவலாகக் கையாளப்பட்டுள்ளன. அதே நேரத்தில் தமிழறி மடந்தை என்னும் கதைப் பிரதியில் பொது வான வழக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கதையின் தொடக்கம் நாட்டார் மரபில் வாய்மொழி யாகச் சொல்லப்படுவது போன்று தொடங்குகிறது.

> "அளகாபுரி யென்றொரு பட்டண மதிலே அளகேச னென்றொரு ராசா, அந்த ராசாவுக்கு யேலவார் குழலாள் யென்றொரு பெண்ணுண்டு. அந்த அளகேச னென்கிற ராசா ராச்சிய பாரம் பண்ணுகிற காலத்தில்....."

இவ்வாறு இக்கதையின் மொழி நடை நாட்டார் வாய்மொழிக் கதை மரபுபோல் எழுதப்பட்டிருந்தாலும் பிரதியின் இடை யிடையே வருகின்ற வெண்பா விருத்தம், கலித்துறை முதலிய யாப்புகளில் அமைக்கப்பட்டுள்ள கவிகளும் இடம் பெற் றுள்ளன. இவற்றிலும் பெரும்பாலான பேச்சு வழக்குச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் கருத்துச் செறிவு மிக்கவை யாகவும் உள்ளன.

இவ்வாறு இடையிடையே பாடல்கள் சொல்லி, கதை சொல்லும் மரபு கதைப்பாடல்களுக்கு உண்டு. ஆனால் அவற்றில் நீண்ட உரைநடை பயன்படுத்தப்படாது. ஆனால் தமிழறியும் பெருமாள் கதையில் பெரும்பாலும் வசனம் பயன்படுத்தப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கதையின் தொடக்கத்தைப் போன்றே கதையின் முடியும் நாட்டார் பாங்கினதாக முற்றுப் பெறுகிறது. சான்றாக,

> "இவ்விரண்டு பேருஞ் சமுசாரமான பிறகு நற்கீர தேவர் மதுரைப் பட்டணத்திற் சங்கத்தாரிடத்திற் போய்விட்டார். பின்பு, தமிழறிவாளும் விறகு தலை யனும் ரதியும் மன்மதன் போற் கூடிவாழ்ந்து கொண்டிருந்தார்கள்"

என்று முற்றுப் பெறுகிறது. இவை எல்லாவற்றையும் கொண்டு பார்க்கும் போது இதில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி, சான்றோர் வழக்கும் அல்லாத, நாட்டார் வழக்கும் அல்லாத ஒரு மொழியாக அமைந்துள்ளது. இது இப்பிரதியின் பரந்து பட்ட தன்மையைக் காட்டுகிறது.

தமிழறியும் பெருமாள் கதைப்பனுவல்கள் - பதிப்பு:

தமிழ் வசன இலக்கியங்களில் குறிப்பிடத்தக்கதும் 19ஆம் நூற்றாண்டில் தமிழ் மக்களிடத்தில் வழங்கப்பட்டதுமான "தமிழறியும் பெருமாள் கதை" தமிழ் வசன இலக்கிய உருவாக்கத்தில் முக்கியமான ஒன்றாகும். குறிப்பாக 19ஆம் நூற்றாண்டில் தமிழ் மக்களிடத்தில் வழங்கிய கதைகளில் தமிழ்க் கதை என்று குறிப்பிட்டுச் சொல்லத்தகுந்தது இக் கதையே. இக்கதை வழியே அக்கால மொழிநடை குறித்தும், சமூக அமைப்புக் குறித்தும், அக்காலத் தமிழ்க் கற்றல் கற்பித்தல் முறைகள் குறித்தும் அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வளவு முக்கியத்துவம் மிகுந்த இக்கதையின் பல்வேறு பிரதிகளை அவற்றின் தன்மை மாறாமல் அப்படியே பதிவு செய்தல் நம் கடமையாகும்.

இந்நோக்கில் இப்பதிப்பில் கி.பி. 1866இல் அச்சிடப்பட்ட பிரதி முதலாவதாக இடம்பெறுகிறது. தமிழறியும் பெருமாள் கதையின் ஓலைச் சுவடி ஒன்றும் தாள் சுவடி ஒன்றும் கீழ்த் திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ளன. இவ்விரண்டு பிரதிகளும் 1866இல் அச்சிடப்பட்டுள்ள பிரதியின் மூலங்களே. அதனால் அவற்றை விடுத்து, 'அளகேசுவரராசன் கதை' என்னும் தாள் சுவடி இரண்டாவதாக இடம் பெறுகிறது. இந்தத் தாள் சுவடிக்கு உள்ள மூல ஓலைச் சுவடி முற்றிலும் சிதைந்துள்ளது. அதனால் அது இப்பதிப்பில் இடம் பெறவில்லை.

அடுத்ததாக 'தமிழறி மடந்தை கதை' என்னும் பிரதி இடம்பெறுகிறது, இப்பிரதிக்கு மூல ஓலைச் சுவடி மட்டுமே உள்ளது. தாள் சுவடியில்லை. மேலும், சுவடி முற்றுப் பெறாத தாக உள்ளது. இதற்கடுத்தாக, அளகேசுவரராசன் கதைச் செய்யுள் உரை என்னும் பிரதி இடம் பெறுகிறது. இதில் தமிழறியும் பெருமாள் கதையில் உள்ள 50 செய்யுள்களுக்கு வசன நடையில் உரை அமைந்துள்ளது. ஐந்தாவதாக நாட்டார் வழக்காற்றியல் சுவடிகள் குறித்த பின்னிணைப்பு ஒன்றும் இடம் பெற்றுள்ளது. இப்பதிப்பில், தமிழறியும் பெருமாள் கதைப் பனுவல்கள் அப்படியே பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒப்பீட்டு ஆய்வுகள் எதுவும் செய்யப்படவில்லை.

மு. வையாபுரி

ஆய்வு முகவுரை

கி.பி. 17ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் அச்சு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. கூடவே தாள் உபயோகமும் அறிமுகமானது. இக்காலங்களில் தமிழ் அச்சுவாகனமேறிய வுடன் வசன நடையில் தமிழை எழுதும் முயற்சிகளும் மேற் கொள்ளப்பட்டன.

முதன் முதலில் சீகன் பால்கு ஐயர் கிறித்தவ வேதாகமத்தை கி.பி. 1714இல் தமிழில் மொழிபெயர்த்தார். இதில் தமிழ் வசன வடிவில் எழுதப்பட்டது. இது பாதி இலத்தீன் சொற்கள் கலந்த எழுத்துப் பிழைகளுடன் கூடிய மொழிபெயர்ப்பு ஆகும். அதன் பிறகு நான்கு திருத்தங்களுக்கு உட்பட்டு 19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத் திருத்தத்தோடு நல்ல வசன நடையில் வெளியிடப் பட்டது. இதனைத் தமிழ் வசனத்திற்கு முன்முயற்சியாகக் கொள்ளலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டு தொடக்கம் வரை கிறித்தவப் பாதிரிகள் தங்கள் சமயப் பிரச்சாரங்களடங்கிய பிரதிகளை அச்சிட்டு வந்தார்கள். மேலும், இந்நூற்றாண்டில் ஐரோப்பிய ரால் சில தமிழ் நூல்கள் அச்சிடப்பட்டன. இக்காலத்தில், ஐரோப்பியரான வீரமாமுனிவரால் 'பரமார்த்த குருவின் கதை' என்னும் வசனக்கதை எழுதப்பட்டது. தமிழ் வசன இலக்கி யத்தின் முதல் படி இது. இதே காலத்தில், தாண்டவராய முதலியார் பஞ்சதந்திரக் கதைகளை மராட்டி மொழியிலிருந்து மொழி பெயர்த்துக் கொடுத்தார். இது இரண்டாவது படி. இந்திய அச்சுச் சட்டம் வந்தபிறகு, பத்திரிகைகள் ஆரம்பிக்கப் பட்டன. மக்களிடையே புழக்கத்திலிருந்த பல கதைகள் அச்சிடப்பட்டன.

பஞ்சதந்திர கதைகள், மதன காமராஜன் கதைகள், தெனாலிராமன் கதைகள், இராயர் அப்பாஜி கதைகள், ஆயிரத் தோர் இரவு அரபிக் கதைகள் முதலிய கதைகள் அச்சிடப்பட்டு மக்களிடையே வழங்கப்பட்டு வந்தன. இதே காலத்தில் பெரிய எழுத்துக் கதைகள் என்னும் பெயரில் பல கதைப்பாடல்கள் அச்சிடப்பட்டு வெளிவந்தன. இந்த வரிசையில் கி.பி. 1866இல்

தமிழறியும் பெருமாள் கதையும் அச்சிடப்பட்டு மக்களிடையே புழக்கத்தில் இருந்தது. மேற்குறிப்பிட்ட கதைகளில் தமிழறியும் பெருமாள் கதை மட்டுமே, வசன நடையிலமைந்த, தமிழ்ப் பின்புலத்தை மையமாகக் கொண்டதாகும். மற்றவை பிற மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவைகளாகும். இவ் வகையில் தமிழறியும் பெருமாள் கதை முக்கியத்துவம் உடைய தாக அமைகிறது.

தமிழறியும் பெருமாள் கதைச் சுருக்கம்:

அளகேசன் ஆண்ட அளகாபுரி ராசகுமாரி. இவள் உப்பரிகையிலிருக்கையில் பத்திரகிரிராச குமரனாகிய சந்தனகுமரன் கல்விகற்காமல் மூடனானதால் தந்தையால் நாட்டினின்றும் துரத்தப்பட்டு இவளிருக்கும் அரண்மனை யோரமாய் வருகையில் இவள் சந்தன குமரனிடம் மோகித்துத் தன் காதிலிருந்த ஓலையில் தன் கருத்தை எழுதி அவ்வரச குமாரன் எதிரில் இட்டாள். (அவ்வோலையின் கருத்து, இன்று இரவு நீ அருகிருக்கும் நன்காட்டுச் சத்திரத்திலிருந்ததால் நான் வந்து காண்கிறேன் என்பது). எதிரில் விழுந்த ஓலையை இராசகுமாரன் எடுத்து எழுத்தறியாதவன் ஆதலால் ஒரு குட்டரோகியிடம் அதை வாசிக்கும்படி கட்டினான். குட்டரோகி தான் இராசகுமார்த்தியை வஞ்சிக்க எண்ணி சந்தனகுமரனை நோக்கி உன்னைக் கொலை செய்ய ஆக்னை பிறந்திருக்கிறதாம். நீ பிழைத்துப்போக வேண்டுமாம் என்று அவனுக்கு வாசித்துக் காட்டி ஓலையைக் கிழித்தெறிந்தான். இதைக்கேட்ட சந்தனகுமரன் பயந்து நீங்கினான். குட்டரோகி தன்னைச் சுத்தஞ் செய்து கொண்டு சத்திரத்தில் சென்றிருந் தான். இராசகுமாரி, ஆவலுடன் வந்து தழுவித் தான் கண்டவன் அல்லாததால் உடனே இறந்து போனாள். அரச குமாரன் ஊரரால் அரசகுமாரி இறந்ததறிந்து குட்டரோகி நம்மை மோசஞ் செய்தான் என்று உயிர் நீங்கினான். இந்த இருவரும் ஆண், பெண், பேய்களாய் அந்தச்சாவடியிலிருந்து யாரையும் அவ்விடம் வரவிடாமல் துரத்தியிருந்தனர். ஒருநாள் அச் சத்திரத்தில் ஔவையார் வரப் பெண் பூதம் கோபத்துடன் வந்தது. இதனைக் கண்ட ஔவை இவைகளின் வரலாற்றறிந்து கவி கூறப் பேய்களிரண்டும் கேட்டு இவள் சரஸ்வதிதேவி யென்று தம் உருக்கொண்டு பணிந்தன. ஏலங்குழலி, ஔவை யைப் பணிந்து நின்று தான் இவ்விராசகுமரனைச் சேர்ந்திருக்க வரங்கேட்டாள். அதன்படி இவள் உறையூரில் கரிகாற் சோழன் ஆலத்திப் பெண்களில் முதல்வியாகிய மரகதவடிவி என்ப வளுக்குச் சண்பக வடிவி என்ற பெயரில் பிறந்து 1000 பொன்

கொடுக்கிறவர்களைச் சேர்வதென்று வைத்துக் கொண்டு வருகிறவர்களை விரட்டி அனுப்பிவிட்டு இருக்கையில் ஒரு நாள் சோழன் சமஸ்தானத்திற்குப் போய் வரும்போது அந் நகரத்தில் விறகுதலையனாய்ப் பிறந்திருந்த சந்தன குமாரனுடைய விகார உருவத்தைக் கண்டு காரி உமிழ்ந்தாள். சந்தன குமரனாகிய விறகு தலையன் இவளைக் கூடவேண்டு மென்கிற கருத்துள்ள வனாய் 1000 பொன் தேடி அவளுக்குக் கொடுத்து விரட்டியடிக் கப்பட்டு தமிழ்ச் சங்கத்தாரிடம் முறையிட்டு நக்கீரர் உதவியால் அவளை வெல்ல தமிழறியும் பெருமாள் இறந்தாள். நக்கீரர் தமிழறியும் பெருமாளை உயிர்ப்பித்து விறகுதலையனுக்குக் கல்யாணஞ் செய்வித்தனர். இது தான் கதைச் சுருக்கம்.

கதையின் காலம்:

இக்கதையில் வருகின்ற உறையூர், மதுரை என்னும் நகரங்கள் வரலாற்றுப் பழமையுடையவை. இவற்றில் உறையூர் சிறப்புற்றிருந்த காலம் முற்காலச் சோழர் காலம். இந்நகர் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் மிகுதியாக இடம் பெற் றுள்ளன. இன்றைய திருச்சிராப்பள்ளி நகரின் ஒரு பகுதியாக விளங்கும் உறையூர் பண்டைய உறையூரின் நினைவாக இருக்கிறது. இதைப்போலவே மதுரை என்பது முற்கால பாண்டியர் காலம் தொடங்கி முதல், இடை, கடைச்சங்கங்கள் தோன்றி வளர்ந்த வரலாறுடையது. ஆனால் அதன்பிறகு கி.பி. 19-நூற்றாண்டுவரை மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் இல்லை. இந்நிலையில் தமிழறியும் பெருமாள் கதையில் வருகின்ற மதுரைத் தமிழ்ச் சங்கம் - புலவர் குழு, நக்கீரர், ஔவையார் ஆகியோர் பற்றிய குறிப்புகள் வருவதை வைத்துப் பார்க்கும் பொழுது, இக்கதைக் குறித்த எந்த குறிப்புகளும் தமிழ் இலக்கியங்களிலோ, புலவர் வரலாறு களிலோ இல்லை. இக்கருத்தினையே அபிதான சிந்தாமணி ஆசிரியரும் கொண்டுள்ளார். எனவே இக்கதையின் காலத்தை மிகமுற்பட்டதாக எண்ண இடமில்லை.

அடுத்ததாக இக்கதையில் வரும் அளகாபுரி என்னும் பட்டணம். அளகம் - அளகாபுரி என்றால் குபேரன் நகரம் என்று பொருள். இப்பட்டணம் தமிழ்ப்புலத்தில் எங்கும் இல்லை. அடுத்து மண்டலாபுரி என்னும் பட்டணம் இதைப் பற்றியும் எந்தத் தகவலும் இல்லை. அதே நேரத்தில் அளகாபுரி என்னும் பட்டணம் வடதேசத்தில் உள்ளதாக 'அழகேச ராசா கதை வசனம்' என்னும் சுவடியில் காணப்படுகிறது. அடுத்துத்

தமிழறியும் பெருமாள் கதைப்பனுவல்களில் ஒன்றான 'தமிழறி மடந்தை கதை' யில் "அயோத்தியாபுரி" என்ற பட்டணம் குறிப்பிடப்படுகிறது. இது இக்கதையின் மற்ற பிரதிகளிலிருந்து வேறுபட்டுள்ளது. மேற்கண்ட தகவல்களை வைத்துக் கொண்டு இக்கதையின் காலத்தை அறியமுடியவில்லை.

இக்கதையின் மொழி நடை 18ஆம் நூற்றாண்டுத் தமிழ் நடையை ஒத்திருப்பதால் இக்கதைப் பதிவு செய்யப்பட்ட காலம் 1700 - 1750க்குள் இருக்கலாம் என்று கருத இடமுள்ளது. இக்கதையின் ஆசிரியர் யார் என்பது பற்றிய குறிப்பும் எதுவும் இல்லை. இவற்றை மனதில் கொள்ளும்போது இக்கதை ஒரு வசன நடையிலமைந்த கற்பனைக் கதை என்று கொள்ளலாம். சென்னைப் பல்கலைக்கழகப் பேரரகராதியும் அபிதான சிந்தமணியும் இக்கருத்தையே கொண்டுள்ளன.

ஔவையார் - நற்கீரர் பற்றிய குறிப்பு:

தமிழ்ச் சமூகத்தில் அறிவு சார்ந்த அல்லது புலமை சார்ந்த கருத்தாடலில் ஔவையாருக்கும் நக்கீரருக்கும் மிகப்பெரிய பங்குண்டு. சங்ககாலம் தொடங்கி இன்றுவரை இவர்கள் இருவரின் தாக்கம் இருந்து வருகிறது.

சங்ககால ஔவையார் மிக அதிக அளவில் புறப் பாடல்கள் பாடியவர்களில் ஒருவர். குறுநில மன்னன் அதிய மான் நெடுமான் அஞ்சியோடு நெருக்கமான உறவு கொண்டு வாழ்ந்ததாகச் சங்கப்பாடல்கள் வழி அறிய முடிகிறது. இடைக்காலத்தில் வாழ்ந்த ஔவையார், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய நீதி நூல்களை இயற்றியதாகக் குறிப்புகள் உள்ளன. இப்படி காலந்தோறும் பல்வேறு ஔவையார்கள் தமிழ்ச் சமூகத்தில் இயங்கி வந்துள்ளனர். இந்தப் பின்புலத்தி லேயே அறிவுசார்ந்த ஒரு பெண் கதாபாத்திரத்தினை உடைய தமிழறியும் பெருமாள் கதையில் ஔவையார் இடம் பெற்றிருக்க இடமுண்டு.

இக்கதையில் தான் பேயுருவில் இருப்பதாக ஔவையாரே குறிப்பிடுவதாக ஒரு உரையாடல் வருகிறது.

"தம்பி மாரே நான் இங்கே ராவைக்குப் படுத்துக் கொள்ள இடமுண்டோ வென்று கேட்டார். அதற்குப் பிள்ளைகள் சொன்னது. அம்மையாரே இந்தப் பட்டணத்திலொரு திருவாச லுண்டு, அத்திருவாசலிலே யாதாமொருவர் படுத்துக்கொண் டால் அதிலொரு பேய் இருக்கிறது. படுத்திருக்கிறவர்களை அந்தப் பேய் கொன்று போடுகிறது என்று சொன்னார்கள்.

அப்போது ஔவையார் நல்லது தானே பேயைபேயடிக்குமோ என்றவள் வந்து திருவாசலிலே படுத்துக் கொண்டு நித்திரை பண்ணினாள்." இவ்வுரையாடலில் வருகிற பேய் பற்றிய குறிப்பு, தமிழ் இலக்கிய வரலாற்றில் காரைக்காலம்மையா ரோடு தொடர்புடையதாகத் தோன்றுகிறது. தமிழக வரலாற்றில் எவ்விடத்திலேனும் ஔவையார் பேயுரு கொண்டு வாழ்ந்ததாகக் குறிப்புகள் இல்லை. இதை வைத்துப் பார்க்கும் பொழுது யாரோ ஒரு கற்றறிந்த புலவரின் கற்பனையான புனைந்துரையாக இது இருக்கும் என்று எண்ணத் தோன்று கிறது.

அடுத்ததாக, இக்கதையில் வருகிற ஒரு பாத்திரம் நக்கீரதேவர். இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்பு டையவராக அறிமுகப்படுத்தப்படுகிறார். தமிழ்ச் சமூகத்தில் அறிவு சார்ந்த விவாதங்களில் எதிர்த்து வாதிடுபவராக அடையாளப்படுத்தப்படும் வாய்மொழி மரபு ஒன்றும், சங்ககாலம், இறையனார் களவியல் காலம் என்று இலக்கிய மரபில் இடம் பெறும் மரபு ஒன்றும் உள்ளது. தமிழ்ப் புலமை எவரையும் தன் பாடல் திறமையினாலே வெல்லும் ஆற்றலும் எப்பொழுதும் உண்மையை எடுத்துச் சொல்லு கின்ற ஒருவாராக தமிழ்ச் சமூகத்தில் ஔவையாரைப் போலவே நற்கீர தேவரும் ஒரு நம்பிக்கை சார்ந்த ஒருவராக அடையாளப் படுத்தப்படுகிறார். இந்த இரண்டு பாத்திரங்களும் இக் கதையின் ஓட்டத்திற்கு முக்கியமானவர்களாக உள்ளனர்.

தமிழ்க் கற்றல் - கற்பித்தல் மரபும் தமிழறியும் பெருமாள் கதையும்:

தமிழ்க் கற்றல், தமிழ் சொல்லிக் கொடுத்தல், தமிழ் அறிவுறுத்துதல் என்பன தமிழ்ப் புலமை மரபின் இயங்கு தளத்தில் பல்வேறு நூற்றாண்டுகளாகப் பின்பற்றி வரப்படும் முறையாகும். தமிழறியும் பெருமாள் கதையின் முக்கிய பாத்திரமே அறிவு சார்ந்த, குறிப்பாகத் தமிழ்ப் புலமை சார்ந்த ஒன்றாக உள்ளது. தமிழறியும் பெருமாள் என்னும் பாத்திரம் மூலமே இக்கதை இயங்கிச் செல்கிறது. இவன் மூலமாகத் தமிழ்க் கல்வி மரபு ஒன்று உணர்த்தப்படுகிறது.

"செண்பக வடிவிக்கும் பாட்டதாரைக் கொண்டு சங்கீதமும் நாடகரைக் கொண்டு நிறுத்த வித்தையோடு தாளவகையும் ஆடக்கற்றாள். அதன் பிறகு பரத்தியாயரை யழைப்பித்து பள்ளிக் கூடத்தில் வைத்துப் படிப்பித்தார்கள்.

வடுகு, கன்னடம், ஆரியம், இளந்தமிழ், செந்தமிழ், கொடுந் தமிழ் முதலான பதினெட்டு பாஷையும் கற்று அம்பத்தோர் அட்சரமும் அறிந்து அறுபத்தினாலு கலைக்கியானமும் தொண்ணூற்றாறு தத்துவமும் பதினென் புராணமும், நன்னூல், காரிகையும், சிந்தாமணி, ராமாயணம் முதல் பலவுங் கணக் கதிகார முதல் பல கணக்கும் மற்ற இலக்கண இலக்கியங்களும் குறையறக்கற்று வல்லவரால் பன்னிரண்டு வயதான உடனே ராசாவுக்கு அறிக்கைப் பன்னினார்கள்."

மேற்கண்ட கூற்றின் வழி அக்கால கல்வி முறையை நாம் புரிந்துகொள்ள முடியும். கல்வி கற்றல் என்பது பன்னிரண்டு வயதிலேயே நிறைவடைகிறது.

"அப்போதன்பத்தாறு தேசத்து வித்து வாங்கிஷருங் குருக்கள், வேதியர், வித்தியாதரும் இதுகளோடு தர்க்கம் பண்ணவர்களையும் வேத தர்க்கம் பண்ணும் வேதியர்களையும் சகல சாஸ்திரங்கற்ற வித்தியாதரர்களையும் இலக்கண இலக்கியம் படித்த்வர்களையும் வென்று" - என்று தொடர்ந்து செல்கிறது.

தமிழ்ச் சமூகத்தில் "பெண்" என்பவள் ஒடுக்கப்பட்டவ ளாகக் கல்வி மறுக்கப்பட்டவளாக, சமூகத்தின் விளிம்பிலே வாழ்பவளாக, பார்க்கப்பட்டு வந்த காலத்தில் கல்விக் கேள்விகளில் சிறந்தவளாகப் பெண்ணை அடையாளப்படுத்து கிறது இக்கதை.

தமிழறியும் பெருமாள் கதையும் சமூக் அமைப்பும்:

வாய்மொழி இலக்கியமானாலும் செவ்வியல் இலக்கிய மானாலும் அது தோன்றுகிற காலக்கட்டத்திய சமூக செயல் பாடுகளைப் புறந்தள்ளிவிட்டு இயங்க முடியாது. ஏனெனில் இலக்கியம் என்பது காலத்தினைப் பிரதிபலிக்கக்கூடிய கண்ணாடி என்பர். அளகேசுவரரசன் கதை அக்கால தொழில் சார் சமூகப் படிநிலைகளை அப்படியே பதிவு செய்துள்ளது.

"நாவிதனும் சவரம் பண்ணினான். அப்போது வாணியன் எண்ணையும் அரைப்பும் கொண்டு வந்தான். வண்ணான் உடுக்க வேண்டிய நல்ல வஸ்திரங்களை வந்து கொடுத்தான். மருத்துவ பிராமணன் மருந்துண்டை கொடுத்தான். பூமாலைக் காரன் மாலை பூச்செண்டு, பூப்பற் கஸ்தூரி பரிமள கந்த வர்க்கங்களைக் கொண்டு வந்து கொடுத்தான். செட்டி ஆயிரத்தைம்பது பொன்னும் பாக்கு வெத்திலையுங் கொண்டு வந்து கொடுத்தான்" இப்படி தொடர்ந்து செல்கிறது.

இது அக்கால சமூகத்தில் தொழில் சார்ந்த சமூக படி நிலையைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

தமிழ்ச் சமூகத்தில் மருத்துவம் என்பது "நாவிதர்" என்று சொல்லப்படுகிற சமூகத்தோடு தொடர்புடையதாகவும் சித்தர்கள் என்பவர்களோடு தொடர்புடையதாகவும், இன்னும் வேறுசில சமூகத்தோடு தொடர்புடையதாகவும் கல்வெட்டு களிலும் செப்பேடுகளிலும் இலக்கியங்களிலும் குறிப்புகள் உண்டு. ஆனால் பிராமணன் ஒருவன் மருத்துவத் தொழில் மேற்கொண்டதாகக் குறிப்புகள் கிடைக்கவில்லை. ஆனால் இக்கதையில் "மருத்துவ பிராமணன் மருந்துண்டை கொடுத் தான்" என்ற குறிப்பு பிராமணர்களும் மருத்துவத் தொழிலை மேற்கொண்டனர் என்பதனைக் குறிப்பிடுகிறது. இது மேலும் ஆய்வுக்குரியது.

நாட்டார் கதை மரபும் - தமிழறியும் பெருமாள்:

நாட்டார் கதைகள் பெரும்பாலும் வட்டாரப் பகுதி சார்ந்த ஒரு குறிப்பிட்ட தனி மனிதர்கள், வீரர்கள், வள்ளல்கள், புரவலர்கள், செயற்கரிய செய்தவர்கள், உள்ளூர்த் தலைவர்கள், இயற்கை இறந்த சக்திகள், விலங்குகள், பறவைகள், தாவரங்கள், புதை இடங்கள், முற்பிறப்பு, ஆவிகள் ஆகியவற்றைப் பாடு பொருளாகக் கொண்டு சொல்லப்படுவன. இவற்றின் இயல்பு கேட்போரைக் கவர்வதாகவும் கதையோடு ஒன்றிப் போகச் செய்வதாகவும், தங்களுடைய வாழ்க்கையோடு அவற்றைப் பொருத்திப் பார்ப்பதாகவும் அமையும். அதே நேரத்தில் அளவற்ற கற்பனையும் சமூகத்தின் அடித்தள மக்களின் மொழியினையும் உடையதாக இருக்கும். கதையானது பல் வேறு கிளைக் கதைகளைக் கொண்டதாகவும் எல்லா கிளைக் கதைகளும் கதையின் இறுதியில் தொடர்புற்று கதை ஒரு நீதியைச் சொல்லுவதாக மங்கலமாக முடிக்கப்படும்.

அதுபோலவே 'தமிழறியும் பெருமாள் கதை' யின் தொடக்கம் ஒரு நாட்டார் கதைப் போலவே தொடங்குகிறது. அதன் உள்ளே பல்வேறு பட்டணங்களும் ராசாக்களும் இடம்பெறுகின்றனர். பல்வேறு, பேய்க் கதைகள், பொம்மைக் கதைகள், பதுமைக் கதைகளும், ரிஷி - மாம்பழம் பற்றிய கதை, சாதாரண மரம் சந்தனமரமான கதை, வாலிர சுக்கிரவன் முற்பிறப்புக் கதைகளும், விறகு தலையன், தமிழறிவாள் என்னும் இரு பாத்திரங்களின் முற்பிறப்புக் கதைகளும் இடம் பெற்றுள்ளன. கதைப் பாடல்களுக்குரிய அம்சமாக ஒரு

விருத்தத்தையோ அல்லது வெண்பாவையோ சொல்லிப் பிறகு கதையைச் சொல்லுகிற மரபும் காணப்படுகிறது. இறுதியாகக் கதை மாந்தர்கள் ரதியும் மன்மதனும் போலும் வாழ்ந்து வந்தார்கள் என்று மங்கலமாக முடிகிறது.

இக்கதை நாட்டார் கதைப்போல அமைந்திருந்தாலும் செவ்வியல் மரபும் இடம்பெற்றுள்ளது. தமிழ்ச் சமூகத்தில் கற்றல் கற்பித்தல் என்னும் செயல்பாட்டினைப் படம்பிடித்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. அக்காலத்தில் ஆணாதிக்கச் சமூக விழுமியங்களை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது. சான்றாக, தமிழறியும் பெருமாள் தம் தமிழறிவாள் சேர்த்து வைத்திருந்த செல்வங்களை எல்லாம், "கன்னி கழியாமல் தேடின படியினாலே மாயமாய் போச்சுது" என்று சொல்லுவதும் கல்விக் கேள்விகளில் ஒரு பெண் எவ்வளவு திறமையானவளாக இருந்தாலும் ஒரு ஆணின் முன் அவள் தோல்வியே அடைவாள் என்னும் கருத்தும் இக்கதையின் முடிவுகளால் தெளிவுபடுத்தப்படுகின்றன.

தமிழகத்தில் வழங்கிய நாட்டார் மரபுகளை உள்வாங்கியே தமிழில் வசன கதை இலக்கியங்கள் உருப்பெற்றன. இவ்வகையில் தமிழ் வசனக் கதை உருவாக்க காலத்தில் தமிழகத்தில் வழங்கிய கதைகளில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒன்றாகத் தமிழறியும் பெருமாள் கதை விளங்கிற்று. அவ்வகையில் தமிழ் வசனக்கதை உருவாக்கத்திலும் இக்கதைக்கு முக்கிய பங்குண்டு. இவை எல்லாவற்றையும் மனதில் கொள்ளும்போது தமிழ்க் கதை மரபில் 'தமிழறியும் பெருமாள் கதை'க்கு ஒரு தனித்த இடம் உண்டு என்பதை மறுக்க முடியாது.

தமிழறியும் பெருமாள் கதை

கடவுள் துணை

தமிழறியும் பெருமாள் கதை

இஃது
சிதம்பரம்
கருணானந்த சுவாமிகளால்
பார்வையிடப்பட்டுச்
சிந்தாதிரிப்பேட்டை
பிரபாகர் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
அக்ஷய வருடம் – ஐப்பசி மாதம் 1866

உ
கடவுள் துணை

அவையடக்கம்
எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

பொன்னகரு மளகேசன் புதல் விகற்புப்
போன்றுபோ யுறையூரி லினி துமேவி
கன்னியராய்த் தமிழறிவா ளென் னுநாமங்
தலைவாண னுடன்பிறதிக் கனையே செய்து
தன்னை யூனன் மயலாக்கு மடையான
தனிவிறகு தலையனுக்குத் தாரமாகி
இன்னிலத்தில் வாழ்ந்தகதை யுரைக்க வேண்டி
யிபமுகத்து ஐங்கரன்றா ளிணை யதாமே

சிவமயம்

தமிழறியும் பெருமாள் கதை

காப்பு – வெண்பா

சண்பகமே வீசுந்தமிழறி வாடன் பேரிற்
பண்புடனே செந்தமிழைப் பாடுதற்கு – எண்புவியில்
வேளைவிழித் தெரித்த வித்தகனார் பெற்றெடுத்த
காளை மதக்களிறே காப்பு

அளகாபுரி யென்றொருபட்டணமுன்டு. அதிலே அளகேஸ்வர னென்றொரு இராஜா இராச்சிய பரிபாலனம் பண்ணிக் கொண்டிருந்தான். அவனுக்கு ஏலங்குழலாளென் றொரு குமாரத்தி பிறந்தாள். அவள் பன்னிரண்டு வயதிலே சகல கலையுங்கற்று வெகுரூப லாவண்ணிய சவுந்தரியாய் மிகுந்த செல்வ வதியாகிப் பன்னிரண்டு நிலை யுப்பரிகையின் பேரிலேயிருந்து கொண்டு தன்னுடைய தோழிமாரும் தானு மாகப் பந்துவிளையாடிக் கொண்டிருக்கும்போது, பின்னை யொரு தேசத்திற் பாடலிபுரமென்றொரு பட்டனமுண்டு. அந்தப் பட்டணத்துக் கதிபதியான பத்திரகிரி இராஜாவுக்குச் சந்தன குமாரனென்றொரு பிள்ளையுண்டு. அவனைப் பள்ளிக்குவைத்து வித்தை படிப்பிக்கிற நாளையிலே வித்தை மனதிலே தரியாமல் மூடனாகச் சில நாளிருக்கையில் ஒருநாளி ராஜாவானவன் பிள்ளையைப் பார்த்து இப்படிக் கொத்த கல்வியற்ற மூடப்பிள்ளையிருந்தென்ன போயென்னவென்று மனஞ் சலித்துக் கொண்டான். அந்தப் பிள்ளையும் பார்த்து நமக்கு எழுத்து வாசனையில்லாத படியினாலே யல்லவோ நம்முடைய தகப்பனார் கோபித்துக் கொண்டாரென்று மனது சிந்தாக்கிரந்தனாகப் புறப்பட்டு தேசாந்தரஞ் சுற்றித் திரிந்து தேசங்களுடை புதுமைகளும் பார்த்து ஒரு வருஷந் தேசசஞ்சாரம் பண்ணியதன் பிறகு அளகாபுரி பட்டணத்தில் வந்து அந்தப் பட்டணத்துப் புதுமைகளும் பார்த்து இனியப் பாலே போகவேண்டுமென்று புறப்பட்டுவரச்சே உப்பரிகை யோரமாய்ப் போகிறவன் உப்பரிகையை யண்ணாந்துப் பார்த்தான். அந்த உப்பரிகையின் பேரிலே பூரணச்சந்திரன் உதயமானதுபோலே பந்தடித்துக் கொண்டிருக்கிற இராச குமாரத்தியைக் கண்டான். அந்த இராஜகுமாரத்தியும் பாலசூரியப் பிரகாசமான இராஜகுமாரனைக் கண்டாள் கண்டவுடனே யிருவரும் ஒருவர் மீதிலொரு வரிச்சையானார்கள்.

அப்போது ஒருவருக்கொருவர் பேசக்கூடாத படியினாலே தானும் வித்தையறிந்தவளான படியினாலே தனது காதினோ லையை வாங்கிக் கை நகத்தாலெழுதியவிவரம். இந்தப் பட்டணத்துக்கு மேலண்டையில் மண்ணோட்டமென்றொரு திருவாசற் சாவடியிருக்கிறது. அதிலே போயிரும். இராத்திரிக்கு

உம்மண்டைக்கு நான் வருகிறேனென்று எழுதி அந்த ஓலையையிந்த இராஜ குமாரன் முன்பு போட்டாள். அவனும் அந்த ஓலையை யெடுத்துக்கொண்டு தனக்கு எழுத்துவாசனை தெரியாதபடியினாலே ஆர்கையிலேயாகிலுங் கொடுத்து வாசிக்கச் சொல்லுவோமென்று புறப்பட்டுத் தன்னிச்சையாய் அந்தத் திருவாசற் சாவடியில் வந்தான். அதிலேயொரு குஷ்டரோகியிருந்தான். அவனிடத்திற்போய் உமக்கு எழுத்து வாசனை தெரியுமோவென்று கேட்க அவனும்எனக்கு எழுத்து வாசனை தெரியுமென்று சொன்னான். அந்த ஓலையைக் கையிலே கொடுத்து வாசித்துச் சொல்லுமென்று சொன்னான். அந்த குஷ்டரோகியுமந்த ஓலைக்குள் ளெழுதியிருந்த விவரத்தை மனதிலே வைத்துக் கொண்டு அந்த இராஜகுமாரத்தியைத் தானனுபவிக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டு இந்த இராஜகுமாரனுக்கு மாறுபாடாகச் சொன்னவிதம் ஓகோய் இராஜாவே இந்த அநியாயமான பட்டணத்துக்கு ஏன் வந்தீர். நீரிந்தப் பட்டணத்துக்குள் என்னதுடுக்கு பண்ணியிருக்குறீரோ தெரியாது இந்தப் பட்டணத்து இராஜா உம்மைக்கண்ட விடத்திலே ஆக்கினை பண்ணச் சொல்லி காவலாளிகள் கையில் தனது முத்திரை மோதிரத்தைக் கொடுத்திருக்கிறாராம். அவர்கள் உம்மைத் தேடிக் கொண்டு திரிகிறார்களாம். ஆனபடியினாலே இராஜ குமாரத்தி உம்மையிந்த நேரமே புறப்பட்டு ஓடிப்போகச் சொல்லி யெழுதியிருக்கிறாளென்று சொன்னான். அந்தவி சேஷத்தை இராஜகுமாரன் கேட்டு இது அநியாயமாயிருக்கின்றதே நாம் என்ன பாவஞ்செய்தோமென்று அவ்விடம் விட்டுப்புறப்பட்டு பயந்தோடிப் போனான். அதன் பிறகு குஷ்டரோகியுமெழுந்திருந்து ஒரு கிளிஞ்சிலோட்டை யெடுத்துக் கொண்டு குளக்கரைக்குப் போய் உடம்புகுளித்து உடம்பிலேருக்கிற சொறி போகும்படியாகக் கிளிஞ்சிலோட்டி னாலே நன்றாகச் சுரண்டிப்போட்டு இலுப்பைப் புண்ணாக்கும் மஞ்சளும் போட்டுத்தேய்த்துக் குளித்து நன்றாகச் சுத்தி பண்ணிக் கொண்டு தன்னுடைய சீழ்த் துணியைத் தப்பி யுலர்த்திக்கொண்டு இருட்டினபிறகு அந்தச்சாவடியிலே வந்து ஒரு மூலையிலே படுத்துக் கொண்டிருந்தான்.

இராஜகுமாரத்தியும் அன்றி ராத்திரி இராஜகுமாரனுக்குத் தான் சொன்ன அடையாளப்படிக்கு அவ்விடத்திற்றானே யிருப்பானென்று பாதி ராத்திரிக்குப் பிற்பாடு அந்த இராஜ குமாரனுக்குச் சாப்பாடும் அதற்கேற்ற பதார்த்தங்களுங் கந்தகஸ்தூரி பரிமளாதிகளும் ஆடையாபரணங்களும் ஒரு பெட்டியில் வைத்துக்கொண்டு பெட்டியை மூடி முத்திரித்து

அந்தப் பெட்டியை ஒரு தாதி தலை மீதெடுப்பித்துக் கொண்டு உப்பரிகைக்கு நூலேணிவடிறங்கி ஒருவருமறியாமல் இருவரும் புறப்பட்டு அந்தத் திருவாசற் சாவடியிலே வந்து பார்க்குமளவில் மூலையிலே படுத்துக் கொண்டிருக்கிறவனைக் கண்டு பகல் நாம் கண்ட இராஜகுமாரனென்று ஆசையாகிய காமாந்தகாரத்தினாலே ஓடிவந்து மூலையிலேயிருக்கிற குஷ்ட ரோகியைக் கட்டிக் கொண்டாள். கட்டிக்கொண்டவுடனே அவனுடம்பு இவளுடம்பிலே பட்டமாத்திரத்திற் சீழும் இரத்தமும் கப்படிக்கிற நாற்றமும் துணியெல்லாம் நனைந்து தண்ணீர்வடிந்து அத்திப்பால் தோய்ந்தது போலவும் உடம்பி லேயிருக்கிற சொரிகள் பலாக்காய் முள்தைக்கிறது போலவும் இப்படியாகயிருந்து கண்டு இவள் சுகியானபடி யினாலே யிந்த வேஷ்டை பொறுக்காமல் இவன் பகல் நாம் கண்ட இராஜ குமாரனல்ல ஏதோகபடமாச்சுதென்று ஏங்கி சீவனை விட்டாள்.

அதைக் கூட வந்த தாதி கண்டு பயப்பட்டுக் கையுங்காலும் நடுக்கமெடுத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறோம். தெய்வமே இந்த சேதி இராஜா அறிந்தால் நீங்களிந்த நேரத்தி லிங்கே வந்த காரியமென்னவென்று நம்மை ஆக்கினை பண்ணுவாரென்று மிகவும் பயந்து பெட்டியிலே போட்டுக் கொண்டு வந்த பதார்த்தங்களையெல்லாங் குஷ்டரோகி முன்னே கொட்டிப்போட்டு அந்தப் பெட்டிக்குள்ளே பிணத்தை யெடுத்துப்போட்டுக் கட்டிக் கொண்டு பெட்டியைத் தலைமீ தெடுத்துக் கொண்டு முன்வந்த வழியே புறப்பட்டு நூலேணி மேலேறி உப்பரிகைக்குள்ளே போய் கட்டிலின் மீது பிணத்தைப்படுக்க வைத்து அலறிக்கொண்டு போய் இராஜாவுடனே சுவாமீ என்னமோ தெரியாது இருந்தாப் போலிருந்து தங்கள் குமாரத்தி மரித்துப்போனாளென்று சொன்னாள். அந்த விசேஷங்கேட்டு இராஜாவானவன் ஓடி வந்து பார்க்குமளவில் நிசமா மரித்திருப்பதைக்கண்டு என்ன காரணமோ வீஷந்தீண்டிற்றோ இல்லையென்று பேய்ப் பிசாசு களறைந்து கொன்றதோ ஏதொன்றுங் காணப் போகா தென்று வெகுவாய்த் துக்கித்துக் கொண்டு பொழுது விடிந்த பிற்பாடு பெண்ணைத் தகனம் பண்ணிவைத்து செய்யுங் கடனெல்லாஞ் செய்து முடித்து அதன் பிறகு பின்னையுஞ் சில நாளைக்குப் பிற்பாடு முன்னாலே பயந்தோடிபோன இராஜ குமாரன் இந்த இராஜ குமாரத்தியிறந்து போன விசேஷம் கேள்விப்பட்டு அவனுக்கப்போது நினைவு வந்து நமக்காக மரித்தவள் போலே யிருக்கிறது குஷ்டரோகிமோசம் பண்ணி பயமுறுத்தினதை நானறியாமலோடிப் போனேனேயென்று மிகவும் விசாரப்பட்டு

அந்தப் பட்டணமே வந்து அன்று ராத்திரி சாவடியிற்போய் விஷத்தை வாங்கிக் கொண்டு செத்தான். பொழுது விடிந்த பிற்பாடு அங்கேயிருக்கிறபேர் செத்திருப்பவனைக் கண்டு ஆரோபரதேசி செத்துப்போனா னென்று மசானத்திற் கட்டைகள் கொண்டு போய்ப்போட்டு அந்தக் கன்னிகையைத் தகனம் பண்ணின விடத்திலே இவனையுமெடுத்துப் போய்த் தகனம் பண்ணிப் பிற்பாடிந்த இரண்டு ஆவேசமும் அந்தச் சாவடியிலே தங்கள் தங்களிச்சையாய்த் ஒன்றோடொன்று சேராமல் ஆணாவேச மொரு மூலையிலிருக்கும் பெண்ணாவே சமானது அந்தச் சாவடியிலே ஒருத்தரையுஞ்சேர ஒட்டாமல் பயமுறுத்திக் கொண்டிருக்கும். ஆனபடியினாலே ஒருத்தரும் அந்தச் சாவடியிலே வந்து சேரார்கள். இப்படியொருவருஷ காலமாக இதிலே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறபோது அதற்குப் பிற்பாடு ஔவையார் எங்கேயோ போயிருந்து தன்னிருப்பிடத் திற்குப் போக வேண்டி வருகிற போது அந்தப் பட்டணத்துக்கு வந்தாள். வந்தபோது சாயுங்காலமாச்சுது இன்றைக்கிங்கே யிராத்தங்கிப் போவோ மென்று நினைத்து அவ்விடத்திலிருந்த பேரைப் பார்த்து அப்பா படுத்துக்கொள்ள இடங்கிடைக்கு மோ வென்று கேட்டாள். அதற்கவர்கள் சொன்னது. இந்தப் பட்டணத்துக்கு மேலண்டையாக ஒரு திருவாசற் சாவடி யிருக்கிறது. அதிலே வேண்டியபேர் படுத்துக் கொண்டு அதிலே வந்தவர்களையெல்லா மறைந்துப்போடுகிறது. ஆகையினாலே ஒருவருமதிலே சேரப்பயப்படுகிறார்களம்மா வென்று சொன் னார்கள். ஔவையாரானவள் இந்த விசேஷங்கேட்டுப் பேயைப் பேயடிக்கப் போகிறதோ வென்று வந்து படுத்துக் கொண்டாள். அந்நேரம் அந்த ஆவேசம் அங்கேயிராமல் வெளியிற் போயிருந்தது. ஔவையார் படுத்துக் கொண்டிருக்கி றதைக் கண்டு மிகவும் ஆங்காரத்துடனே யெற்றெற்றென்று அறைய வருகிறதைக் கண்டு ஔவையாரும் அநந்தல் நீங்கி விழித்துப் பார்த்து அருளிச் செய்த வெண்பா.

வெண்பா விருகாலிற் கல்லானை வெள்ளோலைக்
கண்பார்த்துக் கையா லெழுதானைப் – பெண்பாவி
பெற்றளோ பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளென்
றெற்றோ மற்றெற்றோமற் றெற்று.

என்று சொல்லக்கேட்டு அந்த ஆவேசம் கல்வி கற்ற பேயான படியினாலே யிந்தக் கவியின் பொருளையறிந்து கொண்டு நம்முடைய பூருவோத்திரமெல்லாமறிந்து சொன்னாள். இவள் தேவியே சரியென்று இவளை யொன்றுஞ் செயப்போகாதென்று பயந்து புறப்பட்டுப்போய் இரண்டாஞ் சாமத்திலேயும் எற்றெற்

றென்று வந்தது, அப்பொழுதும் விழித்துப் பார்த்து அருளிச் செய்த வெண்பா,

எண்ணாயிரந் திரண்டு நீரிற் கிடந்தாலும்
உள்ளீர மில்லாக் கிடைச்சடைபோல் – வண்ணமுலைப்
பொற்றொடி மாதர் புணர்முலை மேற்சேராரை
யெற்றோமற் றெற்றோமற் றெற்று.

என்று சொன்ன ஔவையார் சொல்லைக்கேட்டு மீண்டுபோய் மூன்றாஞ்சாமத்திற்கு எற்றென்றுவந்து அப்போதும் ஔவை யார் விழித்துப் பார்த்து அருளிச் செய்த, வெண்பா

மானமுள்ளதே தன்மன முள்ளதே புந்தி
தானுமுள்ளதே தன்கை யுள்ளதே – யீனமுற
என்றோ விளைத்தோமென் றேமாந் திருப்போரை
எற்றோமற் றெற்றோமெற் றெற்று.

என்று சொல்லக்கேட்டு மீண்டுபோய் நாலாஞ்சாமத்திலும் எற்றெற்றென்று வந்தது - அப்போதும் ஔவையார் அருளிச் செய்த வெண்பா.

கருங்குழவி சாக்காட் டிலவங் கனிபோல்
வகுந்தநிறக் கன்னியர்தம் வாழ்க்கை – யரும்பகலே
பற்றிப் பழம்பொருளைத் தாயத்தார் கொள்வரென்
றெற்றேமற் றெற்றோமற் றெற்று.

என்று சொன்னவுடனே யிந்த நாலு சாமத்துக் கவியும் பார்த்துக் கொண்டு இந்த ஔவையாருடைய அனுக்கிரகத்தி னாலே கதிபெறலாமென்று பூர்வ இராஜ குமாரத்தியாக வடிவுகொண்டு ஔவையார் பாதத்திலே சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு கைகட்டி வாய்புதைத்து நின்றபோது ஔவை யார் அந்த ஆவேசத்தைப் பார்த்து இதின் வாய்ப்பிறப்பு கேட்க வேண்டுமென்று மனதிலெண்ணிக் கொண்டு நீ ஆரென்று கேட்டபோது அந்த ஆவேசமான இராஜகுமாரத்தி சொல்லு வாள் ஏலங்குழலியென்று சொல்லுவார்கள் நானும் எனது தோழிமாருமாக உப்பரிகையின் மேலேயிருந்து பந்தடித்துக் கொண்டிருக்கிறபோது மறுபட்டணத்து இராஜகுமாரன் இந்தப் பட்டணமே வந்து உப்பரிகையி னோரத்திலிருந்து என்னைப் பார்த்தான். நானும் அவனைப் பார்த்தேன் பார்த்து இச்சையானபடியினாலே என் காதினோலையை வாங்கி கைநகத்தினாலெழுதியவன் முன்னே போட்டேன் அவன் எழுத்தறியாதபடியினாலே யிந்தச் சாவடியில் ஒரு குஷ்ட

ரோகியிருந்தான் அவன் கையில் அந்த ஒலையைக் கொடுத்து வாசிக்கச் சொன்னான். அந்த ஓலையிலிருந்த விவரத்தை மனதிலே வைத்துக் கொண்டு என்னைப் போசிக்கலாமென் றெண்ணிக் கொண்டு அந்த இராஜகுமாரனைப் பயமுறுத்தி யோட்டிவிட்டான். அந்தக் குஷ்டரோகி யிந்தச் சாவடி மூலையிலே படுத்துக் கொண்டிருந்தான். அதையறியாமல் கட்டி யவனை முகந்து கொண்டேன். அவன் சரீர வேஷத்தைப் பார்த்து அந்த இராஜகுமாரனில்லை வென்று ஏங்கி சீவனை விட்டுவிட்டேன் - அம்மாவென்று சொல்லக்கேட்டு ஔவை யாரும் நல்லது, இப்பால் உனக்கு என்ன வரம் வேண்டு மென்றுகேட்க இராஜகுமாரத்தி சொல்லுவாள் - நானின்னம் மறுபடியும் ஜனனமெடுத்த நல்ல செல்வவதியாய் நான் ஆசைப்பட்ட இராஜகுமாரனே யெனக்குப் புருஷனாகவும் நானவனுக்குப் பாரியாகவுஞ் சிறிது காலங் கூடி வாழ்ந்திருந்து அப்பால் கதியடையத் தக்கதாக வரந்தர வேண்டுமம்மா வென்று பின்னையுந் தெண்டநிட்டு நின்றாள். - ஔவையாருஞ் சந்தோஷப்பட்டு சொல்வாள், நீ செத்த விசேஷத்தைக் கேட்டு அந்த இராஜகுமாரனும் உனக்காக வந்து இந்தச் சாவடியிலே விஷத்தைத் தின்று செத்தான். அந்த ஆவேசமும் இங்கே தானேயிருக்கிறதென்று சொன்னாள். அந்த விசேஷத்தை ஆணாவேசங்கேட்டு ஔவையார் நம்மையுமறிந்து சொன்னாள் இவள் ஈஸ்வரிதாமென்று ஆணாவேசம் முன்னிருந்த இராஜ குமாரன் வடிவமாகவந்து ஔவையார் பாதத்திலே விழுந்து சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு நின்றான். அப்போது ஔவையார் பெண்ணா வேசத்தைப் பார்த்து இவனுக்குத் தானே நீ யாசைப்பட்டதென்று கேட்க ஆமம்மா வென்று சொல்லியது. அதன்பிறகு அந்தப் பெண்ணாவேசத்துக்கு ஔவையார் அனுக்கிரகம் பாலித விவரம் உனக்கு பிர்மதேவன் விதித்தது ஐம்பது வயதுண்டு. அதிலே பண்ணிரண்டு வயது கன்னிகையா யிருந்தாய் ஒருவருஷம் ஆவேஷமாயிருந்தாய் ஆகப் பதின்மூன்று வயது சென்றது. இன்னமுனக்கு ஆயுசு முப்பத்தேழு வருஷமிருக்கின்றது.

இதிலே உனக்கு இருபத்தைந்து வயதளவுங் கன்னி கழியக் காரணமில்லை. ஆனபடியினாலே தெற்கே உறையூரென்றொரு பட்டணமுண்டு அதிலே கரிகாலச் சோழன் இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கிறான். அவனிடத்திலே ஆளாத்திப் பெண்கள் பன்னீராயிரம்பேர்களுண்டு. அந்தப் பன்னீராயிரம் பெண்களுக்கு முதல்வியான மரகதவடிவியென் றொரு பெண்ணுண்டு அந்த மரகதவடிவி வயிற்றிலே நீ போய்

வெகு எவ்வர்ன்ன ரூப சவுந்தரியத்துடனே பிறக்கப்போகிறாய் நீ பிறந்த உடனே பட்டமெல்லாஞ் சண்பகப் பூவாசனை பரிமளிக்கும் அப்போது சோழமஹாராஜன் மகள் அதியப்பட்டு உன்னைச் சண்பக வடிவியென்று பேரிடுவாள். அந்தப் பேரைக் கொண்டு வளருகின்ற நாளிலே உன்னுடைய ரூபாதிசயத்தைக் கேள்வியுற்று சந்தோஷப்பட்டு சோழகாராஜனானவன் நீ பிறந்தபோது பின்னையும் பெண்கள் பிறந்த துண்டோ வென்று விசாரிக்கும்பொழுது பன்னிராயிரம் பெண்கள் வயிற்றிலும் பன்னீராயிரம் பெண்குழந்தைகள் பிறந்திருக்கிற தென்று சொல்வார்கள். அந்தப் பெண்களையு முன்னையு மெடுத்து வரச்சொல்லி லட்சணக்காரரை யழைப்பித்து லட்சணம் பார்க்கச் சொல்லி அவர்கள் லட்சணம்பார்த்து நன்றாயிருக்கிறதென்று சொல்லுவார்கள்.

அப்போது உன்னைப் பெற்றதாய் மரகத வடிவியை அழைப்பித்து உன்னை நன்றாக வளர்க்கச்சொல்லி கட்டளை யிட்டு உன்னை அஞ்சுவயதிலே பள்ளிக்கு வைத்து சகலமான கல்வியையும் கற்பித்து ஏழுவயதிலே ஆடல் பாடலுங் கற்பித்திருக்கின்ற நாளையிலே பன்னிரண்டு வயதும் பக்குவமாய் வெகு ரூபவதியாயிருப்பாய் ஒருநாளையதினத்தில் சோழ மகாராஜ னுன்னையழைப்பித்து நீகற்றிருக்கிறவித்தை ஆடல் பாடல்களையெல்லாம் பார்ப்பான் தமிழிலே வெகு மிச்சமாயிருப்பாய் ஆனபடியினாலே சோழமகாராஜன் சந்தோஷப்பட்டு இவள் தமிழுக்குரியவளென்றும் இன்று முதற் கொண்டு சண்பகவடிவியென்கிற பெயரை வேண்டாமென்று மாற்றித் தமிழறியும் பெருமாளென்று பெயர் கொடுத்திருக் கச்சே சோழமகாராஜனுடனே நீ சொல்லிக் கொள்வாய் ஐயாவே என்னுடனே கவி பிரசங்கம் பண்ணி யென்னிலுங் கவிமிச்ச மானவனைச் சேருவேன் ஆகாத பேர்களைத் தள்ளி விடுவேன் எப்படிக் கொற்றமன்னர் மண்டலீகர் வந்தாலும் வந்தவர்கள் கையில் முந்தி ஆயிரம் பொன் வாங்கிக்கொண்டு அதன் பிறகு கவியைச் சொல்லி அந்த கவிக்குப் பொருள் சொல்ல வகையறியாமல் விட்டால் அவனை அடித்து ஓட்டிவிட்டு கன்னி கழியாமல் அன்றைக் காயிரம்போன் வாங்கிக் கொண்டு உண்டு சுகித்திருப்பேனென்று சொல்ல அப்போது இராஜவுஞ் சந்தோஷப்பட்டு அப்படியே நீ கீர்த்தி படைத்திருந்தால் போதும் போதுமென்று சொல்லி அப்போது உனக்குவேறே அரண்மனைக்கு ஏழுமதிலும் அறுபத்து நான்கு வாசலும் வாசலுக்குவாசல் விநோதம் பண்ணியிருக்கிற வாசலுங்கற்றுச் சொல்லிப் பெண்களிருக்கிற வாசலுஞ் சூஸ்திரப்பது

மையிருக்கிற வாசலும் புலியிருக்கிற வாசலுங் கரடியிருக்கிற வாசலும் யானையிருக்கிற வாசலும் குரங்கிருக்கிற வாசலும் வேட்டை நாயிருக்கிற வாசலும் கிணறிருக்கிற வாசலும் அந்தக் கிணற்றிலே யிழிந்தால் சூஸ்திரப்பலகை மேலே மூடிக் கொள்ளவும் அது கடந்து அப்புறம் போனால் குங்குமச் சேறிருக்கிற வாசலும் அந்தக் குங்குமச் சேற்றைக் கடந்தவன் கால்கழுவ ஆழாக்கு பனிநீர் வெள்ளிக் தட்டில் அக்கரையிலே வைத்திருக்கிற துஞ்சித்திர மண்டபங்களும் பாரதம் இராமாயணம் அரிச்சந்திரன் கதை நளராசன் கதை இப்படிக் கொத்த விச்சித்திரங்களெழுதியிருக்கிற மண்டபங்களும் நீராழி மண்டபமும் பளிங்கு மாமண்டபமுந் தமிழறியு மண்டபமும் இயலறியுமண்டமும் இசையறியுமண்டபமும் கூத்துப் பார்க்கிற மண்டபமும் இவைகளெல்லாம் வைப்பித்து இதற்கப்பால் கோழிச் சேவல் குத்துக்கு விடுகிற வாசலும் ஆட்டுக் கடாபாச்சலுக்கு விடுகிற வாசலும் நாடக சாலை வாசலும் மப்பால் நடுமத்தியிலே வெகு அலங்காரமான கச்சேரி மண்டபமும். அதிலே களிற்றானைத் தந்துக்கட்டிலும் பெட்டையானை தந்தக்கட்டிலுந் தூங்கு மஞ்சமாகச் சோடித்து அந்தக்கட்டில் கால்மாடு தலைமாடு தெரியாத பாவனை யாகப் போடுவித்து தலைமாட்டிலே நிலைக் கண்ணாடியுங் கால்மாட்டிலே சூஸ்திரப்பதுமைகளும் வைப்பித்திருக்கும். அந்தக் கட்டிலின்பேரிலே கால்மாடு தலைமாடறிந்து படுத்துக் கொண்டால் அந்தப் பிரதமைகளில் ஒன்றுகால் பிடிக்கவும் ஒன்று கைபிடிக்கவும் ஒன்று விசிறியெடுத்து விசறவும் சிறிது பாக்கு வெற்றிலை மடித்து கொடுக்கவும் சிறிது தம்பலப் படிகமேந்தவும் இப்படி யனேகம் ஜாலகம் பண்ணிக் கொண்டிருக்கும். வகையறியாமல் வந்து கால்மாட்டிலே தலையை வைத்துப் படுத்துக் கொண்டால் அந்த சூஸ்திரப்பதுமைகளில் ஒன்று தலையை வளைத்துப் பிடிக்கும்ஒன்று மூத்திரம் பெயும், ஒன்று தலையைச் சிரைக்கும் ஒன்று சாணி கொண்டு வந்து தலைமீதில் வைக்கும்.ஒன்று விளக்கேற்றிவைக்கும் இப்படி வேண்டிய விநோதகளெல்லாம் உண்டு பண்ணி வைத்து உனக்குப் பச்சைப் பல்லக்குங் கட்டளையிட்டு நீ பிறக்கச்சே பிறந்த பன்னீராயிரம் பெண்களையும், உனக்குச் சேவிக்கத் தக்கதாகக் கட்டளைபண்ணி இவைகளல்லாமல் உனக்குச் சரிசமானமாகயிருக்கப்பட்ட தோழிமார் இயலறியும் பெருமாளென்றும் இசையறியும் பெருமாளென்றும் இரண்டு பேருண்டு. அந்தத் தோழிமாரும் நீயுமாகப் பல்லக்கிலேறிக் கொண்டு ஆடல்பாடல் மேளதாளங்களுடனே வெகு ஆடம்பரத்துடனே காலைப் போதிலும் நல்ல மத்தியான

காலமுஞ் சாயுங்காலமும் இந்த மூன்று நேரமுஞ் சோழ மஹாராஜன் கொலுவிற்குப் போய் ஆடல் பாடல் முதலிய வைகள் செய்து திரும்பும்படி கட்டளை பண்ணி பகலைக்கும் இராத்திரிக்கும் பொழுது போக்குதலாகத் தருமகதைகளைக் கேட்கவும், புராணங்களெல்லாம் கேட்கவும், அரதேசி பரதேசிகளுக்கு அன்னம் பராமரிக்கவும், அஞ்சனமாவும் போசனம் பண்ணவும், ஆடையாபரணந்தரிக்கவுங் கேளிக்கை பார்க்கவும் பளிங்கு மாமண்டபத்தில் ஒருஜாமம் நித்திரை பண்ணவும் இப்படி சகல ஆடம்பரமுங் கட்டளையிட்டு சோழராஜாவானவர் உண்டு பண்ணுவார்.

அந்தப் பிரகாரம் இந்த முப்பத்தெட்டு வயதளவுங் கன்னி கழியாமல் வெகு யோகசாலியாயிருப்பாய் இந்த இராஜ குமாரனும் அந்தப்பட்டணத்திலே ஒரு விறகு தலையன் வயிற்றிலே பிறந்து பெரியவனாகி விறகுவிற்று வயிறு வளர்த்துக் கொண்டு திரிவான். இப்படியாகயிருக்கிறபோது ஒருநாள் காலையில் கடைத்தெருவில் விறகு சுமையை சாற்றிவைத்து கடையிலே உட்கார்ந்து கொண்டிருப்பான். அந்தச் சமயத்திலே நீயுந் தோழிமாருமாக வெகு ஆடம் பரத்துடனே சோழ மகாராஜன் கொலுவிற்குப் போய் ஆடல் பாடல் செய்து கொலு கண்டு திரும்பவும் அரண்மனைக்குப் போகிறபோது கடைத்தெரு வழியாக வருவாய். இந்த விறகுதலையனும் நீ வருகிற வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருப்பான். அப்போது நீயும் இவனைப் பார்ப்பாய் பார்த்தவுடனே உன்பக்கத்திலிருந்த தோழிகளையழைத்து அந்தக் கடையிலே யிருக்கிறவனைப் பாருங்கள் பாசிப்பல்லும், பூசாமுகமும் வெந்தவீட்டுக் கழிமரம் போலே காலுங்கையும் அரையிலே சுற்றிய கொடியும், அதிலே சொருகிய அரிவாளுமிப் படியாக இருக்கின்றவனையும், ஒரு பெண் பிள்ளையுஞ் சேருவாளோ வென்று கேட்க, அதற்குத் தோழி சொன்னாள். அப்படியேன் சொல்லுகிறாய் ஊசியுமல்லவே ஒரு சரட்டைக் கோத்துக் கொண்டிருக்கிறது. இவனுக்கும் ஒருத்தியிருப்பா ளென்று சொல்வாள். அந்த வசனத்தைக் கேட்டு நீயுமவனைப் பார்த்து காரியுமிழ்வாய். நானும் உமிழ்ந்தேனென்று சொல்ல அவையறிந்த விறகுதலையனை கண்டிவள் ஸ்ரீஜாதியானவள் நம்மைப் பார்த்துயுமிழ வந்த காரணமென்ன ஆண்பிள்ளை யெப்படியிருந்தாலென்ன நல்லது இவளுக்கு எப்படியாகிலும் ஆயிரம் பொன் சேகரித்துக் கொண்டு இவளண்டைக்குப் போயிவளுக்குக் கொடுத்து இவளைச் சேராமற் போவேனோ வென்று மனதிலே பிரத்திக்கினை பண்ணிக் கொண்டு போ

யதற்கேற்ற பேருடனே சொல்லி ஆயிரம் பொன்னுஞ் சவதரித்துக் கொண்டு உன்னரண்மனைக்கு வருவான். வந்த வன்கையிலாயிரம் பொன்னும் வாங்கிக்கொண்டு யதன்பிறகு ஒரு கவியைச் சொல்லுவாயந்தக் கவிக்குப் பொருளறியாமல் விழிப்பான். அப்போது அடித்து ஒட்டிவிடுவாய் அந்தப் பட்டணத்திலே அவனுக்கு முன்னே வந்து உன்கையிலடி பட்டுப் போன பேரிருப்பார்க ளவர்களண்டைக்குப் போய் முறையிடுவா னததற்கவர்கள் சொல்லுவார் களடாபயித்தியக் காரா நீ ஆயிரம் பொன்னல்ல பதினாயிரம் பொன் கொடுத்தாலு முன் காரியமாகப்போகிறதில்லை அவளுடனே கவி சொல்லி உத்தரப் பிரசங்கம் பண்ணத் தக்கின பேரிங் கொருத்தருமில்லை. ஆகையால் கவிசொல்லி கல்வி வல்லமை யினாலே செயித்தாற் காரியமாம் மற்றப்படிக்குக் காரியமாகப் போகிறதில்லை நீயுஞ் சமர்த்தனானால் மதுரையிலே பாண்டியராஜாவினுடைய சங்கத்தார் (49) பேரிருக் கிறார்கள் அவர்களண்டைக்குப்போய் முறையிட்டால் அப்போ தேதாவது அவர்கள் வந்து செய்தால் செய்வார்கள். இல்லா விட்டாலிங்கேயாரு மவளுக் கெதிராளியில்லை. அங்கே போம் பிள்ளாயென்று சொல்லுவார்களப்போ திந்த விறகு தலையனும் மதுரைக்குப்போய் சங்கத்தாருடனே முறையிடுவான்.

அதுகேட்டு நற்கீரர் வந்து ஒரு ராத்திரி யெல்லா முன்னுடனே பிரிது வாதித் துன்னைத் தோற்கடித்து தமிழறியும் பெருமாளென்கிற பெயரை மாற்றிவைத்து அதன்பிறகு விறகு தலையனுக்கு உன்னைவிவாகம் பண்ணிவைத்துப் போவாரப் பால் உனக்குப் பின்னையும் ஆயுசு பன்னிரண்டு வயதுண்டே அந்தப் பன்னிரண்டு வருஷமும் நீங் களிரண்டு பேருங்கூடி வாழ்ந்திருந்து அப்பால் நீங்கள் கதியடைந்து போங்களென்று ஔவையார் வரங்கொடுத்தா ளதுகேட்டு இரண்டாவேசமும் சாஷ்டாங்கமாகத் தெண்டநிட்டு ஔவையார்கையில் அனுப்பி வித்துக் கொண்டு போயின. ஔவையாருந் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தாளிப்பால் பெண்ணாவேசம் உறையூரில் தேவடி யாளான மரகத வடிவிவயிற்றிலே பிறந்தாள். ஆணவேசமும் அந்தப்பட்டணத்திலே விறகு தலையன் வயிற்றிலே பிறந்தான். இவளுக்குத் தமிழறிவாளென்று பெயருண்டாகி ஔவையார் வரங்கொடுத்த படிக்கு முன்னாலே சொன்ன பிறகாரம் சோழமகாராஜன் முகாந்தரமாய்ச் சகல பிரதிஷ்டைகளும் முண்டாச்சுது. இப்படியாக இருக்கிற நாளிலே ஒருநாள் பச்சைப் பல்லக்கின்மே லேறிக்கொண்டு பன்னீராயிரம் பெண் களுஞ் சேவித்து வரப் பகலிற் பந்தம் பிடிக்க வெண்சாமரை

வீசத் தோழிமாறிரண்டு பக்கத்திலும் வரக் கட்டியக் காரர்கட்டியங் கூறி எச்சரிக்கை சொல்லப் பதினெட்டுமேள வாத்திய முழங்க தம்புருவீணை கின்னரி - சுர மாண்டலமிரா வணாஸ் திரம் குடமுழா இப்படிக் கொத்த ராகசங்கீத முழங்கிவர ரூபலாவண்யத்துடனே வாலிபரெல்லாம் மூர்ச்சை யாய் வீழ்ந்திடவுஞ் சோழ மகாராஜன் கொலுவிற்குச் சென்று அவர் திருமுகம் பெற்று திரும்பி வருகிறபோது அந்த விறகு தலையனைக் கடையிலே கண்டிவனையும் ஒரு பெண் பிள்ளை சேருவாளோ வென்று கறியுமிழ்ந்தாளதையந்த விறகு தலையன் கண்டு பளாபளா நன்றாயிருக்கின்ற திவாளாகிற தேது சோழ மகாராஜன் வீட்டு வெள்ளாட்டிப் பெண் இவளெப்படி இருந்தாலுந் தேவடியாள் தான். நாமென்ன ஆண் பிள்ளை யல்லவோ என்னைப் பார்த்திவள் உமிழ்ந்த காரணமென்ன வென்று கோபித்துக் கொண்டு என் பங்கிலே தெய்வமிராமற் போகிறதா எப்படியுமாயிரம் பொன்னைச் சவதரித்துக் கொண்டு இவளண்டைக்குப் போகாமற் போகிறேனோ வென்று சபதங் கூறிக்கொண்டு தன் வீட்டுக்கு முதலாய் போகாமற் புறப்பட்டு காட்டில் போய் விறகு வெட்டிக் கொண்டு அந்தக்காட்டிலே ஒரு மாமரம் வருஷத்துக் கொரு பழம் பழுக்கும் அந்தப் பழத்தை ஒரு ரிஷி வந்து அறுத்துச் சாப்பிடுவார். அப்படிக் கொத்த மாமரத்தின் கீழேயிந்த விறகுதலையன் மெத்த வெய்யிலானடிபயினாலே வந்து நிழலிலே படுத்துக் கொண் டிருந்தா னப்போது அந்த மரத்தில் பழம் பழுத்திருந்தது. அந்தப் பழத்தைக் கண்டறுத்து வீட்டுக்குப்போகிறபோது சாப்பிடலாமென்று மடியிலே வைத்துக் கொண்டிருந்தான். வெய்யில் தாழ்ந்தவுடனே யெழுந்திருந்து போய்பின்னையும் பிறகு வெட்டிக் கொண்டிருந்தா னன்றைக்கு ரிஷி வந்து மாமரத்தைப் பார்த்து பழமில்லாதது கண்டு வருஷா வருஷந் தப்பாமலிருக்கிற பழமிப்போ தில்லாமற் போவானே னென்றங் ஙனே சுற்றிலும் பார்க்கிற போதிந்த விறகு தலையனப்பாலே விறகு வெட்டுகிற சத்தங்கேட்டு அவனண்டைக்குவந் திந்தமா மரம் வருஷத்துக் கொரு பழம் பழுக்கும் நாம் வந்தந்த பழத்தை யறுத்துச் சாப்பிடுகிறது பின்னையாருந்தீண்டு கிறதில்லை. இப்போதந்தப் பழத்தைக் காணோம் நீயே தாலுங் கண்ட துண்டோ வென்று கேட்க அந்த விறகு தலையனும் இல்லை யென்று சொன்னால் ரிஷிஸ் பரர் சாபமிடப்போகிறா ரென்று பயந்து ஐயா வெய்யிலுக்குப் போய் அந்த மரத்தின் கீழேயிருந் தேன் அந்தப் பழத்தைக் கண்டறுத்துப் பிற்பாடு சாப்பிடலா மென்று மடியில் வைத்துக் கொண்டிருக்கிறேன். இந்தாரு மென்று சொல்லிக் கொடுத்தான்.

அப்போதந்த ரிஷியுஞ் சந்தோஷப்பட்டு பழத்தைச் சாப்பிடாமல் வைத்துக் கொண்டிருந்து நாம் கேட்டவுடனே யில்லை யென்று சொல்லாமல் கொடுத்தானல்லவா இவன் நல்லவன் இவனுக் கொருவரங் கொடுப்பேமென்று அவனை யழைத்து அங்கே நின்ற விருட்சங்காண்பித்து இந்த மரங்கள் உனக்குச் சந்தனமரங்களாகக் கடவது இவைகளை வெட்டிக் கொண்டு போய்விற்றுக்கொள். இந்த மரங்களினாலே உனக்கு வேண்டிய ஐசுவரியம் வரும். மகாராஜனாக இருக்கப் போகிறாயென்று சொல்லிப்போனார். அதன் பிறகு அந்த விறகு தலையனும் அந்தச் சந்தனமரத்தை வெட்டிக் கட்டை கட்டையாகத் தரித்து சுமை கட்டிக்கொண்டு அந்தப் பட்டணத்தி லுண்டானகுடிபடைகள் துராதுரைகள் பதாதிகள் மந்திரி பிரதானி பிராமணர் வர்த்தகர் மற்று முண்டான பேருக்கெல்லாம் வீடு வீடுதப்பாமல் ஒரு கட்டு விறகும் ஒரு சந்தனக் கட்டையுமாகப் போட்டுவருவான். முன்னாலே விறகு விற்று அன்றைக்கன்றைக்கு கூலி வாங்கிக் கொண்டுபோய் வயிறுவளத்துக் கொண்டு திரிகிறவன் முன்பு செய்ததெல்லாம் போய் இப்போது தமிழியும் பெருமாள் நிமித்தியமாகப் பொன் சேரவேண்டுமென்று கூலி வாங்காமல் போவான். ஆராகிலும் விறகு கேட்டாலும் கேளாவிட்டாலும் வலியக் கொண்டுபோய் வாசல்தோறுஞ் சந்தனக் கட்டையும் போட்டு வருவான். ஆராகிலு மழைத்து உனக்குண்டான கூலியை வாங்கிக் கொண்டு போவென்றால் எனக்கு வேண்டிய போது வாங்கிக் கொள்வே னென்று சொல்லிக் கொண்டு திரிந்தான்.

இப்படியிருக்கிற நாளையிலே அந்தப் பட்டணத்திற்கு ப்பெரிய செட்டியார் வீட்டிலேயிருக்கிற வெள்ளாட்டியானவ ளன்றைக்குச் சந்தனக் கட்டையை விறகென்று நினைத்து அடுப்பிலே வைத்து எரியவிடும் போது அந்தப் பட்டண மெங்குஞ் சந்தனவாசனை கமகமவென்று பரிமளித்தது. செட்டியாரும் அதிசயப்பட்டு மளிகையிலிருந்து ஓடிவந்து தனது வீட்டின் மடப்பள்ளி யறைக்குப் போய் அடுப்பிலே யென்னத்தைப்போட்டு எரியவிட்டீர்களென்றுஞ் சந்தன வாசனை வருவானே னென்று கேட்க அதற்கு வெள்ளாட்டி சொன்னது, நான் ஆறென்று மறியேன் ஆரோ வெட்டியான் போலே யிருக்கின்றது அவன் நாள்தோறும் ஒரு சுமை விறகுபோட்டுப் போவான். அவையெல்லாம் ஒரு மூலையிலே யிருக்கின்றன. அவைகளிற் பருங் கட்டையாய் ஒருகட்டையை யெடுத்து விறகென்று நினைத்து அறியாமல் அடுப்பிலே

வைத்தேன் இதுதான் விவரமென்று சொல்லி இதுவுமல்லாமல் அவன் முன்னாலே விறகு கொண்டு வந்து போட்டு அன்றைக்கன்றைக்கு உண்டான கூலியை வாங்கிக் கொண்டு போவான் இப்போது என்னமோ தெரியாது கூலி வாங்காமல் விறகை மாத்திரம் போட்டுவிட்டு சும்மாய் போகின்றான். நாங்களவனை யழைத்து கூலியை வாங்கிக் கொண்டு போவென்றால் எனக்குத் தேவையானபோது வாங்கிக் கொண்டு போகிறேன் உங்களுக்கென்னவென்று சொல்லி யிப்படி கூலிவாங்காமல் ஒரு மாதம் நாற்பது நாளாகச் சும்மாய் போகின்றான். தென்னமோ தெரியாதையாவென்றாள்.

செட்டி யாரந்த விசேஷத்தைக் கேட்டு விறகு விற்று கூலி வாங்கிச் சாப்பிடுகிறவன் கூலிவாங்காமற் சும்மாய் போகிற காரண மென்னமோ தெரியாது புதுமையாயிருக்கிறது. இதனை விசாரித்தறிவேண்டு மப்படியே நாளைக்கு நம்முடைய வீட்டுக்கு விறகு கட்டிக் கொண்டு வந்தால் அவனை நம்மிடத்துக்கு அழைத்துக் கொண்டு வாவென்று சொல்லி அவன் முன் கொண்டு வந்த சந்தனக் கட்டை அம்பாரத்தைப் பார்த்து சந்தோஷப்பட்டு மாளிகையிலே போயிருந்தார். மறுநாள் காலமேவந்து விறகுபோட்டுப் போகிறபோது செட்டியார் வீட்டுத் தாதிகண்டு அந்த விறகு தலையனை யழைத்துக் கொண்டு போய் செட்டியார் முன்பு விட்டாள். செட்டியாரும் விறகுதலையனைப் பார்த்து நீயாரும் பிள்ளாயென்று கேட்டார். அப்பா நான் பரதேசி விறகு விற்கிறவனென்று சொன்னான். விறகு விற்று வயிறு வளர்க்கிற வனானால் கூலி வாங்காமற் சும்மாய் போகிறையாம் அதென்ன சொல்லும் பிள்ளாயென்று கேட்டார். விறகு தலையனும் ஐயா எனக்கொரு காரியமுண்டு அந்த காரியத்தை நீங்கள் செவ்வைப் படுத்திக் கொடுப்பீர் களென்று நம்பி கூலி வாங்காமற் சும்மாய் போகிறேனென் றான். அந்த காரியமென்ன வென்று கேட்டார். விறகு தலையனுஞ் செட்டியாருடனே சொல்ல வெட்கப்பட்டிருந்தான். செட்டி நல்லவரானபடியினாலே இதை நாம் பராமரிக்க வேண்டு மென்று மனதிலெண்ணிக் கொண்டு விறகு தலையனைக் கிட்ட அழைத்து நீ பயப்படாமற் சொல்லும் பிள்ளாய் யென்று கேட்டா ரப்போது விறகுதலையன் சொல்லுவான், ஐயாநான் கடையிலே விறகு சுமையை சாற்றி வைத்துக் கொண்டிருக்கச்சே தமிழறியும் பெருமாள் தோழிமாருந்தானுமாக வெகு ஆடம் பரத்துடனே சோழராஜா வண்டைக்குப் போய்க் கொலு முகங்கண்டு திரும்பிக் கடைத்தெரு வழியாகத் தன்னரண் மனைக்கு போகிறபோது வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந் தேன். அப்போது தமிழறியும் பெருமாள் என்னைப் பார்த்து

இப்படி வேஷங் கொலைந்திருக்கிறவனையும் ஒரு பெண்பிள்ளை யானவள் சேருவாளோ வென்று தோழியைக் கேட்டாள். அதற்குத் தோழியிருந்து அவனுக்கு மொருத்தி யுண்டாயிருப் பாளென்றா ளந்த விசேஷத்தைக் கேட்டுத் தமிழறியும் பெருமா ளென்னைப் பார்த்து காறியுமிழ்ந்தாளது கண்டு நானும் இவளென்னைப் பார்த்துமியவந்த காரணமென்ன நான் ஆண்பிள்ளை எப்படியிருந்தாலென்ன இப்படிக் கொத்த வளையே அநுபவிக்க வேண்டுமென்று நினைத்து பொன்னுக்கு வழியில்லாதபடியினாலே யிந்தவேலை செய்து கொண்டிருக்கி றேனையா வென்றான். செட்டியாரந்த விசேஷத்தைக் கேட்டு குலுங்க குலுங்க நகைத்து இவனிருக்கிற விசேஷமென்ன அவளிருக்கிற போகமென்ன தேசதேசத்து ராஜாக்களெல் லாரும் வந்தடிபட்டு போகிறார்களே இப்படி முடுக்கா யிருக்கிறவளண்டைக்கு இவன் போகிற விதமெப்படி ஆனாலு மென்ன இவனுடைய அதுஷ்டமென்னமோ தெரியாது இதை நாம் ஏன் தடை செய்ய வேண்டுமென்று மனதிலெண்ணிக் கொண்டு நல்லது இங்கேயிரும் பிள்ளாயென்று விறகு தலையனை மளிகையிலே வைத்து செட்டியார் தன் வீட்டுக்குப் போய் முன் போட்டிருந்த சந்தனக்கட்டைகளை எல்லாம் பார்த்து அவைகளை விலை மதிக்கும் போது பதினாயிரம் பொன்னுக்கு அதிகமாகயிருந்த படியினாலே சந்தோஷப்பட்டு விறகுதலையனை யழைப்பித்து இன்னம் எங்கே விறகு போட்டிருக்கிறாயென்று கேட்க வீட்டுக்கு வீடு தப்பாமற் போட்டிருக்கிறே னென்றான். நல்ல தென்று சொல்லி செட்டி யாருமிவன் கையிலே விறகு போடுவித்துக் கொண்டவர்களை யெல்லாம் அழைப்பித்து அவர்களோடு ஆலோசனைப் பண்ணிக் கொண்டிந்த விறகு தலையனை ராசவடிவாக்கி வெகு ஆடம்பரத்துடனே அனுப்பி விக்கவேண்டுமென்று எல்லாரும் பேசிக்கொண்டு நாவிதனை யழைப்பித்து விறகு தலையனுக்குப் பணிசெய்து சம்பங்கி எண்ணையிட்டுத் தலை முழுகப்படுத்திக் கடுக்கண் மோதிரஞ் சரப்பணி வெள்ளி அரைநான் மற்று முண்டான ஆபரணங் களும் பூட்டி பச்சை வடந்தோவத் திகட்டி பாகை சாலுவை அங்கி நி சாறு நடுகட்டு இவை களெல்லாந் தரிப்பித்து திவ்விய மான போசனமமைத்து கஸ்தூரி பரிமளாதிகளு மணியப் பண்ணி பாக்கு வெற்றி லையும் கொடுத்து எக்காளமேளம் பேரிகை பூரிகை பதினெட்டு வகைமேள வாத்தியங்கள் முழங்கும்படி செய்வித்து விறகு தலையனை மன்மத வடிவாக்கி பச்சைப் பல்லக்கிலே வைத்து ஆயிரம் பொன் முடிப்புக்கட்டி தண்டிகையில் வைத்து மேளதாள முழங்க ரதகெச துரகபதாதிகள் புடைசூழ சிறிது பெண்கள் முன்னே ஆடிக் கொண்டுவர அடப்பக் காரன்

வெற்றிலைச்சுருள் மடித்துக் கொடுத்துவர இப்படியாக வெகு ஆடம்பர அலங்காரமாக்கி வித்துப் பட்டணத்துப் பெரிய செட்டியாரும் மற்று முண்டான பேரும் இவனைப் பயணம் பண்ணி ஓகோ ராஜாவே தமிழறியும் பெருமாளிடத்திற்குப் போய் வாருமென்று அனுப்பிவித்தார்.

அப்போது விறகுதலையனான இராஜாவுந் தமிழறியும் பெருமாளிடத்தில் போகிறபோது மேளவாத்தியத்தொனி பட்டணமெல்லாம் அதிர்ந்துபோகத் தக்கதாக முழக்கி வித்தான். அதுகண்டு இதே தோ தெரியாது எப்போதையும் போலே யிருக்கவில்லை. இன்றைக்கு மேளவாத்தியம் வெகு வாயடிபட்டு வருகிறது இவன் எந்த தேசத்து ராஜாவோ தெரியாது என்று ஆச்சரியப்பட்டு தமிழறியும் பெருமாளுந் தோழிமாரும் உப்பரிகையின்மேலேறிச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து தாதிகள் மொண்ணச்சிகள் கற்றுச் சொல்லிப் பெண்கள் இவர்களை அழைத்து என்ன சொன்னாளென்றால், அந்த இராஜா நம்முடைய தலைவாசலிலே வந்திறங்கி விசுவாசங்கொடுத்தால் வாங்கி வாருங்களென்று சொல்லி தானுந் தோழிமாருமாக உப்பரிகை விட்டிறங்கித் தானிருக்கு மிடமே போய்ச் சேர்ந்தார்கள். அதன்பிறகு விறகுதலையனான இராஜாவும் ஜெயஜெயவென்று வெகு ஆடம்பரத்துடனே தமிழறியும் பெருமாளுடைய அரண்மனைவாசலிலே வந்திறங் கினான். சிறிது நேரஞ் சென்ற பிற்பாடு தன்னோடு கூடவந்தவர் களையெல்லாம் அனுப்பிவிட்டுத் தானும் அடப்பக்காரனு மாக இருந்தான். அதுகண்டு மொண்ணச்சிகள் கற்றுச் சொல்லிகள் வந்து இராஜாவே நீர் எந்த தேச மென்றார்கள். அதற்கு விறகுதலையனும் நாம் இராஜாவல்லவே இவர் களுடனே நமக்கு நன்றாய்ப் பேசவராதே நாம் பேசினால் மோசம் வரப்போகிரதென்று பேசாமல் மவுனமாயிருந்தான். அதுகண்டு இதென்னமோ இவன் வாயைத் திறவாமலிருக்கி றானென்று பின்னையுமிவனைப் பார்த்து பழமொழியோ புதுமொழியோ வென்றார்கள். அதற்குச் சும்மாயிருந்தான். பின்னையும் நீர் என்ன நிறைகுடமோ குறைகுடமோ வென்றார்க ளதற்குஞ் சும்மாயிருந்தான். பின்னையும் ஊமையோ செவிடோ வென்றார்கள் அதற்குஞ் சும்மாவிருந்தான்.

இந்த நான்கு விசேஷத்துக்குஞ் சும்மாவிருந்தபடியினாலே மொண்ணச்சிக ளெண்ணிக் கொண்டது. இவர் பேசாம லிருக்கிறதெல்லா முதலாளியாயிருக்கிற தமிழறியும் பெரு மாளுடன் பேசிக்கொள்வோம் இவர்களுடனே நமக் கென்ன பேச்சு இருக்கிற தென்று எண்ணிக்கொண்டிருக்கிறாரென்று

நிச்சயித்துக் கொண்டார்கள் இவன் பேச வகையறியாம லிருக்கிறது அறியாமல் அவளுடனே பேசிக் கொள்வோ மென்றிருக்கிறாரென்று நினைத்து சும்மா இருந்தார்கள். பின்னையுஞ் சற்று நேரத்துக்குப் பிறகு இராஜாவே நீர் எங்களுடனே பேசாவிட்டாற்றானே போச்சுது இப்போதிங்கே யாருக்கு விசுவாசங்கொண்டு வந்தீரென்றார்களதற்கு விறகு தலையன் வாயைத்திறந்து நாச்சியாருக்குக் கொண்டுவந்தேன் அவளுக்குப் பரியமென்னவென்று கேட்டான். ஆயிரம்பொன் பரியமென்று சொன்னார்கள். நல்லதென்று தண்டிகையி லிருந்து ஆயிரம்பொன் முடிப்பை யெடுத்துக் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்டுவந்து தமிழறியும் பெருமாள் முன்னே வைத்து தாங்கள் நான்கு வசனங்கேட்டதும் அதற்கொன்றுஞ் சொல்லாமல் மவுனமாயிருந்ததும் பிறகு கேட்ட வசனத்துக்கு பொன்கொடுத்ததுஞ் சொன்னார்கள். அதுகேட்டு இவன் மூடனென்றறிந்து தாதிகளை யழைத்து பொன்னை யெடுத்துக் கொண்டுபோய் பணநோட்டம் பார்கிற பெண்கையிற் கொடுத்துப் பார்வையிடுவித்துக் கொண்டு பொன்னைப் பொக்கிஷப் பொட்டியிற் பிரவேசம் பண்ணிவித்து அந்த இராஜாவைத் தெருத்திண்ணையிலிருக்கச் சொல்லி வைத்து வாருங் களென்று சொல்லியனுப்பினாள். அப்படியே தாதிகள் பொன்னைப் பார்வையிடுவித்து பொக்கிஷப் பெட்டியிற் சேர்த்து இராஜாவை தெருத்திண்ணையிலிருக்கச் சொல்லிப் போனார்கள். சிறிது நேரஞ் சென்ற பிறகு அந்த இராஜாவைக் கூத்துப் பார்க்கிற மண்டபத்துக்கு அழைத்துவரச் சொல்லி யனுப்பினாள்.

அப்படியே அழைத்து வருகிறபோது, விறகுதலையனான இராஜாவும் இரண்டாங் கட்டுகடந்து இப்பால்வரச்ச அங்கேயிருக்கிற சித்திரங்களையும் மொண்ணச்சிகளையும் கண்டு மோகித்து திகைத்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். அதிலே பொழுதுவிடிந்து பின்னையும் அப்பாலே போகிறபோது, தாதிகளோடிவந்து அடமூடா மோசம் போனாயே பொழுது விடிந்து போயிற்றே. இனி உனக்கு அப்புறம் போகச் செலவில்லையென்று கழுத்துப்பிடரி யிலே குத்தி பழமுறத்தாலே யடித்துத் தள்ளி ஓட்டிவிட்டார்கள். அந்த அடியைப் பட்டுக்கொண்டுபோய் விறகுதலையனும் என் கையிலே ஆயிரம் பொன்னை வாங்கிக் கொண்டு சும்மா அடித்து ஓட்டிவிட்டார்களென்று தெருவிலே போய்க் கூவினான் அதுகேட்டுமொண்ணச்சிகள் இதேதோ தெரியாது இன்றைய வரையிலே யிப்படி கூவின பேரில்லை இவனாரோ தெரியாதென்று அவனைத் திரும்பவு மழைத்து நீ கூவுகிற

தென்ன வென்று கேட்டார்கள். அதற்கு விறகு தலையன் சொல்லுவான், என் கையிலே பொன்னை வாங்கிக் கொண்டால் எனக்கு ஒப்புசொல்லத் தேவையில்லையோ சும்மா அடித்து ஓட்டிவிட்டால் நான் கூவாமலென்ன செய்வேனென்றான். அதற்கு மொண்ணச்சிகள் சொன்னது உன்கையிலே பொன் வாங்கிக்கொண்டால் ஒப்புசொல் வேண்டியது உள்ளதுதான் ஆனாலென்ன மாச்சுது நானொரு கவி சொல்லுகிறேன் அதற்குப் பயன் சொன்னால் அப்படி யேயாகிறதென்று மொண்ணச்சிகளிலொருத்தி ஒரு கவி சொன்னாள். அந்தக் கவியைக்கேட்டு ஒன்றுந் தெரியாமற் பேய் போலே விழித்துக் கொண்டிருந்தான். அதுகண்டு முன்னே அடித்தது பொய் இப்போதடிக்கிறது மெய்யென்று பழமுறத்தா லேயும் பழந்துடப்பத்தாலேயுமடித்து கழுதையின்மே லேற வைத்து கோலங்காட்டி ஓடடிவிட்டார்கள்.

அந்த அடியைப் பட்டுக் கொண்டு விறகு தலையனும் பட்டணத்திலேபோய் தமிழறியும் பெருமாள் கையிலே முன்னாலடிப்பட்டுத் தங்கள் தேசத்துக்குப் போக வெட்கப் பட்டிருக்கிறார்களே அந்த ராஜாக்களுடனே சொல்லி முறை யிட்டான் அதற்கவர்கள் சொன்னார்கள், நாங்களு மப்படித்தான் அவமானப்பட்டிருக்கிறோம். எங்களுடனே சொல்லி முறையிட்டால் ஆகவேண்டியது என்ன இருக்கிறது அவளுக்கு ஆயிரம் பொன்னல்ல பதினாயிரம் பொன்கொடுத் தாலும் ஒன்றுமில்லை. அவளுடனே கவிசொல்லி பிரதி உத்தாரங் கொடுத்து அவளைச் செயித்தாற் காரியமாம். இங்கே அம்மாத்திரம் கவிப்பிரசங்கம் பண்ணி அவளைச் செயிக்கத் தக்கன ஆண்பிள்ளையிந்த சீமையிலே யில்லை அவளுக்கொரு வரு மெதிரியில்லை ஆனபடியினாலே மதுரையிலே பாண்டிய ராஜாவினிடத்திலே பிரசண்ட வித்து வாம்ஸராகிய சங்கத்தார் சங்கப் பலகையின்பேரிலே நாற்பத் தொன்பது பேரிருக் கிறார்களவர்களே கல்விக்குரியவர்களல்லாமல் அவர்களுக்கு மிஞ்சினவர்கள் ஒருவருமில்லையென்று சொல்லிக் கொண்டி ருக்கிறார்களிங்கே யிவளிப்படி பேரிட்டுக் கொண்டிருக் கிறதை யறியார்கள். நீயுஞ் சமர்த்தனானால் அவர்களிடத்திற்குப் போய் முறையிட்டுக் கொண்டாயே யாமாகிலப்போது அவர்கள் வந்து இவளைக்கறவ பங்கம் பண்ணினால் பண்ணலாமே யல்லாமல் இல்லாவிட்டால் இங்கே யாரும் எதிரியல்லை. நீபோகிற தானாற் சீக்கிரமாகப் புறப்பட்டு மதுரைக்குப் போம்பிள்ளாயென்றார்கள். விறகு தலையனு மந்தவிசேஷத்தைக் கேட்டு நப்பன் பொன் தேடப்பட்ட அருமை யெனக்குத்

தெரியும் அப்படித்தேடின பொன்னைக் கொடுத்து சும்மாப் போவேனோவென்று வெகுகோபத்துடனே புறப்பட்டு மதுரைக்குப்போனான்.

போன விடத்திலே சங்கத்தாருக்குப் பாற் குடங்கள் கொண்டு போனார்கள். விறகுதலையன் ஒரு சுக்கு மாந் தடியை யெடுத்து கையிலே பிடித்துக்கொண்டு குறுக்கேபோய் நீங்க ளாரடா பாற்குடமேதடா ஆருக்குக் கொண்டு போகிறீர் களடாவென்று அதை மறித்தான். அதற்கு இடையர் சொன்னது சங்கத் தாருக்குப் பாற்கொண்டு போகிறோமென்றார்கள். அது கேட்டு விறகு தலையனும் சங்கத்தாரேது பால்கொண்டு போகிறதேது என்று பாற்குடங்களை தழைத்துப் போட்டான். அப்போது இடையர் பிரமித்து நின்று இவனாரோ தெரியாது சங்கத் தாருக்கு தடையியில்லையே பாண்டியராஜா முதற் கொண்டு எதிர்வார்த்தை சொல்லக்கூடாதே அப்படிக்கொத்த சங்கத்தாரைச் சட்டை பண்ணாமல் அவர்களுக்கு போகிற பாற் குடத்தைத் தழைஞ்சானென்று பயத்து ஒருவன் ஓட்ட மாக வோடிவந்து சங்கத்தாரைக் கண்டு சுவாமி தெரியாது ஒருவன் வந்து தேவரீர்களுக்குக் கொண்டு வருகிற பாற் குடங் களைத் தடுத்துப் போட்டா னென்று சொல்ல. சங்கத்தாருமந்த விசேஷத்தைக்கேட்டு பிரமித்து நமக்குந் தடையுண்டோ வென்று மவனெப்படிக் கொத்தவனென்று சொல்லி இரண்டொருத்த ரெழுந்து வெளியிலே வந்து விறகு தலை யனைக் கண்டு நீயாரடா எங்களுக்கு வருகிற பாற்குடங்களைத் தடுத்த காரணமென்ன வென்றார்கள். அதற்கு விறகு தலையன் சொன்னது உங்களுக்குச் சங்கத்தாரென்கிற பேரென்ன சங்கப் பலகையென்ன வித்தையாண்மை யென்ன நீங்களெம்மாத்திர மென்று தடுத்தேனென்றான். அது கேட்டு சங்கத்தாரும் இந்த விசேஷம் எதினாலே சொன்னால் அதனைத் தெரியச் சொல்ல வேண்டுமென்றார்க ளதற்கு விறகு தலையன் சொன்னது உறையூரிலே சோழராஜன் வீட்டு வெள்ளாட்டிப் பெண் தமிழுக் குடையவள் தானேயல்லாமல் தனக்கொருவரும் நிகரில்லை யென்று வேறே அரண்மனை கட்டிக் கொண்டு வெகு ஆடம்பரமாகத் தன் வாசலிலே டால்கட்டி வைத்து தமிழறியும் பெருமாளென்று பேரிட்டுக் கொண்டு எந்த தேசத்து மண்டலாதிபர் வந்தாலும் அவர்கள் கையிலே முந்தி ஆயிரம் பொன் வாங்கிக்கொண்டு வந்தவர்களுக்கு ஒரு கவியைச் சொல்லி அந்த கவிக்குப் பொருள் தெரியா விட்டாலவர்களை அவமரியாதை செய்து ஓட்டிவிட்டு கன்னிகழியாமற் றேடியுண்டு இப்படியாக பேர் பெற்ற ஓர்

பெண்பிள்ளை யிருக்கச்சே உங்களுக்குச் சங்கத்தாரென்கிற பேரேதையாவென்றான். அது கேட்டுச் சங்கத்தாரும் மகா நன்றாயிருக்கின்றது. நாங்களே தமிழுக்குரியவர்கள் எங்களுக் காரும் எதிரிகளில்லையென்று நாங்களிருக்கச்சே ஒரு பெண் பிள்ளையிப்படி பேரிட்டுக் கொண்டிருக்கிறாளென்றால் இதென்ன ஆச்சரியமா யிருக்கின்றது. ஆயினும் இன்றைய வரைக்கும் ஒருத்தராவது வந்து இவ்விதமாகச் சொன்னது மில்லை முறையிட்டதுமில்லை நாங்கள் கேள்விப்பட்டது மில்லை. இப்போது நீ முறையிட்ட காரியமேது உனக்கே தாகிலும் மனதிலே குற்றவுண்டோ வென்று கேட்டார்கள். அதற்கு விறகு தலையன் சொல்லுகின்றது தான் கடையிலேயிருந் ததும் தமிழறியும் பெருமாள் தனைப் பார்த்து காரியுமிழ்ந்ததும் அதற்காக விறகுஞ் சந்தனக் கட்டையும் போட்டதுவும் பட்டணத்துச் செட்டியார் தன்னை இராசவடிவாக்கி ஆயிரம் பொன்கொடுத்து வெகு ஆடம்பரத்துடனே அனுப்பிவித்தது மந்த ஆயிரம் பொன்னும் வாங்கிக்கொண்டு ஒருகவியைச் சொல்லி அடித்து ஓட்டிவிட்டதும் அதை விஸ்தாரமாகச் சொல்லி இதனிமித்தியார்த்தம் உங்களிடத்துக்கு வந்து விண்ணப்பம் பண்ணிக் கொண்டேன் சுவாமீ யென்றான். அதுகேட்டு சங்கத்தாரும் நல்லது இவன் பேச்சை நம்பப் போகாதென்று மனதிலெண்ணிக் கொண்டு இது மெய்யோ பொய்யோ விவரமாக யறியவேண்டுமென்று இந்த விறகு தலையனைத்தங்களிடத்திலே வைத்துக் கொண்டு பின்னை யொரு மூடனையழைத்து அவன் கையிலே ஆயிரம் பொன் முடிப்புக் கட்டிக் கொடுத்து ஒரு கவியு மெழுதிக் கொடுத்த விவரம். வெண்பா,

மின்னே ரிடையாய் விலைபேசி வாங்குமது
பொன்னா யிரமுண்டே போதாதோ – எந்நாளுஞ்
சற்றென் றிராதே சதிராக வாங்கியது
பொற்றொடிக்குப் போதும் புகழ்

இந்த கவியுமெழுதிக் கொடுத்து இதற்கென்ன சொல்லி யனுப்புகிறாளோ பார்த்துக் கொள்ளுவோ மென்று மூடனைப் பிராயணப்படுத்தி உறையூருக்குப் போய்த் தமிழறியும் பெருமாளைக் கண்டு வரச்சொல்லி யனுப்பினார்கள். அப்படி யேயவன் உறையூருக்குப் போய்த் தமிழறியும் பெருமாள் அரண்மனை வாசலிலே நின்றான். அப்போது மொண்ணச்சிகள் கண்டு எங்கேயிருந்து வந்தாயென்று கேட்க மதுரையிலிருந்து

சங்கத்தார் அனுப்பிவிக்க வந்தேனென்றான். என்ன கொண்டு வந்தாயென்றார்கள். ஆயிரம் பொன்னும் ஒரு கவியுங் கொண்டு வந்தேனென்றான். அந்தப் பொன்னையுங் கவியையும் வாங்கிக் கொண்டுபோய்த் தமிழறியும் பெருமாள் முன்வைத்து ஆரோ ஒருவன் மதுரையிலே சங்கத்தார் கொடுத் தனுப்பினார் களென்று கொண்டு வந்து கொடுத்தானென்று சொன்னார்கள். அது கேட்டுத் தமிழறியும் பெருமாளும் நல்ல தென்று அந்தக் கவியைப் பார்த்து வாசித்து கொண்டு இந்தக் கவியிலே நம்மைச் சபித்து எழுதியனுப்பி னார்களென்று வெகு கோபத் துடனே அந்தக் கவிக்கு மறுகவி யெழுதின விவரம் வெண்பா.

ஆடை பருத்தி தருமாகிலங் கொருத்தி
கோடிபருத்தி கொண்டென் செய்வாள் – மூடர்
கவித்திறமை யுண்டாகிற் கற்றநூற் கொண்டு
சவிப்பாரோ சங்கத் தவர்

என்று இந்தக் கவியுமெழுதிக் கொடுத்து பொன்னையுங் கொடுத்து அனுப்பிவிட்டாள். அவனும் மதுரையிலேவந்து சங்கத்தாரைக் கண்டு பொன்னையுங் கவியையும் அவர்கள் முன்னே வைத்தான். சங்கத்தாரும் அந்தக் கவியைப் பார்த்து - ஆ! ஆ! வெள்ளாட்டி தன்னைச் சொல்லிக் கொள்ளுவது விட்டு நம்மை யெல்லாரையும் மூடரென்று கவியெழுதி யனுப்பினாள். அவளண்டைக்குப்போய் கவிப்பிரசங்கம் பண்ணித் தோற்கச் செய்து அவளரண்மனையையு மிடிப்பித்துத் தமிழறியும் பெருமாளென்கிற பெயரை மாற்றிபோட்டுவர வேண்டுமென்று வெகு கோபத்துடனே சங்கத்தார் நாற்பத்தொன்பது பேரு மெழுந்திருந்தார்கள். அப்போது நற்கீரர் ஒரு வசனஞ் சொல்லுகிறார், வாருங்கள் சங்கத்தாரே நாமெல்லோரும் போய்க் கவிபிரசங்கம் பண்ணிவென்று வருகிறது நன்மையல்ல. பார்த்த பேருக்கு நன்றாயிராது. ஒரு பெண் பிள்ளை நிமித்தி யார்த்தம் நாற்பத்தொன்பது பேர் போய் வென்றுவந்தார்களா மென்றால் எவ்வளவு ஈனத்துவம் அதனால் யாதொருபிர யோசனமில்லை. நீங்களெல்லாரும் இவ்விடத்திலேதானே யிருங்கள். நான்ஒருவனுமேபோய் அவளுடனே பிரதிவாதித்து அவளை தோற்கச் செய்து தமிழறியும் பெருமாளென்கிற பேரையுமாற்றுவித்து இந்த விறகு தலையனுக்குத்தானே அவளைக் கலியாணம் பண்ணி வைத்து வருகிறேனென்றார். அதிலே சிறிது பேர் தமிழறிவாள் என்கிறபேர் பெற்றிருக் கிறதும் அவள் ஔவையார் வரப்பிரசாதி ஆராலேயுஞ் செயிக்கக் கூடாமலிருக்கிறவளென்றுங் கற்று விசேஷமாய்க்

கேள்விப்பட்டிருப்போம். ஆனால் அது ஏதோ எவ்விடமோ வென்று அசட்டையாக இருந்தோம். அது மெய்யாக விளைந்திருக்கிறது. அப்படியவள் ஔவையார் கையிலே வரம்பெற்று ஆராலேயுமழிக்கப்படா மலிருக்கிறவளை நீர்போய் எப்படி செயித்து வருவீரென்று கேட்டார்கள். அதற்கு நற்கீரர் சொன்னது, நான் போய்அவளைச்செயித்து வராமற் போனால் இன்னபடியென்று பிரதிக்கினை பண்ணிக் கொண்ட வெண்பா,

> சென்றுறையூர் புக்கிச் சேயிழையை யான்கண்டு
> வென்று தமிழறிந்து மீளேனேல் – மண்ணில்
> விருந்திருக் கவுண்ட வெறுவலியோ டொப்பேன்
> வருந்துவரோ சங்கத் தவர்

என்று சொல்லக்கேட்டுச் சங்கத்தாரனைவருஞ் செவிகளைப் புதைத்துக்கொண்டு சிவசிவா வென்று சொல்லி பின்பு நல்லது அப்படியே போய்வாருமென்று அனுப்பினார்கள். அப்போது நற்கீரரும் விறகு தலையனை யழைத்துக் கொண்டு மதுரையை விட்டுப் புறப்பட்டு உறையூருக்கு வருகிறபோது நடுவே காடாயிருந்தது. அந்தக் காட்டின் வழியாகவரச்சே ஒரு வடதாரிமரத்தின் பேரிலே வள்ளிக் கொடி படர்ந்திருந்தது. அதையொரு வேடன் கண்டுமேலே யிருக்கிற சிக்குச் சிறகெல்லாம் அறுத்துப் போட்டு கட்டப்பாறையினாலே வள்ளிக்கிழங்கைப் பெயர்த்துக் கொண்டிருந்தான். அதை நற்கீரர் கண்டு ஒரு கவியாகப் பிணைத்துக் கொண்டு அவனுடனே தர்க்கம் பண்ணி தீராத விதத்திற்கு இதை யவளுக்குத் தெரியாமற் கண்ட சுத்திபாடி தோற்கச் செய்வோ மென்று மனதிலெண்ணிக்கொண்டுஅப்பாலே போகிறபோது விறகு தலையனை யழைத்துவாரும் பிள்ளாய்தம்பி அவள் இருக்கிற அரண்மனையின் கட்டுக்காவலென்ன அங்கே என்னென்ன அதிசயங்களுண்டோ அவைகளையெல்லாம் விவரமாய் எனக்குத் தெரியச் சொல்லுமென்று கேட்டார். அதற்கு விறகு தலையன் சொல்லுவான் ஐயா அவளிருக்கிற அரண்மனைக்கு வாசல் மொண்ணச்சிகள் சுற்றுச் சொல்லிகள் சூஸ்திரப்பதுமைகள் யானைகள் புலிகள் கரடிகள் குரங்குகள் வேட்டை நாய்கள் கிணறு குங்குமச்சேறு சித்திர மண்டபம் கச்சேரி மண்டபத்திற் களிற்றியாணைத் தந்த கட்டிலும் பெண்ணானைத் தந்தக்கட்டிலும் போட்டிருக்குதாம். பின்னையும் என்னென்னமோ இருக்கிறதென்பார்கள் எனக்குச் சொல்லத்தெரியாது. அங்கே இப்படிக்கொத்த விணோதங்க

ளெல்லாமிருக்கின்றன ஐயா வென்றான். அதுகேட்டு நற்கீரர் இன்னமும் விநோதங்களிருக்கலாமென்று நினைத்துக்கொண்டு விறகு தலையனை யழைத்து (எண்ணெய்ச்சீலை மூங்கிலக்கினி செம்பருத்திப்பூ மல்லிகைப்பூ காந்தக்கல் கட்டெறும்பு அலவன் வாழைத்தண்டு கருப்பங்கறனை எலுமிச்சம் பழம்) இவைகளை யெல்லாஞ் சவதரித்துக்கொண்டுவாவென்று அனுப்பினார். அப்படியேபோய் அவைகளை யனைத்தையுஞ் சவதரித்துக் கொண்டு வந்தான். அதற்குப் பிறகு இருவரும் புறப்பட்டுத் திருச்சிராப் பள்ளிக்குவந்து மேற்கு முகமாகத் திரும்பிப் பார்த்தார். உறையூர் பட்டிணத்திலே தமிழறியும் பெருமாளிருக்கிற உப்பரி கையின் மீதிலே செய்து வைத் திருக்கிற பொற்குடந் தோன்றிற்று. அதைக்கண்டு நற்கீரரும் விறகு தலையனை யழைத்து அதோ பொற்குடந் தெரிகிறதே அது எந்தவூர் எந்த கோபுரமென்று கேட்டார். அது அந்த வெள்ளாட்டியிருக்கிற அரண்மனைக்குள்ளே உப்பரிகையின் பேரி லிருக்கிற பொற்குட மையா வென்றான். அதுகேட்டு நற்கீரர் பிறகுதம்முடைய மனதிற் பிராக்கனை பண்ணிக் கொண்ட வெண்பா

> **இதுவோ சிராப்பள்ளி யீதோ வுறையூர்**
> **இதுவோ தமிழறிவா ளெல்லை – யிதுவோ**
> **இறைவளர்க்குஞ் சங்க மிவளழிப்ப தென்னோ**
> **குறைவுறத்தான் வெல்வேன் குறித்து**

என்று பிரதிக்கினை பண்ணிக்கொண்டு அப்பால் உறையூர் பட்டணத்திற்போய்ச் சேர்ந்தார்கள். அப்போது சாயுங்கால வேளையாச்சுது. அதன்பிறகு நற்கீரறே வரும் விறகு தலையனை ஓரிடத்திலே வைத்து தமது பச்சை வடந்தோவத்தி பாகை கடுக்கன் மோதிரம் மற்றுமுள்ள ஆபரணங்களை யெல்லாம் விறகு தலையன் வசம் பண்ணி அவனையங்கே யிருக்கச் சொல்லி யவன்கட்டியிருந்த கரித்துணியை வாங்கித் தலை யிலும் அரையிலுங் கட்டிக் கொண்டு இரண்டு கொடிகளைப் பிடுங்கி யிடுப்பிலே சுற்றிக்கொண்டு அதிலே ஒரு அரிவாளையுஞ் சொருகிக் கொண்டு இவ்விதமாக விறகுதலையன் வேஷம் பூண்டு அந்த மாற்றெல்லாம் மடியிலே யடக்கமாய் வைத்துக் கொண்டு வாழைத்தண்டைச் சுமையாகக் கட்டித் தலைமேலே வைத்துக் கொண்டு தமிழறியும் பெருமாளிருக்கிற அரண் மனையை நோக்கி வருகிறபோது சூரியன் அஸ்தமிக்கிற சமையமாச்சுது. அந்த வேளையிலே நற்கீரதே வரும் வாழைத் தண்டை விறகாகக் கட்டிக்கொண்டு முகசிரலையிற் போனார்.

முதற்கட்டுவாசலிலே கற்றுச்சொல்லும் பெண்களிருக்கிறதைக் கண்டு விறகுவிலை கூறின, வெண்பா,

வெய்யோன் கதிரெறிப்ப வேற்கண்ணாள் பின்றொடர
பைய வருவேன் பயனறியேன் – துய்யமலர்த்
தடங்கண் வாயந்த மயிலனையீர் கொள்ளீர்
விலைக்கு விறகோ விறகு

என்று கூறின சேதியைக் கற்றுச் சொல்லிப் பெண்கள் கேட்டு பிறகு நம்முடைய நாச்சியாருக்கு எதிராளி யாறொருவன் வந்து கவிசொன்ன துமில்ல - அந்தக்கவியைக் கற்றுக் கொண்டு போய் நாம் அவனுக்கு நம்முடைய நாச்சியார் கவியைச் சொல்லி பொருளறியாதபோது அடித்து ஒட்டிவிடுகிற தல்லவோ இது ஏதோ தெரியாது ஆச்சரியமாயிருக்கிறதென்று நினைத்து இந்தக் கவியைக் கற்றுக்கொண்டு போய்த் தமிழறியும் பெருமாளுடனே ஆரோ ஒருவன் வாழைத் தண்டைக் கட்டித் தனலமேலே வைத்துக் கொண்டு விற கென்று விலை கூறிக் கொண்டு இந்த கவியைச் சொல்லி னானென்று சொன்னார்கள். அது கேட்டுத் தமிழறியும் பெருமாள் மறுகவி சொல்லியனுப்பின வெண்பா,

உள்ளீரம் பச்சை புகையு மெரியாது
கொள்ளீர் விறகென்று கூறினீர் – மெள்ள
விளகரோ போம் போம் போம்
வீணரோநீருந் தரகரோசங்கத் தவர்

என்று சொல்ல, இந்தக் கவியைக் கற்றுச் சொல்லிப் பெண்கள் கற்றுக்கொண்டுபோய் விறகு தலையனுக்கு சொன்னார்கள். அதைக்கேட்டு விறகுதலையனான நற்கீரர் இரண்டாங் கட்டுக்குள்ளே போய்ச் சொல்லின வெண்பா.

சால வுலர்ந்துண்டு சாலகத்தி னாற்புகைபோம்
நீலவிழி மாதர்க்கு நின்றெரியுங் – கோலக்
கலைக்குவிலை யல்குற் கனங்குழலீர் கொள்ளீர்
விலைக்கு விறகோ விறகு

இந்தக் கவியைக் கற்றுக் கொண்டு போய்த் தமிழறியும் பெருமாளுடனே சொன்னார்கள். அதைக் கேட்டு அவள் இவனைக் கொண்டாடிக்கொண்டு இவன் நல்ல வித்து வானுமாய் நல்ல இலட்சணமறிந்தவனுமா யிருக்கிறான் கவி வெகு நேத்தியாயிருக்கின்றது. இதை நாம் இரங்கடிக்கப் போகாது இன்றுவரைக்குங் கன்னிகழியாமற்றேடியுண்டு கீர்த்தி

படைத்திருந்தோம், இப்போது இவன் என்ன காரணமாய் வந்தானோ தெரியாது - இவன் நம்மைச் சோதிக்க வந்தவனாகக் காண்கின்றது. ஆனாலென்ன இவனுடைய சமர்த்தெல்லாம் பார்ப்போம் இந்தக் கட்டுகளெல்லாங் கடக்கச்சேயிடை நடுவில் மோசம் போகாமல் வந்து நம்முடனே கவிப்பிரசங்கம் பண்ணி நம்மிலும் வல்லவனாக இருந்தால் அப்படிக் கொத்த வனைக் கூடினாற்றானென்ன - தோஷமில்லையென்றெண்ணிக் கொண்டு மறுமொழி சொல்லி யனுப்பின வெண்பா,

பால்பாய் வெட்டிப் பசுமையுலர்ந் ததேர்
கால்பட்டுவீழ்ந் துதைந்து கட்டினையோ – சாலப்
புகையுமோ வுண்மைப் புகழ்ந்துரையாய் நீயும்
வகையாக வாசலிலே வந்து

இந்தக் கவியைக் கொண்டுபோய் விறகு தலையனுக்குச் சொல்ல விறுகுதலையன் மூன்றாங் கட்டுக்குள்ளே போய்ச் சொன்ன வெண்பா,

ஈரமுலர்ந்தே எலும்பு போலே காய்ந்து
சால வெரியுமிது தையாலே – மாலை
யிரவு வருமுன்னே யிகழா மலிந்த
விறகதனைக் கொள்க விரைந்து.

இந்தக் கவியைக் கற்றுக் கொண்டுபோய்த் தமிழறியும் பெருமாளுடனே சொல்ல அப்போது தமிழறியும் பெருமாள் சொன்ன வெண்பா,

விறகோ விறகென்று மேன்மேலுங் கூறும்
விறகு விற்பான்றன்ன குருமேவி – விறகு
விலைகேட்டு வாருமென்று மெல்லியலாள் கேட்டாள்
கலையாய் தமிழறிவாள் காண்.

அந்தக் கவியைக் கற்றுக் கொண்டுபோய் விறகு தலை யனுக்குச் சொல்ல அதுகேட்டு விறகுதலையனான நற்கீரர் நான்காம் வாசற்கடந்து ஐந்தாம் வாசலிலே சொன்ன, வெண்பா,

கட்டு விறகுவிலை கன்னியரே கூறக்கேள்
வெட்டு விறகுதனை வீரனா – ரிட்ட
நறைவார் குழன்மடவீர் நான்கொண்டு வந்த
விறகாயிரம் பொன் விலை.

என்று சொல்லி ஐந்தாம் வாசற்கடந்து ஆறாம் வாசலுக்கு வர இந்தக் கவியைக் கற்றுச் சொல்லிகள் போய் தமிழறியும் பெருமாளுக்குச் சொல்ல இவன் நல்ல வித்துவானே சரியென்று பின்னையுஞ் சொல்வாள் வெண்பா,

பச்சை முழுது மெரியாது பாரிடத்தில்
இச்சையிது வன்றோ வியம்பக்கேள் – நிச்சயமாய்
உள்ளவிலை சொல்லுகென வோதத் தெரிந்து வந்து
கிள்ளைக்காள் சொல்லீர் கிளந்து

இந்தக் கவியைக் கற்றுச்சொல்லிகள் விறகுதலையனுக்குச் சொல்ல விறகுதலையனும் ஏழாம்வாசலில் வந்து சொன்ன வெண்பா,

ஐந்நூறிரட்டிப் பொன்னப் புரமுஞ்சோ றுகரி
யென்னூர் விறகுவிலை யிப்படியே – முன்னேநான்
சொன்னபடியெ யொழியச் சொல்லறியாப் பேதைகாள்
சின்னூலிடை யாட்குச் செப்பு.

இந்தக்கவியைக் கற்றுச் சொல்லிகள் போய்த் தமிழறியும் பெருமாளுக்குச் சொல்ல அது கேட்டுத் தமிழறியும் பெருமாளும் விசாரப்பட்டு வருகிறதெல்லாம் வரட்டும் பார்ப்போமென்று கற்றுச்சொல்லிகள் கையிலே ஆயிரம் பொன்னும் நாழி அரிசியும் முளகுமுளகாய் புளிகாய் கறி முதலான வைகளைக் கொடுத்து இவைகளைக் கொண்டுபோய் விறகு தலையன் கையிலே கொடுத்து அவன் போடுகிற விறகைப் போடுவித்துக் கொண்டு அவனை யனுப்பிவிடுங்க ளென்று சொல்ல அப்படியே கற்றுச்சொல்லிப் பெண்கள் வந்து அந்த ஆயிரம் பொன்னையும் அரிசி முதலானவை களையுங் கொடுத்து விறகு போடென்றார்கள். அப்படியே வாங்கிக் கொண்டு அவர்கள் சொன்னபடியே யெட்டாம் வாசலிலே போட்டு அங்கே யிருந்துகொண்டு கற்றுச்சொல்லிப் பெண்களை யழைத்துத் திருப்பவும் அந்தப் பொன்னையும் அரிசி முதலான வைகளையுங் கொடுத்து இந்தப் பொன்னை யுங்கள் நாச்சியாருக்கு இராத்திரிக்குப் பரியமாக வைத்துக் கொள்ளச்சொல்லு, இந்த அரிசியைச் சமைத்து நமக்கு இராத்திரிக்குச் சாப்பாடு பண்ணி வைக்கச் சொல்லென்று அதற்கொரு கவியையுஞ் சொல்லி அனுப்பினவை வெண்பா,

தந்தபொன்னு முங்கள் தமிழறிவாட் கேடணையம்
அந்த வரிசிக் கிடுமசனம் – முத்துமொழி

பாகனைய சொல்லீர் பகருமுந்தம் பாவையற்குப்
போவென்றால் கூடாத போத

கற்றுச்சொல்லிப் பெண்கள் தமிழறிவாளிடத்திற்போய் பொன்னையும் அரிசி முதலான வைகளையு முடனே வைத்து அந்தக் கவியையுஞ் சென்னார்கள் அதுகேட்டு இது என்ன காரணமோ தெரியாதென்று விசாரப்பட்டு பின்னையுங் கற்றுச் சொல்லிகள் தாதிகளையழைத்துச் சொல்லுவாள் பொன்னைக் கொண்டுபோய்பொக்கிசத்திலே, சேர்த்தந்த அரிசியைத் தொம்பரத்திற்போட்டு சமையற் பண்ணுவித்து அந்த விறகு தலையனைப் பிறவரைத்திண்ணையிலிருக்கச்சொல்லி நீங்கள் இவனென்ன சொல்லுகிறானோ அதனையறியாதது போலே குறுக்கும் நெடுக்குமாக உலாவித்திரிந்து கேட்டுக்கொண்டு வாருங்களென்று சொல்லியனுப்பினாள். அப்படியே பொன்னைப் பொக்கஷித்திலே சேர்த்துப் போட்டு அரிசியைப் தொம்பரத்திலே போட்டுச் சமைக்கச் சொல்லி வந்து விறகு தலையனைப் புறவரத் திண்ணையிருக்கச் சொல்லித் தாங்கள் இவனென்ன சொல்லுகிறானோ வென்று அறியாதது போலே குறுக்கும் நெடுக்குமாக வுலாவித்திரிந்து கொண்டிருந்தார்கள். அப்போது விறகுதலையனான நற்கீர தேவருந்திண்ணை மீதிருக்கச்சே அந்தத்திண்ணைக் கெதிராக ஒருபுளியமரமும் பனைமரமுங் கூட வளர்ந்து இரண்டு மொன்றாய்ப் பிணைத்துக் கொண்டிருந்தது. சாயுங்காலமான படியினாலே அந்தமரத்தின் மீது ஒரு கொக்கு வந்திறங்கியிருந்தது. நற்கீரர் அந்தக் கொக்கைப் பார்த்துச் சொன்ன வெண்பா,

புளியி லரும்பனையிற் லொன்றலைக் கொக்கே
யிளமை மொழியா திருந்தீர் – தளருவதேன்
எம்மைப் பிரிந்தவரோ எம்மிலுந் தாரியரோ
உம்மைப் பிரிந்தா ருரை.

என்று சொல்ல, இந்தக்கவியைக் கற்றுச் சொல்லிகள் போய்த் தமிழறிவாளுக்குச் சொல்ல அதுகேட்டுத் தமிழறிவாளும் அந்தக்கட்டுக்கடந்து ஒன்பதாங்கட்டுக் குள்ளழைத்துவரச் சொல்ல அப்படியே யழைத்து வந்து விட்டார்கள். அந்தக் கட்டுக்குள்ளிருந்து விறகுதலையனான நற்கீரர் சொன்ன வெண்பா,

ஊசிமுனை யிலொளிமுத் துகோர்தது போல்
வீசும் பண்ணிவந் துமெய்குளிர – மூச

முலைத்தடங்கண் மாதே முழுவினை யேற்கின்று
நிலைக்கடையோ நிச்சயித்தாய் நீ

என்ற சொல்லக் கேட்டு கற்றுச் சொல்லிப் பெண்கள் போய்த் தமிழறிவாளுக்குச் சொல்ல அதுகேட்டுத் தமிழறிவாளும் இப்பா லழைத்துவந்து வைக்கோல் போட்டு கொடுக்கச் சொல்ல அப்படியே பத்தாங்கட்டுக்குள்ளே யழைத்துவந்து வைக்கோல் படுக்கைக்கு கொடுக்க அந்த வைக்கோலின் பேரிலே யொரு கந்தையைப்போட்டுப் படுத்துக்கொண்டு விறகு தலையனான நற்கீரர் சொல்லிய வெண்பா,

வைக்கோல் சயனத்தில் வாரியமுன்றா னையின்மேல்
மெய்த்தோல் வருந்திக்கிட வுடம்பே – மொய்க்கும்
மதுவொழுகும் பூங்கொன்றை வார்சடை யோனிற்றைக்
கிதுவோ விரித்த தெமக்கு.

என்று சொன்ன கவியைக் கற்றுச் சொல்லிகள் போய்த் தமிழறிவாளுக்குச் சொல்ல அதுகேட்டு அவள் சொன்னது அவனை யிப்பா லழைத்துவிவிந்து சீலைப்பாயும் வைக்கோல் தலையனையும் போட்டுக் கொடுக்கச்சொல்ல அப்படியே போட்டுக் கொடுத்தார்கள். விறகு தலையனான நற்கீரர் பதினோராங்கட்டுக்குள்ளே அந்தப் பாயின்மேற்படுத்துக் கொண்டு சொன்ன வெண்பா,

சரசரத்த பாயுந் தலைக்கனை வைக்கோலும்
பரபரத்தைமைச் சினமார் பண்பும் – விறகுடனே
யீங்கிவர்கள் செய்யு மியல்புமிவர் நலமும்
நீங்காதென் னெஞ்சத்து னின்று.

என்று சொன்ன கவியைக் கற்றுச் சொல்லிகள் போய்த் தமிழறி வாளுக்குச் சொல்ல அந்த விறகு தலையினைப் பன்னிரண் டாங்கட்டுக்குள் அழைத்து ஒரு ஈச்சம்பாயுந் தலைக்கனையும் போட்டுக் கொடுங்களென்று சொல்ல அப்படியே அழைத்துக் கொடுத்தார்கள் அதன்பேரிலே விறகு தலையினான நற்கீரர் இருந்து கொண்டு சொன்ன வெண்பா,

குடவன் கடிக்கக் குளிர்வாடை வீசக்
கிடவன் றிடத்தே கிடந்தே – மடநல்லார்
மென்குறங்கைத் தீண்டவிதி ல்லை யாதலினா
லென்குறங்கை யான் றழுவினேன்

என்று சொன்ன கவியைக் கற்றுச் சொல்லிகள் போய் தமிழறி வாளுக்குச் சொல்ல இவன் நல்ல கவி யீஸ்பரனே யென்றும்

எண்ணிக்கொண்டு பதின் மூன்றாங் கட்டுக்குள் ளழைத்துக் கொண்டு போய் ஒரு நார்க்கட்டிலும் ஈச்சம் பாயுந் தலை கணையும் போட்டுக் கொடுத்து நம்மிடத்லே சேவிக்கிற. பெண்களிலே அழகுடனே ஆடும் பெருமாளைச் சிங்காரித்து அவனிடத்திற்கு அனுப்புங்களென்றாள். அப்படியே கட்டிலும் பாயும் போட்டுக் கொடுத்து அதன் பேரிலே விறகு தலையனை யிருக்கச் சொல்லி அந்த அழகுடனாடும் பெரு மாளைச் சிங்காரித்து அனுப்பிவித்தார்கள் அவள் வந்து எதிரே நின்னாள். அவளைப் பார்த்து விறகு தலையறான நற்கீரர் சொன்ன வெண்பா,

தறிப்போலுங் குண்டத்தாள் தானவளைப் போலே
நெறியாக வந்தென் முன்னின்றாய் – சிறுபுலிதான்
தீரப் பசித்தாலுந் தின்னாப்புல் தின்னுமோ
நேராக நில்லாதே நீ

என்று சொன்ன கவியைக் கேட்டு அவள் தலையை யிறங்கிக் கொண்டுபோய்த் தமிழறிவாளுடனே சொல்லிக் கொண்டாள். அதுகேட்டுத் தமிழறிவாளும் பதினான்காங் கட்டுக்குள்ளே யழைத்துக் கொண்டுபோய் ஒரு --- சுக்கட்டிலும் ஈச்சம் பாயும் போட்டுக் கொடுத்து நம்முடைய தாதிகளிலே யிரத மோகினியைச் சிங்காரித்து அனுப்புங்களென்று சொன்னாள். அப்படியே கட்டிலும் போட்டுக் கொடுத்து அந்தப்பெண் ணையுஞ் சிங்காரித்து அனுப்பிவித்தார்கள். அவள் வருகிற போது விறகுதலையனிடத்திலெரிந்து கொண்டிருந்த விளக் கிருண்டெரிந்தது. அதுகண்டு இவள்போய் அந்த விளக்கைக் கையினாலே தூண்டி யெண்ணெயைத் தலையிலே தடவிக் கொண்டாள் அதை விறகு தலையனான நற்கீரர் கண்டு இவள் வீட்டு வெள்ளாட்டி யென்றறிந்து அவளைப் பார்த்துச் சொன்ன வெண்பா,

சுள்ளிவிறகு சுமைத் தலையனா னாலுந்
தெள்ளு தமிழாளைச் சேராம – லுள்ளஞ்
செழும் பாகிலு மினிய தேன் சொலாய் கூடேன்
தொழுன் பாயுன் னாச்சியுடன் சொல்

என்று சொன்ன கவியைக் கேட்டு அவளும் வெட்கித் தலையிறங்கிக் கொண்டு போய்த் தமிழறிவாளுடனே சொல்லி கவிஸ்திப்பட்டாள். அதுகேட்டுப் பதினைந்தாங் கட்டுக்குள் ளழைத்துக் கொண்டு போய் கட்டில் தூங்கு மஞ்சத்தின் பேரிலே மெத்தைத் தலைக்கணையுஞ் சீனிப்பாயும் போட்டுக் கொடுத்து நம்முடைய தோழிப் பெண்களிலே மதன சேனைக்குத்

தன்னுடைய வெண்சாமரையும் பொற்களாஞ்சியும் பொன்னின் மிதியடியும் பொற்பட்டாடையுங் கொடுத்துச் சிங்காரித்து விறகு தலையைனிடத்திற்கு அனுப்பிவிக்கச் சொன்னாள். அப்படியே தூங்குமஞ்சம் போட்டுக் கொடுத்து அந்தப் பெண்ணைச் சிங்காரித்து அனுப்பிவித்தார்கள். அவள் வந்து நின்றபோது அவளைப் பார்த்து விறகு தலையைனான நற்கீரர் சொன்ன வெண்பா,

ஆடை யுடையு மவள்கான் மிதியடியு
மோடியவ ளாகவந்தென் முன்னின்றாய் – மாடுபோற்
குண்டனைநான் சேர்வேனோ கோதையர்கள் செய்திதனைக்
கண்டேன் கண்டேனுன் கணக்கு.

என்று சொன்ன கவியைக் கேட்டு வெட்கித்தலை யிறங்கிக் கொண்டுபோய்த் தமிழறிவாளுடனே சொல்லி மிகவுந் துக்கித்துக்கொண்டாள். அவள் துக்கத்தை மாற்றி யிவன் வந்த காரணமேதோ வென்று விசாரமிட்டுக் கற்றுச் சொல்லிப் பெண்களால் மொண்ணச் சிகளையழைத்து அந்த விறகுதலையனைப் பதினாறாங் கட்டுக்குள் ளழைத்துக் கொண்டு போய்த் தொம்பரத்திலே சமைத்திருந்தால் சாப்பாடிடுங்களென்று சொல்ல அப்படியே யழைத்துவந்து ஒரு கல்லா விலையைத் தைத்துப் போட்டு வெந்ததும் வேகாததுங் கல்லும் நெல்லுமாகச் சாப்பாடு கொண்டு வந்து வைத்தார்கள். அந்தச் சாப்பாட்டைப் பார்த்து இவர்கள் வீட்டிலே சாப்பிடா தவரான படியினாலுஞ் சாப்பாடிருக்கிறதிட்ட முங்கண்டு சாப்பிடுகிற பாவனையாகச் சாதத்தின் மேற்கையை வைத்துக் கொண்டு விறகுதலையனான நற்கீரர் சொன்ன கலித்துறை,

நெல்லாண் மருத மண லுண்மையானெய்த நீண்டகன்ற
கல்லாற் குறிஞ்சியரியின் வெம்பாலைக் கலையின்முல்லை
வில்லாபுருவத்து வேனெடுங் கண்ணி நன்மெல்லியனாய்
சொல்லாய் நிலமஞ்சுங்காட்டுவ நீயிட்ட சோறிட்டதே

என்று சொல்லியதற்குப் பொருள் சொன்ன வெண்பா,

கல்லொன்று நெல்லிரண்டு காணுமணன் மூன்றரிசி
கல்லையுட னஞ்சுவகை காட்டினேன் – வின்னுதலாய்
வல்லபடி செய்தவகை யெல்லா முங்களது
முல்லை நகையாட்டு மொழி.

என்று இரண்டுகவியுஞ் சொல்லிக் காண்பித்து ஆசனத்தையுந் தள்ளிப்போட்டு அப்பாலே இருந்தார். அதுகேட்டுக் கற்றுச்

சொல்லிகள்போய்த் தமிழறிவாளுக்குச் சொன்னார்கள் தமிழறிவாளும் நல்லதென்று அந்த விறகு தலையைனைக் கச்சேரி மண்டபத்துக்கு வரச்சொல்லி யழையுங்களென்ன - அப்படியே கற்றுச் சொல்லிகள் வந்து விறகு தலையைனைக் கச்சேரி மண்டபத்துக்கு வாருமென்றழைத்தார்கள். நல்ல தென்று விறகு தலையனான நற்கீரதேவர் கச்சேரி மண்டபத்துக்கு வருகிறபோது, பதினேழாங் கட்டுக்குள்ளே சூஸ்திரப்பிரதமைகள் இவரை ஆகடியம் பண்ணும் பொருட்டு எதிரே வந்தது. அதுகண்டு தெண்டாலே யடித்தார் - அந்தச் சூஸ்திரப் பிரதமைகளெல்லாங் கலைந்து விழுந்து போச்சுது. அது கடந்து அப்பாலே பதினெட்டாம் வாசலிலே போகிற போது இரண்டு பக்கத்திலும் புலிகள் சீறி வந்தன. அந்தப் புலிகள் முன்னே செம்பருத்திப் பூவைப் போட்டார் அவைகள் மாங்கிடுமென்றெடுத்துக் கொண்டு அப்பாலே போயின. அது கடந்து அப்பால் பத்தொன்பதாம் வாசலில் போகிறபோது இரண்டு பக்கத்திலுங் கரடிகள் சீறிவந்தன. அப்போது காந்தக்கல்லைக் கற்றூணிலே தட்டினார் அதிலே நெருப்புப் பறந்தது. அதுகண்டு பயந்து அப்புறமோடிப் போயின, அது கடந்து அப்பாலே யிருபதாம் வாசலிற்போகிறபோது இரண்டு பக்கமும் யானைகள் கெர்வித்தது. தும்பிக்கையை நீட்டிக் கொண் டெதிரே வந்தன. அவைகள் கையிலே கரும்புக் கருணையைக் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு அப்பாலே போயின, அந்த வாசற் கடந்து அப்பாலே யிருபத்தோராம் வாசலிலே போகிறபோது குரங்கு சீறிவந்தது. அதன் முன்னே கட்டுக் கரும்பையும், நண்டையும் விட்டார். அதுகண்டு பயந்து அப்பாலே ஓடிப்போச்சுது. அந்த வாசற் கடந்து இருபத்திரண்டாம் வாசலிற் போகிறபோது வேட்டை நாய் சீறிவந்தது. அதன் முன்பு மல்லிகைப் பூவைப் போட்டார், அது சோறென்று முகந்து கொண்டிருந்தது. அது கடந்து அப்பாலிருபத்து மூன்றாம் வாசலிற் போகிறபோது அந்த வாசலில் ஒருகிணறிருந்தது. அந்தக் கிணற்றிலேயிறங்கி அப்பாலே போனேமென்றிறங்கினால், சூஸ்திரப்பலகை யானது மேலே மூடிக்கொள்ளுமென்றறிந்து அந்தக் கிணற்றி லொரு கல்லைப் போட்டார். உடனே சூஸ்திரப்பலகை கிணற்றை மூடிக்கொண்டது. அந்தப் பலகையின்மேலேறி அப்புறம் போனார். அந்த வாசற் கடந்து இருபத்து நான்காம் வாசலிற் போகும்போது அந்த வாசலிலே குங்குமச்சேறு இருந்தது. அப்போது எண்ணெய்சீலையை யெடுத்து காலிலே தடவிக் கொண்டு அந்தச் சேற்றிலிறங்கியப்பாலே போய்க் கரையேறி கொஞ்ச நஞ்சமங்கங்கே பட்டிருக்கிற சேறெல்ல

மூங்கிற் பிளவாலே நன்றாய் வழித்துப் போட்டு அங்கே வெள்ளி தட்டில் வைத்திருக்கிற ஆழாக்கு பனிநிரையு மெடுத்துக்கொண்டு அதிலே பாதி பனி நீரிலே காலைக் கழுவிக் கொண்டு மற்ற பாதி பனி நீரையுந் தமது பிறகே சூழ்ந்து வருகிற தாதிகள் கையிற் கொடுத்து இந்தப்பனி நீரை கொண்டுபோய் உங்கள் நாச்சியார் தலையிலே யூற்றுங்களென்று சொல்லி அந்த வாசற் கடந்து இருபத்தைந்தாம் வாசலுக்கு வருகிறபோது அங்கே சித்திரமண்டபத்திற் பாரத இராமாயணம் மற்று முண்டான கதாப் பிரசங்கங்களெல்லாமெழுதியிருந்தன. அவை களைப் பார்த்து நாமிங்கே வேடிக்கைப் பார்த்துக் கொண் டிருந்தால் பொழுது விடிந்து போகுமென்று நினைத்துச் சீக்கிரமாகப் போகச்சே பிறகே வருகிற மொண்ணச்சிகள் விறகு தலையைனைப் பார்த்து இந்தச் சித்திரங்களிருக்கிற வினோதங் களைப் பாரும் பாருமென்று சொன்னார்கள் அதற்கு விறகு தலையனான நற்கீரர் சொன்ன வெண்பா,

> கலைக்காட்டுந் தோகைக் கருஞ்சக் கரத்தின்
> வலைகாட்டி யாயிரம் பொன் வாங்கிக் – கலைநெகிழாக்
> சூத்திரமாய்த் தேடுங் குறிபோ லிருந்ததிந்தச்
> சித்திரமுஞ் செய்யுஞ் செயல்

என்று சொன்ன கவியைக் கூற்றுச் சொல்லிகள் போய்த் தமிழறிவாளுக்குச் சொல்லத் தமிழறிவாளுஞ் சந்தோஷப் பட்டுச் சீக்கிரமாக அழைத்து வாருங்களென்ன - அப்படியே யழைத்து வருகிறபோது இருபத்தாறாம்வாசலிலே நீராழி மண்டபமுண்டு அதற்கு மிதப்புப்போட்டுக் கொண்டு பள்ளமறிந்து கரையேறிப் போனார்.

அதுகடந்து அப்பாலே போகிறபோது இருபத்தேழாம் வாசலிலே பளிங்கு மாமண்டபத்திற் போகையில் அந்த மண்டபத்தின் மேலே செய்து வைத்திருக்கிற சித்திரங்களைப் பார்த்தால் கீழே கால் சறுக்கி விழுவான் அப்படி விழாமல் உபாயமாகக் கடந்துபோய் அப்பால் இருபத்தெட்டாம் வாசலிலே தமிழறியு மண்டபமுங் கடந்து இருபத்தொன்பதாம் வாசலிலே இயலறியுமண்டபமுங் கடந்து அப்பால் முப்பதாம் வாசலிலே யிசையறியு மண்டபங் கடந்து அப்பால் முப்பத்தோராம் வாசலிலே கூத்துப் பார்க்கிற மண்டபத்திற் கோழிச் சேவல் போரும் ஆட்டுக் கடா பாய்ச்சலும் இப்படி யாக அநேக வினோதங்களிருந்தன. அந்த மண்டபத்திலே கூத்தாடுகிறதும் மத்தளம் தாளம் போட்டுக்கொண்டு நாடக சாலைப் பெண்களுங் கூத்தாடிகளும், இவருக்கெதிரே புகழ்ச்சிப்

பண்ணிக்கொண்டு ஆடவந்தார்கள் - இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தால், பொழுது விடிந்துபோகும் ஆனபடியால் வந்த காரியமாக வேண்டுமென்று அவர்களைப் பார்த்து உங்களாட்டமும் பாட்டமும் நானோ பார்க்கிறவன் உங்கள் நாச்சியாரே பார்ப்பாளென்று சொல்லி அவர்களுக்குத் தியாகங் கொடுத்து அது கடந்து அப்பால் கச்சேரி மண்டபத் திற்குப் போகிறபோது தாதிகள் போய்த் தமிழறிவாளுடனே இந்த முப்பத்தொருவாசலுங் கடந்து வந்தானென்று சொல்லக் கேட்டுத் தமிழறிவாளுஞ் சந்தோஷப்பட்டு இத்தனைக்கட்டுக் காவலனைத்தையுங் கடந்துவந்தபோதே இவன் தேவனே யென்று அந்த மண்டபம் விட்டுத் தன் னரண்மனையே போனாள் - நற்கீரரும் அந்தக் கச்சேரி மண்டபத்துக்கு வந்தார். அந்த மண்டபம் எப்படியிருக்கிறதென்றால், அறுபத் நான்கு கால் பொற்றூணிறுத்தி மண்டபஞ் சோடித்து அந்த மண்டபத்துக்கு நவரத்தினத்தினாலும் பட்டுபட்டாவளி சீனிசீனாம் பரத்தினாலும் அலங்கரித்து அதிலே மயில் களாடவும், குயில்கள் கூவவும், அன்னங்கள் நடந்து விளை யாடவும் வண்டிணம் பாடவும் பஞ்சவர்ணக்கிளிகள் கொஞ்சிக் கொஞ்கிப் பேசவும் தென்றல்வீசவும் மேற்கட்டுங்கட்டி சூஸ்திரப் பிரதமைகள் முப்பத்திரண்டு வகை மேளவாத்தியம் பண்ணவுஞ் சாம்பி ராணி தூபமும் மல்லிகை முல்லை ஜாதி புன்னை மருக் கொழுந்து இப்படிக் கொத்த மரிமளதி ரவியியங்களுங் கமகம வென்று பரிமளித்துக் கொண்டிருக்க இப்படி நானாவிதமான அலங்காரமாயிருக்கப்பட்ட கச்சேரி மண்டபத்தில் களிற்று யானைத் தந்தக் கட்டிலும் பெட்டை யானைத் தந்தக் கட்டிலும் நவரத்தினக் கச்சிதமாக சோடித்து இரண்டு கட்டிலுஞ் சோடாகப் போட்டிருக்கின்றது. இந்தப் புதுமைகளையெல் லாம் பார்த்து நற்கீரதேவர் அதிசயப்பட்டு இத்தனைக்கு வல்லவளான படியினாலே இத்தனை யாடம்பர பரிவட்டணை யகங்காரவலுமையினாலே தனக்கொருவரு மெதிரில்லையென்று விருது கூறிக்கொண்டிருக்கிறாள். இவளை வெல்லு கிறது அருமையாமென்று விசாரப்பட்டு ஆனா லென்ன நம்முடைய குருவாகிய சுப்பிரமணியக் கடவுள் பாதாரவிந்தமே துணையென்று அந்தக்கட்டிலண்டைக்கு வந்து கட்டிலைப் பார்த்து அதிசயப்பட்டு இந்தக் கட்டிலிரண் டையும் பெண் கட்டில், ஆண்கட்டிலென்று பிரித்த விபரம் தமது கையினாலே ஒரு கட்டிலை நெருங்கி யிருத்திப் பார்க்கத்தளர்ந்திருந்தது. இது பெட்டையானை தந்தக்கட்டில் பெண்கட்டிலாமென்றறிந்து அதுகால் மாடு தலைமாடு தெரியாமலிருந்த படியினாலே அது அறிய வேண்டித் தமது

கையிலிருந்த எலுமிச்சம் பழத்தை யெடுத்து அந்தக் கட்டிலின் நடுமையத்திலே வைத்தாரது உருண்டுபோய் கால்மாட்டில் நின்றது அது கண்டு கால் மாட்டிற் சூஸ்திரப்பிரதமைகளுந் தலை மாட்டிலே நிலைக் கண்ணாடியுமிருக்கிறது. இலட்சணமா மென்றறிந்து கொண்டு அந்தக் கட்டிலின் பேரிலேறி ஒரு கந்தையை விரித்துப் போட்டுப் படுத்துக்கொண்டார். கட்டிலிலே பிரதமைகள் கட்டியிருந்த படியினாலே மேற்படி சூஸ்திரப்பிரதமைகளெல்லாங் கால் பிடிக்கவுங் கைபிடிக்கவும் உடம்பு பிடிக்கவும் மயில் விசிறியெடுத்து விசிறவுங் கண்ணாடி யெடுத்துக் காட்டவும் வெண் சாமரை யெடுத்து வீசவும் இப்படியாகப் பிரதமைய களெல்லாம் பணிவிடைசெய்யத் தக்கதாக விறகு தலையனான நற்கீரதேவர் படுத்துக் கொண்டிருக்கிறதைக் கண்டு கற்றுச் சொல்லிகள் முதலான பேரும் ஆச்சரியப்பட்டு தமிழறி வாளுடனே சொன்னார்கள். அவளுங்கேட்டு விசாரப்பட்டு பின்பு மனந்தெளிந்து கொண்டு இவன் உத்தமனென்கிறதற்குச் சந்தேகமில்லை. இப்படிக் கொத்த வித்துவானைச் சேர்ந்தாலுந் தோஷமில்லை மோட்ச முண்டு ஆனாலுமிவனுடைய திறமையை யின்னமும் பார்ப்போ மென்று தன்னுடைய தோழி யான இயலறியும் பெருமாளை வரவழைத்து அவளுக்குத் தன்னுடைய ஆபரணங்களையெல் லாம் பூட்டி சிங்காரித்து வெகு ஆடம்பரத்துடனேயனுப்பி னாள். அவளுந் தமிழறிவாள் வடிவமாக வந்து நின்ற போது அவளைப் பார்த்து இவள் தமிழறிவாளல்ல வென்று மனதிலே எண்ணிக்கொண்டு விறகுதலையனான நற்கீரதேவர் சொன்ன வெண்பா,

முத்து நகையு முகுண்முலையு மெய்ஞ்ஞானச்
சத்திசிவம் போலத் தாதியரா – மெத்தெனவந்
தன்புருகார் நெஞ்சத் தவரிருக்க நீர்வரலேன்
பொன்சிலம்பு சிற்றடியாய் போம்

இப்படியாகச் சொல்லக்கேட்டு இயலறிவாளும் நீ ரென்னைத் தூஷணித்தாலும் நல்லது வெகுமான மாய்ப் போவென்றீரே அதுவே போதுமென்று சொல்லிப் போய்த் தமிழறிவாளுடனே சொன்னா ளதுகேட்டுத் தமிழறிவாளும் இனிமேல் யாரையனுப்பினாலும் ஆகிறதில்லை நாமே போக வேண்டு மென்று தாயான மரகதவடிவை யழைப்பித்துச் சொல்லுவாள் விறகு தலையனிடத்திற்கு நாம் ஆரையனுப்பி னாலும் அவர்களைத் தூஷனித்து ஒட்டிவிடுகிறானே இனி நான் அவனிடத்திற்குட் போவேனோவென்று கேட்க, மரகத வடிவி சொல்லுவாள், விறகு தலையையனான தேது அவனிடத்திற்கு

நீ போகிறதேது இதென்ன மாயமாயிருக்கிறது நீயும் இதுவரைக் குந்தமிழறிவாளென்று பேர் பெற்று உனக்காரும் எதிரில்லாமற் கீர்த்திபடைத்திருந்தாய் இப்போதும் வந்தவனுக்கு ஏற்ற சமர்த்து ஆராய்ந்து சொல்லிக் கொண்டு சிறுக்கிகளை யழைத்து அவன் முன்னே கேளிக்கையாடச் சொல்லி வேடிக்கைப் பார்ப்பித்து பொழுது விடியப்பண்ணி யிளிச்சவாய்ப்பித்தா மோசம்போனாயே யென்று அடித் தோட்டிவிடுகிறதே யல்லாமல் அந்த விறகு தலையனைக் கூடவிதியோ மகளே போக வேண்டாமென்றாளது கேட்டுத் தமிழறிவாளுந் தாயான மரகத வடிவிக்குச் சொல்லுவாள், வந்தவன் எங்கோயாகிலும் மோசம் போனாலல்லவா அடித்து ஓட்டிவிடலாம். நல்ல இலட்சணமறிந்த வனுமாய் மகத்தான வித்துவானுமாக் கட்டுக்குக்கட்டு கவிசொல்லிக் கொண்டு வந்த சமர்த்தையு மறிவாய், இப்படி நம்மிலு வல்லமை யானவனை நம்முடைய வலுமையினாலே அடித்து ஓட்டிவிட்டால் பூமியிலும் அபகீர்த்திக்கிடமாகும், இவனும் வசைகவிபாடிப் போடுவான்; இது காரியமல்ல வென்று தாயான மரகத வடிவிக்குத் தமிழறிவாள் சொல்லிக் காண்பித்த வெண்பா,

கல்லாவொருவன் றோள்சேர் தலிலுங் கற்றவனோ
டல்லப் படுவத முகன்றோ – சொல்லாய்க
கரும்பிர சங்கைக்கு மோகவ்வியறி கோதாய்
விரும்புவரோ வேம்பின் கனி.

என்று சொல்லிக் காண்பித்தவுடனே தாயான மரகதவல்லி சம்மதித்து நல்லது போவென்று சொன்னாள். அதன்பிறகு தான்போய்ச் சலக்கமனைபுகுத்து பச்சிலை பசுமஞ்ச ளரைத்து ஜலக்கமாடி தான் பூண்டு கொண்டிருந்த ஆபரணங்களை யெல்லாங் கழற்றிப் போட்டு கண்ணுக்கு மையிட்டுக் கொண்டு சந்தனம் பூசிக்கொண்டு நெற்றிக்குத் திருநீறுங்கஸ்தூரிப் பொட்டுமிட்டுக் கொண்டு ஒரு வெள்ளைப் புடவையுடுத்திக் கொண்டு தாதிகளிடப்பட்ட வுடைமைகளிட்டுக் கொண்டு இன்னந்தன்னை யறியாமலிருக்க வேண்டு மென்று முன்னாலே போய் வந்த இசையறியும் பெருமாளைத் தானே முகனையாய் அலங்காரம் பண்ணிக்கொண்டு திரும்பவும் வந்தாளே யிவள் தான் தமிழறிவா ளென்று அவன் மனதிலெண்ண வேண்டு மென்று நினைத்து வெகு ஆடம்பரமாக மேளதாளங்களுடனே கட்டியக்காரிகள் எச்சரிகை சொல்ல இசையறியும் பெருமாளை முன்னே நடத்திக் கொண்டு தானவளுக்கு அடப்பைக் காரியைப்போல பிறகே நின்று வெற்றிலை மடித்து நீட்டிக்

கொடுத்துக் கொண்டு வருகிறவளுடைய இலட்சணத்தைப் பார்த்து முகமிருக்கிற வொளிவும் பார்க்கிற பார்வையும் அவளுடைய ரூபாதிசயமும் அவளுடைய நடையினொளிவும் பிடியிலடங்கும் இடையும் மூன்றாம் பிறைச் சந்திரனைப் போலே யிருக்கிற அவளுடைய முகப்புருவத்தி னழகையும் பார்த்து இவளே தமிழறிவா ளாகவேண்டும் தன்னா பரணங்களை யெல்லாங் கழற்றிப் போட்டு மாறுபாடாக வருகிறதுங் கபடமாயிருக்கிறதென்று தமிழறிவாளைப் பார்த்து தூஷணித்துப் பாட நாவெழாமல் விறகு தலையனான நற்கீரர் சொன்ன கவித்துறை,

கருகவிழித்த விழிக்கணையால் வெய்ய காமனையன்
றுருகவிழித்த விழியிதுவோ விங்குவமை யில்லாக்
குருகுபதத் திளங்கொங்கை மின்னாளிடைக் கூடவின்று
பருக விதித்திலனே வெய்யகாமப்பசி தனக்கே.

என்று சொன்ன கவியைக் கேட்டுத் தமிழறிவாளும் இவன் நம்மைப் பார்த்து அறிந்து கொண்டு இத்தனை யுவமையிட்டுப் பாடினானென்று சந்தோஷப்பட்டு அதிசீக்கிரமாக பெட்டை யானைத் தந்தக்கட்டிலென்கிற பெண்கட்டிலின்பேரில் முகனையாகவந்த இசையறியும் பெருமாளை உயரவைத்துத் தான்கீழே யிருந்து கொண்டு வெற்றிலை மடித்துக் கொண்டிருந் தாளது கண்டு விறகு தலையனான நற்கீரதேவரும் இப்படி கபடமாகத் தாமாக வெற்றிலை மடித்துக் கொண்டிருந்தால் எனக்குத் தெரியாதோ வென்று மனதிலெண்ணிக் கொண்டு எழுந்திருந்து வெற்றிலைப் பாக்கு கையிலெடுத்துக்கொண்டு வந்து வெற்றிலை மடித்துக்கொண்டிருக்கிறவள் கையிலே கொடுக்கபோனார். அதைத் தமிழறிவாள் கண்டு இவன் நம்மை யறிந்தல்லவோ நம்முடைய கையில் வெற்றிலைப் பாக்கு கொடுக்க வருகிறானென் றெண்ணிக் கொண்டு அவர் முகத்தை யேறப்பார்த்துத் தமிழறியும் பெருமாள் சொல்லுவாள், நானொரு கவி சொல்லுகிறேன் அந்தக் கவிக்குப் பயன் சொன்னீராகிலும்முடைய கையிலே வெற்றிலைப் பாக்கு வாங்குவேன் இல்லாமற்போனால் வாங்குகிறதில்லை என்று சொன்னாளதற்கு நற்கீரதேவர் சொல்லுவார் நீசொல்லுகிற கவிக்குப் பயன் சொன்னாலாகுது சொல்லாமற்போனால் உனக்கு ஆறுமாதம் ஊழியம் பண்ணுகிறேன் ஒருவேளை நீதோற்றால் என்னமாகிறது சொல்லும் பெண்ணே யென்றார். அதற்குத் தமிழறிவாள் சொல்லுகிறாள் ஒருவேளை நான் தோற்றேனேயாகில் தேவரீர் சொன்னபடிக்குக் கேட்கிறே

னென்றாள். அதுகேட்டு நற்கீர ரானால் நீ சொல்லுகிற கவியைச் சொல்லும் பெண்ணே என்றா ரப்போது தமிழறி வாளு மிரண்டு கட்டிலுக்கும் நடுவே பூந்திரையிடு வித்துத் தமிழறியும் பெருமாளென்கிற வேஷத்துக்குண்டான ஆபரணங் களை எல்லாம் பூட்டிக்கொண்டு பட்டுபட்டாவளியுடுத்தி அளக்கத்து முல்லை யணிந்து கைக்குப் புனுகு சவ்வாதிட்டு கொங்கைக்குக் குங்குமகஸ்தூரி யணிந்து மார்புக்கு கண்டசரம் முத்து மாலையணிந்து காதுக்கு கொந்தளமணிந்து கைக்கு அஸ்தகடகமிட்டு காலுக்குச் சிலம்பணிந்து அரைக்கு ஒட்டி யாணமணிந்து இசையறியும் பெருமாளை யரண்மனைக்கு அனுப்பிவிட்டு தான் கட்டிலின் மீதிருந்து கொண்டு ஆலவட்டம் வீச உபய வெண்சாமரை வீச சர்வபூஷணாலங்கிர்தமாக இருந்து கொண்டு விறகு தலையைனான நற்கிரதேவருடனே வாக்குவாதம் பண்ணின வெண்பா,

> **ஐயஞ்சிரு பத்தஞ்சோ ரிரவேயான் பெறினும்**
> **வெய்யமதனைந் துகணைமேல் வரினுந் – தையலாள்**
> **கையஞ்சறியாத காளை தோள் சேர்வளோ**
> **மெய்யஞ் சறப்பெற்ற மின்**

என்று சொன்ன கவிக்கு நற்கீரர் தன்னண்டையிலிருந்த அஞ்சறைப்பெட்டியைத் தட்டிக் காண்பிக்க அதற்குத் தமிழறிவாள் இது யூகி பாஷையைப் போலிருக்கிறது. தெரியச் சொல்லவேண்டுமென்ன நற்கீரர் பொருள் விடுத்த விவரம் ஐயஞ்சிருபத்தஞ்சாவது, காடுபடுவதஞ்சு கடல்படுவதஞ்சு நாடு படுவதஞ்சு நகர்படுவதஞ்சு மலைபடுவதஞ்சு. இவைகளுக்குப் பயன் காடுபடுவதஞ்சாவது அரக்கிரளி, செந்தேன், அணி மயிலின், பீலிதிருக் கற்றநாபி யோடைந்து. கடல்படுவ தஞ்சாவது ஓங்குவளை சங்கு ஒளி பவளம் வெண்முத்து பாங்கரிய வெள்ளுப் போடைந்து. நாடுபடுவதஞ்சாவது செந்நெற் சிறு பயறு சீராருஞ் செவ்விளநீர் கன்றகதலியோடைந்து. நகர்படு வதஞ் சாவது கண்ணாடிபித்தன் கருங்குரங்கு காட்டானை மண்ணாளும் வேந்தனோடைந்து. மலைபடுவதஞ் சாவது மாணிக்கம் பச்சை வையிடூரிய நீலம் ஆணிக்கதைமோடைந்து கனையஞ்சாவது முல்லைய சோகுமுழு நீலஞ் சூதப்பூ அல்லி முளரி யோடைந்து. கையஞ்சாவது எண்ணலெழுத விலை கிள்ளல் பூத்தொடுத்தல் பண்ணமைந்த ஆழியோடைந்து. மெய்யஞ்சாவது கொட்டாவி நெட்டை குறுகுறுப்பை கூன் குருடு நட்டு விழுதலோடைந்து. இப்படியென்று நற்கீரர் பொருள் விடுத்தபின்பு பின்னுந் தமிழறிவாள் சொன்ன வெண்பா,

பாய்ச்சி மறித்திடுவார் பாதமே நான்குடையார்
வாய்ச்சளகம் புகுந்து வாழ்ந்திருப்பார் – வீச்சிப்
படைவாணர் தங்களுக்குப் பாரின் மேற்கானா
அடைமாவு மல்ல வது

என்று சொன்னதற்கு நற்கீரர் பொருள் சொன்ன வெண்பா,

கம்பைபல வைச்சுவடியிற் கால்களொரு நான்குளதாய்ப்
பைம்பொற் களமேறிப் பாய்ச்சுதலோ – லெம்பெரிய
மாவல்ல நல்ல மாக்காலே மாநிலமன்
பூவலருங் கோதாய்ப் பொருள்

என்று பொருள் விடுத்துச் சொன்ன பின்பு தமிழறிவாள் பின்னையுஞ் சொன்ன சந்த விருத்தம்,

அங்காடி கொள்ளப்போ யானை கண்டேன்
அணிநகர மன்றியிலே சேனைகண்டேன்
கொங்காளு முத்தரசர் தம்மைக் கண்டேன்
கொடித்தேரும் பரிமாவுங் கூடக் கண்டேன்
அங்கிருவறெதிர் நின்று வெட்டக் கண்டேன்
அதுகண்டு யான்றலையைத் தாழ்த்த லுற்றேன்
இங்கிதனை யின்னதென் றியம்புவார்க்கே
எதிரில்லை இப்புவிக்கு ளென்றவாறே

இந்தக் கவிக்கு நற்கீரர் பொருள் சொன்ன

எதிரங்க மன்றியிலே யேறக்கண்டேன்
எழுதரிய தேர்மாவு மனிதர்கண்டேன்
அதிரங்க மாயிருவ ராடக்கண்டேன்
சதுரங்க மிதுகானும் வேறொன்றல்ல
தார்குழலே நீதலையைத் தாழ்த்தாதேனோ
விதிரங்க முடையாதாரு மானேகேளாய்
வீணருக்கும் வேந்தருக்கும் வேலை தானே

என்று பொருள் விடுத்தபின்பு பின்னையுந் தமிழறிவாள் சொன்ன கவி,

அக்கரமு மெழுதவொண்ணா வாய்மையாளர்
ஆவின் பின்னே திரிவாரதுவு மன்றி
சக்கரமு வலம்புரியுந் தரித்தே நிற்பர்
தாமுரலிற் கட்டுண்டு தயங்கா நிற்பர்

மிக்கதொரு வடம்புனைவர் வெண்ணெயாடி
வெற்பெடுத்து மற்பொருது வேலைசூழ்வர்
திக்கெட்டும் புகழ்படைத்த தேவேகேளாய்
திருமாலு மல்லவிது செப்புவீரே

இதற்கு நற்கீரர் பொருள் சொன்ன, கவி

குன்றாத மொழியுடைய வாய்மையாளர்
கோவின் பின்திரிவர் கோபாலரல்லர்
நன்றாகக் கடல்கடைந்து வெண்ணெய்யாடி
யுரலோடே கட்டுண்டு யுழலாநிற்பர்
மன்றாடி மலையெடுத்துமல் லுப்பூந்து
மற்பொருதி வெற்பெடுத்துக் கொக்கிப் பூண்பர்
சென்றாடு முறையூரிற் றேனே கேளாய்த்
திருமாலு மல்லவிது செக்குத்தானே

என்று பொருள் விடுவித்தபின்பு பின்னையுந் தமிழறிவாள் சொன்ன கவி,

படிமுழுதுந் தரித்தங்கே மன்றுள்ளாடி
-----தருறத் தருமங்கே பரிந்து நாடி
ச – முடைய நான் முகனு மரியுந் தேடித்
சாவரெல்லாம் போற்றரிய திங்கள் சூடி
பாமணியு முலைமடவா ராகம்போல
வடிவுடைய திருமேனி தழும்பு பட்டுப்
படிமுழுது மாளுவிக்கும் வல்லர்தாமே
பரமனார் தானுமல்ல பகருவீரே

இதற்கு நற்கீரர் பொருள் சொன்ன கவி,

வடிவுடையார் பிறையணிவார் வணிகரெல்லாம்
வழிபடுவார் நாடோறும் மனிதர்கான
அடுபடுவார் திருமேனி தழும்பு மேற்பார்
அம்மையிலார் தகவாழ்வர துவுமன்றிக்
குடியினுடன் மனர்தங்கள் முன்னே நிற்பர்
கூற்றனென வகுப்பாரை மாற்றுவிப்பார்
படிமுழுது மாளுவிக்க வல்லர்தாமே
பரமனார் தாமுமல்ல பணத்தினாரே

என்று சொல்ல பின்னுந் தமிழறிவாள் சொன்ன கவி,

கட்டியவன் கரையார் காலபலவே யுடையார்
இட்டதோர் மருதனிலே யெய்திய தாமரையுங்
கொட்டிய நெய்தலுமே கூடமுளைத்திடுமே
யிட்ட தமிழ்க் கரசேயோரியு மல்லவிது

இதற்கு நற்கீரர் பொருள் சொன்ன கவி,

கால்வழியே நூலோடிக் கரைகள் சேர்த்துக்
கற்பாகப் புல்லிட்டுக் கஞ்சி வைத்துப்
பூவலரும் நெய்தலுடன் கொட்டியிட்டுப்
பொருந்தியே தாமரையும் பூத்தேநிற்பர்
வேல்பொருதுங் கண்ணாளே யோியல்ல
மேகலையென் றேயிதனை விளம்புவாரே

என்று சொல்லக் கேட்டுத் தமிழறிவாள் சொன்ன கவி,

கானகத் திருந்துபோந் துகைகளாற்குத் துமுண்டு
தானகக் கூடந் தன்னிற்றன் பனி நீருமாடி
மேனியிற்ற வளங்கொண்டு வீதியில் வருவரங்கே
ஆனையுமல்ல கண்டீரறிந் திடிரரசர் கோவே

என்று சொல்ல நற்கீரர் பொருள் சொன்ன கவி,

தானம்போற் கூடந்தன்னிற் நன்கையிற் குத்துமுண்டு
தேனுடன் பாலுநெய்யுந் தெவிட்டநல்ல முதுசெய்யும்
மானவேல் விழியினாளே மாநிலத்தோர்கட் கெல்லாம்
ஆனையுமல்ல கண்டீ ரருங்கல்லைதானே யென்றார்.

என்று சொல்லப் பின்னுந் தமிழறிவாள் சொன்ன வெண்பா,

அக்கடா போகக்கண் டாறிரண்டி லொன்றையுண்
டிக்கடா விடாயிருப் பாரை – யொக்கிடா
ஒன்னார் புரத்தை முனிந்தாரே யந்நாளில்
முன்னான்கி லொன்றுடையா முன்

என்று சொல்ல இதற்குப் பாண்டியன் முன்னே நரியைப் பரியாக்கினதென்று நற்கீரர் பொருள் விடுத்தார். பின்பு தமிழறிவாள் மறுபடியுஞ் சொன்ன கவி,

நீரிலானவை தானது மூன்றுள
நெடியகானில் விளற்கொரு மூன்றுள
ஊரிலாடவும் பாடவுங் கொட்டவு
மொன்றிலொன் றொருபேதையரா மெனச்
சேரவாங்கு தனகுடன் கூடவே

தெற்குமா முனிதன்னை யுமாகவே
பாரின்மீது இயலவல்லார்க் கிது
பன்னிரண்டு வருஷம் பகருமே

இதற்கு நற்கீரர் பொருள் சொல்லுவார், நீரில் மூன்றாவது மகரம் மீனம் கர்க்கடம், கானில் மூன்றாவது மேஷம், ரிஷபம், சிங்கம், ஊரில் மூன்றாவது, ஆடுவது துலாம் பாடுவது மிதுனம் கொட்டுவது தேள் பேதையாவதுக் கன்னி தனுசாவது வில் தெற்கு முனியாவது கும்பமென்று சொல்லப் பின்னுந் தமிழறிவாள் சொன்ன வெண்பா,

வருவார் கூடுபுகுவர் வாய்கூரப் பரந்து
பாரெல்லந் தானே பரிந்துழல்வர் – சீரெல்லாங்
கச்சிருக்குங் கொங்கைக் கனங்குழையீர் கார்வண்ணன்
நித்திரையி னீர்காணி லுப்பு

பின்னுந்த தமிழறிவாள் சொன்ன வெண்பா,

துய்யஞ்சு பாணந் தொடுத்தான் வெளிப்பொழுதுதே
மெய்யஞ்சு விட்டாலு மியான்வேண்டேன் – மெய்யாகக்
கையஞ்சுடையான் கதிர்முகத் திலொன்று டையான்
மெய்யஞ்சு சுடையான் விளம்பு

இதற்கு நற்கீரர் பொருள் சொன்ன வெண்பா,

நினைக்கு மரவிந்த நீள்பசலை சூதம்
அனைத்துணர்வு மாற்று மசோகந் – தனித்திருந்து
முல்லை கிடைகாட்டு மானே முழுநீலங்
கொல்லுமத னம்பின் குணம்

என்று சொன்னது, கையஞ்சுடையானாவது கேரினவண்மை இறையிம்மை நெருப்புக்குறி நுண்மையோ டைந்து. கதிர் முகத்திலொன்றாவது சூரியனைப் போலே ஒளியுடைய முகமென்பது. மெய்யஞ் சுடையனாவது சோம்பல் நடை நெட்டையுடல் முறித்தல் வெம்பி கற்றாழையோ டைந்து என்று சொல்லித் தமிழறிவாளைப் பார்த்து நற்கீரர் சொல்லு வார், நீ சொன்ன கவிகளுக்குக்கெல்லாம் நான் பயன் சொன்னேனேயினி நானொரு கவிசொல்லுகிறேன் அதற்கு நீ பொருள் சொல்லென்று தமிழறிவாளுக்கு நற்கீரர் சொன்ன வெண்பா,

பஞ்சவர்கள் பேரும் வடிவுமவர் குணமுந்
தஞ்சமுடனே யதனைச் சாற்றவே – நெஞ்செதிரே

யின்னவகை யினடை வடைவேயித் தனையுஞ்
சொன்னார் புலவர் தொகுத்து.

இதற்குத் தமிழறிவாள் பொருள் சொன்ன விபரம். பஞ்சதிபர்கள் பேராவது - மெய் - வாய் - கண் - மூக்கு - செவி - குணவாவது - சத்தம் - பரிசம் - ரூபம் - ரசம் - சுந்தம் உணர்வாவது - காண்டல் - கேட்டல் - உண்டல் - உடுத்தல் - உயிர்த்தலென்று சொல்லிப் பின்னையும் நற்கீரர் சொன்ன கவி,

படிதனை யிறுகப் பற்றிப் பருநில மதிரக்குத்தி
யடல்தனை யன்றுபாச்சி யங்கையும் புக்கிநின்று
கொடிபல சூழ்தலாலுங் குமுறியே வளைத்தலாலும்
வடிவுடைமாதே கேளாய் மதகரியல்ல கண்டீர்

என்று சொல்லி தமிழறிவாள் பொருள் சொன்ன வெண்பா,

சாற்றல் விளைவாகுந் தாரணியின் மீதினிலே
மாற்றலரை வெல்லவகை யுளதோ – சேற்றாடும்
ஆற்றாமையா லிந்தவம் மடுவிற்றான் கவிழ்க்கும்
ஊற்றாலே காணீ ருகந்து

என்று சொல்லித் தமிழறிவாள் விறகுதலையனைப் பார்த்துச் சொன்ன வெண்பா,

பன்னுங் கலைக்குரிய வல்லீரே யாமாகிற்
பண்ணும் விறகுதலைப் பாவலரே – யின்னமுநீ
சொல்லுதியோ வென்றுரைப்பச் சொல்லுவேன் சொல்லுமென்றாள்
வல்லமையாற் செந்தமிழன் மான்

சொல்லினவுடனே நற்கீரர் சொன்ன கவி,

ஞாலமிகுத்திருக்கும் நல்ல கரியமேனி
நானிலத்தி லறியாத தேசமில்லை
காலுமுண்டு காசினியில் நடக்கமாட்டார்
கருதறிய சிறகுமில்லை பறந்தே போவார்
சீலமுடன் மைந்தரையும் பெறுவார் கண்டீர்
சிநேகிதர் வந்தடுப்பார்கள் சேரவொட்டார்
ஆலமுண்ட கண்டத்தா ரருளினாலே
ஆராய்ந்தே யிப்பொருளை யறைந்திட்டாயே,

என்று சொல்ல தமிழறிவாள் பொருள் சொன்ன கவி,

தேங்குபா லிலுப்பை பின்னைவட வாலத்தி
செய்ய மாதளை கொய்யாதின் றேசாலத்

தாங்கிவரிக் கோபுரங்கள் சாலைசோலை
சாளரங்கு திருக்கோயிற் றருவிருக்கும்
ஆங்கிலணி யணியாக வினங்களோடும்
அணிதோப்புக் காவனங்கள டுத்துவாழும்
மாங்கனிக்குத் தூங்குதலை கீழாய்நிற்கும்
-- வ்வாலென்றிதன் பேரை வகுக்கலாமே

என்று சொலிப் பின்னும் நற்கீரர் சொன்ன கவி,

படைதனிற் சென்றவை யுருளத் தொலைத்துநேரே
பாவலரை யறுக்கவென்று படையே கூட்டும்
குடமுடைய பெரிதான குதிரையேறுங்
கோட்டை கொள்ளுங் கொக்கரிக்கும் கொள்ளையாடும்
அடலுருவ வேலெறிந்த பகையைத் தீர்க்கும்
ஆராளி புவியாளு மாற்றானல்ல
விடை மிகுத்த சிவனருளாற் றெரிந்து நின்றாய்
விமரிசையா யிக்கவியை விளம்புவாயே

என்று சொல்லத் தமிழறிவாள் பொருள் சொன்ன கவி,

செந்திருக்கும் பூச்சூடி கனலு மேந்தி
திருக்கரத்தில் மானுமொரு மழுவுமேந்தி
விந்தைதனை யிடப்பாகந் தனிலேவைத்த
விமலரது திருமகனார் விபரத்தோடு
கந்தருக்கு முன்பிறந்த கங்கைமைந்தன்
கடகரியாம் விகடதடக் கமலபாதன்
தந்திமுகனேறும் பெருச்சாளி யென்றே
தரணியிலவர் குலங்கள் சாற்றலாமே

என்று தமிழறிவாள் சொல்லிய பின்பு நற்கீரர் சொன்ன கவி,

வீரமுட னாடடைத்து முடையார்சால
விடையி லுகந்தேறு வார்சிவனாரல்லர்
பாருலகிற் புல்லருக்கு முதவியாவார்
பண்பான பூமுடியார் பாவையல்லர்
தாரணியி லவரவர்தந் தொழில் செய்விப்பார்
சகலகலை நிறமுடைய யோர் மறையோரல்லர்
சீருலகிலிவர் யாரோ தெரிந்து கொண்டு
சேயிழையே யிப்பொருளைச் செப்பிடாயே

என்று சொல்ல தமிழறிவாள் பொருள் சொன்ன கவி,

கருதலர்கள் படைநடுங்க வசுரர்மாளக்
கடகமுடை படைதுரகக் கரிதேர் மாளப்
பரிதியொளி யாமினி யகம்பத்தானும்
பாலருமெம்மையு மரக்கர் பலரும்வீழ
மருவலரைச் சிரமறுத்த திகிரிவேந்தன்
மால்தமக்கு மருகனென்னும் வள்ளிபங்கன்
செருவில்வரு மசுரர்குல காலனெங்கள்
செந்திவடி வேலரது சேவளாமே

என்று தமிழறிவாள் சொல்ல பின்பு நற்கீரர் சொன்ன கவி,

தும்பியுண்ணாப் பூமலருங் காயுமுண்டு
சோறு முண்ணார்பசி யாதுவயிறு முண்டு
வெம்பியதோர் பழம்பழுக்கு மெடுப்பார் தின்னார்
வீரமுண்டு சம்பதனால் மேய்ந்ததல்ல
நம்பியதோ ரவரவரே நம்பமாட்டார்
நல்லதல்ல நிறமுடையார் நளின காமன்
அம்புசெறி கும்பமுலை மாதேகேளா
யாராய்ந்தே யிப்பயனை யறைந்திடாயே

என்று சொல்ல தமிழறிவாள் பொருள் சொன்ன கவி,

பன்னுதமா குமச்சகெந்தி முனியே கூறப்
பரிமளகெந்தியுந் தாங்கிப் படகையோட்ட
தன்னியங்கனடம் முனியுந்த மூவிச்சாரச்
-- சந்தனராஜன் னுதித்த தகைமையாலே
அன்னவர்கள் குலத்தில் வருங் குந்திதேவி
அருள் புதல்வர் காந்தாரி யளித்ததேயன்
சொன்ன துரியோதன னுமைவர் கூடச்
சூதாடித் தோற்றதுவுஞ் சொக்கட்டானே

என்று தமிழறிவாள் சொல்ல பின்பு நற்கீரர் சொன்ன கவி,

சிற்றாடை யுடுத்திருக்குஞ் சிறுமியல்ல
சிறந்த நன்னூலணிந்திருக்கு மறையோனல்ல
ஒத்தே மெய்க் கெண்ணெயிடும் பணிக்கனல்ல
வொண் கழுத்தில் மணியுடையா ரிடபமல்ல
சித்தாரப் புரமெரித்தார் முன்னே நிற்பார்
சிறந்த பணிவிடைக் குதவாத் தீயரல்லர்
பொற்பாதம் பூண்டிருக்குந் திருமா லல்லப்
பூவையேயிக் கதையைப் புகலுவாயே

என்று சொல்ல தமிழறிவாள் பொருள் சொன்ன கவி,

மாந்தாரம் பிச்சை முல்லையறுகு கங்கை
மதியுடனே கொன்றை தும்பை மலருஞ்சூடி
யெந்தாயம் பிகையானை யிடத்திலேந்து
யீசரது திருக்கோயில் முன்னே நிற்குங்
கொந்தாரு மலராடை யணிந்து கொண்டு
குவலய மென்றிரு விழாக் கொள்ளுங் கண்டீர்
ஐந்தான கரியமு மறிந்த கோவே
யரியகொடிக் கம்பமென்றே யறையலாமே

என்று தமிழறிவாள் சொல்ல விறகுதலையனான நற்கீரர் இந்தப் பிரசங்கத்தினாலே பொழுது விடிந்துப்போகு தென்றென்னிக் கொண்டு அந்தத் தமிழறிவாளைப் பார்த்துச் சொன்ன வெண்பா,

ஆய்ந்த சயனத்திலா யிழையை யன்றியே
போந்த அணிகிடக்கப் போகுமோ – வாய்ந்தசீர்
முன்னாண் முலையு முழுமதியு மன்றியே
யென்னாகு மென்செய்வேன் யான்.

என்று விறகுதலையனான நற்கீரர் சொல்லிக் கேட்டுத் தமிழறி வாளுக்கு மன்மத விகார முண்டாகித் திரையை வாங்கிப் போட்டு விறகுதலையனைப் பாத்தாள். பார்த்தபோது அந்த விறகுதலையனான நற்கீரர் பின்னுந் தமிழறிவாளைப் பார்த்துச் சொல்லிய வெண்பா,

என்னை விறகுதலைய னெனவே யிகழ்ந்தாய்
மின்னிடையும் பெற்றதொரு மெல்லிநல்லாய் – மன்னவர்கள்
தோரா வழக்குடையான் றோளின் மேலாணைந்து
சேறாதவா றுதனைச் செப்பு

என்று நற்கீரர் சொல்லக் கேட்டுத் தமிழறியும் பெருமாள் அதிக சந்தோஷமாய் மன்மதவிகாரம்பொறுக்கப் போகாமல் எழுந் திருந்து வந்து தன்னைக் கூடச்சொல்லி விறகுதலையனான நற்கீறதேவரைக் கட்டிக் கொண்டு சொன்ன வெண்பா,

கையிறுகக் காமநெறி யிருகக் காதலுடன்
மெய்யுருகக் கண்டம் விழிபருக – மொய்குழலாள்
பாகுஞ் சுவையும் பசுந்தேனும் முப்பழும்
போலகமுறக் கூடென்றா ளாங்கு

இப்படிச் சொல்லிக் கட்டிக் கொண்டவுடனே நற்கீர தேவரும் விசாரமிட்டு நாம் இவளைக் கூடினால் சங்கப் பலகையும் பொறாது. நான்குயுகமா யிருக்கப்பட்ட நாம்

இப்போதிந்தக் காரியம் பண்ணினோமேயாகில் சங்கத்தாரும் நகைப்பார்கள். ஆகாச வாணியும் பூமிதேவியும் நகைப்பார்கள் உலகத்திலே அபகீர்த்தியுண்டாகும். இவைகளுமன்றி விறகு தலையனுக்கல்லவோ கட்டி வைக்கிறேனென்று பிரிதிக்கனை பண்ணிக் கொண்டு வந்தேன். அப்படியிருக்க நாம் இவளைக் கூடுகிறது நீதியல்லவென்று ஓடினமனதைத் திருப்பித் தமிழறி வாள் தம்மைக் கட்டிக் கொண்டகையை கவியினாலே விடுவிக்க வேண்டுமென்று எண்ணிச் சொல்லுவார் வெண்பா,

ஒருவ னொருத்தியா யூரில்லா வூர்புக்
கிருவர்க் கிருவரையும் பெற்றான் – இருவரிலே
மூத்தானைக் கொன்றான் பகைவனகர் தீயிட்டான்
றாதை வருமளவுங் கா

என்று சொன்ன மாத்திரத்திலே தமிழறிவாள் கட்டிக் கொண்டிருந்த கையை விட்டுகட்டிலை விட்டிறங்கி அப்பாலே போய்ச் சுற்றிலும் பனிநீரிரைத்து மயில் விசிறியை யெடுத்துக் கொண்டு அந்த விசிறிக்குப் பனிநீரை தெளித்து நற்கீரருக் கெதிரே நின்று விசிறிக் கொண்டு அவர் சொன்ன கவிக்குப் பொருள் சொன்ன விவரம், ஒருவனொருத்தியாவது சூரியனுக்கு ரதசாரதியாகிய அருண னென்பவன் ஒரு நாளைய வேளையிலே சூரியனைப் பார்த்து நான் தேவலோகம் பார்த்து வருகிறேனென்று சூரியனிடத்திலே அப்பணை வாங்கிக் கொண்டு தேவலோகத்துக்குப் போகிறபோது ஒரு பெண் வடிவாய் வேஷங் கொண்டு தேவலோகம் போய்த் தேவேந்திரன் முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் புடை சூழ மேனகை ரம்பை ஊர்வசி திலோர்த் தமையென்று சொல்லப்பட்ட தேவகன்னிகைகள் நடனஞ் செய்யக் கொலுவாயிருக்கிற தேவேந்திரன் சபைக்கு இந்தப் பெண்ணான அருணன் போனான். அப்போது இந்தப் பெண்ணைக்கண்டு தேவேந்திரன் மோகித்துக் கூடினான். அந்த நேரமே ஒரு பிள்ளைபிறந்து அந்தப் பிள்ளையை யெடுத்துக் கொண்டு திரும்பவும் அருணன் சூரியனிடத்திற்கு வந்தான். சூரியன் அவனைப் பார்த்து இந்தப் பிள்ளை யுனக்கே தென் றான். நான் ஸ்ரீ வேஷங்கொண்டு தெய்வலோகத்தில் தேவேந்தி ரனுடைய சபைக்குப் போயிருந்தேன் அந்ததேவேந்திரன் என்னைக் கண்டு மோகித்துக் கூடினான். அப்போது பிறந்தது இந்தப் பிள்ளையென்று சொன்னான். அந்த விசேஷங் கேட்டு சூரியன் அருணனைப்பார்த்து அந்த ரூபத்தை நான் பார்க்க வேண்டுமென்றான். நல்லதென்று சொல்லி முன்னெடுத்திருந்த

ஸ்ரீரூபத்தையெடுத்தான். அதுகண்டு சூரியனுமோகித்துக் கூடினான். அப்போதும் ஒரு பிள்ளை பிறந்தது. அந்த இரண்டு பிள்ளைகளிலே மூத்தபிள்ளை வாலி இளைய பிள்ளை சுக்கிரீபன் அந்த வாலியைக் கொன்றவர் இராமர் இராமருக்குப் பகையாளி இராவணன் இராவண நகராகிய இலங்கை இலங்கைப் பட்டணத்தைத் தீயிட்டவன் அநுமார் அந்த அநுமாருக்குத் தகப்பன்வாயு அந்த வாயுவாகிறது காற்று நான் கட்டிக் கொண்டது இறுக்கமா யிருக்கிறதென்று அந்தக் காற்று வருந்தனிலும் நில்லென்று சொன்னீரென்று தமிழறி வாள் சொல்லிக் கொண்டிருகிற வேளையில் ஒரு கெவுளி சொல்லிற்று. அதை நற்கீரர் ஆண்டுபார்த்து நன்றாயிருக்கிறது. நாம் வந்த காரியம் செயமாகுமென்றெண்ணிக் கொண்டிருக்கிற போது தமிழறிவாளும் அந்த கெவுளியை யாண்டு பார்க்கு மளவில் அதுதனக்கு மரணஞ் சொல்லுவதென் றறிந்து கொண்டு நற்கீரரைப் பார்த்து அந்த கெவுளி யென்ன சொல்லுகிறதென்று கேட்டாள். அதற்கு நற்கீரர் இனியொரு க்ஷண நேரத்தில் சாவு சொல்லுகிறதென்று சொன்னார். அது கேட்டுத் தமிழறிவாளும் அப்படி பிரப்தியிருந்தால் தப்புகிற தில்லை உமக்கு அந்த கெவுளி யென்ன சொன்னால்தா னென்ன நீர் சொல்லுகிற கவியைச் சொல்லுமென்றாள். அதுகேட்டு நற்கீரர் சொல்லுவார், நல்லது நானொரு கவிசொல்லுகி றேனந்தக் கவிக்குப் பொருள் சொல்ல வல்லவியோ வென்றார் அதற்குத் தமிழறிவாளும் நீர் அத்தனை வல்லவரோ வென்றாள் ஆனாலென்ன நான் தோற்றேனேயாகில் என் குடுமியும் பூணூலு மறுத்துப் போட்டு உன் வீட்டிலே வெள்ளாட்டி யையலாயிருந்து கொண்டு உனக்கு ஏவல் பணிவிடை செய்கிறேன். நீ தோற்றால் அதற்கென்ன சொல்லுகிறாயென்று கேட்க நான் தோற்றதே யுண்டானால் என் அரண்மனையு மிடிப்பித்துத் தமிழறிவாளென்கிற பெயரையு மாற்றிப்போட்டு என் தலையை யுஞ்சிரைப்பித்துக் கழுதையின்மேலேற்றி ஊர்வலங் காட்டி யோட்டி விடுமென்றார். அதற்கு நற்கீரர் சொன்னது நீ தோற்றதே யுண்டானால் எனக்கு இஷ்டமானன் எவனோ எந்த நீச்சனுகாகிலும் உன்னைக் கட்டிவைப்பே னென்றார். நல்லது அப்படியே ஆகட்டுமென்றாள். அப்போது நற்கீரதேவர் இலக்கண காரியங்களினாலே வெல்லக் கூடாதென்று நினைத்து தாம் வருகிறபோது காட்டுவழியிற் கண்டதை ஒரு வெண்பாவாகப் பிணைத்துக் கொண்டு கண்ட சுத்தியாகச் சொன்ன வெண்பா,

நச்சுத் தேரறி நடுகாட்டில் வேடுவிச்சி
பச்சைக் கொடியாட நின்றாளே – இச்சித்தே
மேலே வனங்கவிர்ந்து மின்கொண்டு போகின்ற
மூலபலன் கண்டாய் மொழி

என்று சொன்ன மாத்திரத்திலே யிந்தக் கவியைக் கேட்டு தமிழறிவாளுந்தான் கற்ற பஞ்சலக்ஷணத்திலும் மற்று முண்டான நூல் வழியெல்லாம் ஆராய்ந்து பார்த்து ஒன்றுந் தெரியாதபடியினாலே விசாரப்பட்டு இத்தனை காலந் தமிழறியும் பெருமாளென்றுபேர் பெற்று யாருமெதிரில் லாமல் கீர்த்தி படைத்திருந்தோம் இந்த வெண்பாவுக்குப் பொருள் தெரியாமற் போச்சு தென்றால் தமிழறியும் பெருமாள் தோற்றாளென்று உவலகத்திலே யிகழ்ச்சி யாகச் சொல்லிக் கொள்வார்களேயென்று வெகுசிலேசத்துடனே நற்கீரரைப் பார்த்துத் தனக்கு ஒன்றுந் தெரியாதபடியினாலே மொத்தார்த்த மாகச் சொன்ன வெண்பா,

உண்டி கொடுத்தார்க்குயிர் கொடுத்தா ரென்னாது
வண்டார் குழலாள் மகிழவன்றி – உண்டி
உண்டாருஞ் செத்தாரு முண்டிருந்தா ருண்டீர்
உண்டா நரகம் புகார்.

என்று சொல்லிக் காண்பித்து நிலைக் கண்ணாடியை யுடைத்து அந்த ஓட்டினால் தனது வயிற்றைப்பீறிக் கொண்டு சீவனை விட்டாள். பொழுது விடிந்தது நற்கீர தேவரும் தமிழறிவாளை மூடிவைத்து அவள் போகிற கள்ளவழியைக் கண்டுபிடித்து அந்த வழியாகப் புறப்பட்டு போய் விறகு தலையனிடத்திற்கு வந்து தம்முடைய வேஷத்தை நீக்கி - சைவடம் வேஷ்ட்டி தலைப்பாகை கட்டிக்கொண்டு கடுக்கண் மோதிரமிட்டுக் கொண்டு விறகுதலையனை யெப்போதும் போலே விறகு தலையனுக்குண்டான வேஷம் போட்டு அங்கே யிருக்கச் சொல்லி நற்கீரர் பாதக் குறடிட்டுக் கொண்டு கையிற் பொற்பிரம்பு பிடித்துக் கொண்டு நடந்து போய்ச் சோழ ராஜனைக் கண்டு அட்சதை தொடுத்து ஆசீர்வாதம் பண்ணி அந்தச் சோழ ராஜன் இருக்கச் சொன்னவிடத்லே யிருந்தார். இப்பால் மரகத வடிவியென்பவளி ராத்திரி மகள் விறகு தலையன் பக்கலுக்குப் போனவளின்ன மெழுந்திருந்து வரவில்லையென்று தன் தோழிமாருந்தானுமாக அந்தப் படுக்கை வீட்டுக்குப் போய் பார்க்கிறபோது மரித்துக்கிடக் கிறது கண்டு அடித்து அலறிவிழுந்து எழுந்திருந்து இப்படிக் கொற்றமகளை யெந்தப்பிறப்பிலே காணப்போகிறேனென்று

வெகு துக்கத்துடனே தன் மகளைப் பார்த்துச் சொன்ன, வெண்பா

நற்கீரர் சொற்கவிக்கு நாடவிட மன்றியிலே
பொற்கொடியாட்டு த்திரங்கள் போதாமற் – சிற்றிடையாள்
கண்ணாடி யாலுயிரைப் போக்கினாள் காரிகையும்
பண்ணாள் தமிழறிவாள் பார்

என்று சொல்லி மரகதவடிவியுந் தோழிமாருந் கற்றுச் சொல்லிப் பெண்கள் மற்றுமுண்டான பேரனைவரும் புறப் பட்டு கூச்சலிட்டுக் கொண்டு போய்ச் சோழ ராசாவின் முன்னே வந்து முறையிட்டார்கள். அப்போது சோழ ராஜனும் வெகுவாய் வியா கூலப்பட்டு மரகத வடிவியை யழைத்து வந்தவனார் போனவனார் நடந்த விபரமெப்படியென்று கேட்கற மரகதவடிவி சொல்லுவாள் சுவாமி ஆரோ தெரியாது வெட்டியான் போலேயிருந்து அந்தி வேளையிலொரு கட்டு வாழைத்தண்டைத் தனது தலைமேலே வைத்துக் கொண்டு விறகுவிலை கூறி கவிசொல்லிக் கொண்டு வந்தான். அவன் இராத்திரியெல்லாம் மகளுடனே பிரதிவாதித்துக் கொண்டிருந் தான். நாங்களுஞ் சிறிது நேரம் விழித்துக் கொண்டிருந்தோம். பிற்பாடு அவரவர் அங்கே படுத்துக் கொண்டு நித்திரை போனோம் பிற்பாடு என்ன நடந்ததோ ஏது நடந்ததோ அவன் சொன்ன கவிக்குப் பொருள் தெரியாமற்றான் போச்சுதோ ஏதொன்றுங் காணக்கூடாது மாண்டுபோனாளென்று சொன்னாள். அது கேட்டுச் சோழராசன் மிகவும் விசனப்பட்டுச் சொல்லுவான், முன்னே தங்களுடைய வங்கிஷத்திலே ஒரு புறாவுக்காகத் தன்னுயிரை யீய்ந்தது ஒரு மாயக் கன்றுக்காகக் குமாரனை வண்டியிலரைத்ததுமாக இப்படி இருக்கப்பட்ட சோழன் வமிசத்திலே யிப்படிக் கொத்த பழி வந்தால் நானேது செய்வேனென்று மிகவுஞ் சிந்தையில் வியாகூலமாய் அந்தச் சபையைப் பார்த்துச் சோழராசன் சொன்ன, வெண்பா

முற்பழிக் கொன்றா ருயிரைய்ன்று முறைவருவர்
கற்பகத் தேரூர்ந்த பழிக்காகாதே – சொற்பகரு
மைப்பழிக்குங் கூந்தல் வனமுலையாள் தன்னுடைய
விப்பழிக்கு மென்செய்வேன் யான்

என்று சோழராசன் சொல்லிப் பின்னையும் விசாரிக்குமளவில் அந்தச் சபையைப் பார்த்து மரகத வடிவியானவள் அந்த சபையினிருக்கிற நற்கீரரைக் கண்டு அவர் வசனிக்கப்பட்ட வசனத்தைப் பூராயமாகக் கேட்டு நிதானித்து இராத்திர வந்து

பிரசங்கம் பண்ணினவன் இவனே யென்றறிந்து கொண்டு சோழராசனைப் பார்த்து மரகதவடிவி சொன்ன வெண்பா,

கையாற் கொடையான் கதலிவிறகு விற்பான்
பொய்யானு மென்னூற் பொருள்காண்பான் – மெய்யாக
மையாரும் வேற்கண் மடமானை மன்னவனே
ஐயாகோ கொன்றா ரவர்.

என்று சொல்லக்கேட்டு நற்கீரதேவர் சோழராசனைப் பார்த்துச் சொன்ன வெண்பா.

பொய்யாத முத்தமிழின் பொற்றொடிக்குச் சூழ்ந்தகொலை
கொய்யா மதுமாலை கொற்றவனே – மெய்யாக
மையாரும் வேற்கண் மடமானை மன்னவனே
கையாரக் கொல்லிலோங் காண்

என்று சொல்லக் கேட்டு சோழராஜனும் நற்கீரரைப் பார்த்து நீயாரென்று கேட்க அதற்கு நற்கீரருஞ் சோழராசனைப் பார்த்துச் சொன்ன வெண்பா,

நாலாயிரத் துத்தொளா யிரமாஞ் சங்கத்தின்
மேலான நற்கீர ரெம்பெயர்தான் – வேலால்
உளைத்த புறாவுக்காக வுன்சதையை நேர
யளைத்தே யரிந்தவனே யாம்.

இப்படிச் சொன்ன நற்கீரரைப் பார்த்து சோழராசா சொன்ன வெண்பா,

உறவற்றார் போலிவ் வுறையூர்க்குப் புக்கிப்
பொறையறை காணும் பூதலத்தி – லறையும்
நறைகமழு நற்கீர ரானாக் காலிந்த
விறகு விற்பதேனோ விளம்பு

என்று சொன்ன சோழராசனைப் பார்த்து நற்கீரர் சொன்ன வெண்பா,

கூறுவார் கூறும் பரிசேகு றைவறியாள்
வீறுமென் னென்றுவிட வறியாள் – மாதுடனே
ஏகுவா ரேச்சும் எளிதாகு மன்றியிலே
விசுவாசம் வாங்கதென் மின்

என்று நற்கீரர் சொல்ல இராசாவினுடைய மந்திரி நற்கீரரைப் பார்த்துச் சொன்ன வெண்பா,

பூவேசில பறிப்பர் பூனேசில படுவர்
பாவேயடி தலையின் பண்பாகுஞ் – சாவே
மதுரங்கள் வண்டுண்ணலும் பாவே விடுவாம்
இதுதவிர வுண்டோ வியம்பு

இப்படி மந்திரி சொல்லவே நற்கீர தேவருக்கு மகா கோபம்வந்து, இவனே நம்மைப் பார்த்துச் சொல்லுகிறவ னென்று அப்போது சோழராஜனுக்கும் அற்புத வாயுவுண்டு அந்தவாயுவை மந்திர வுச்சாடனம் பண்ணி அந்த மந்திரி பேரிலே குதிக்கவிட்டார். அதுகண்டு மந்திரியும் வெட்கித் தலையிறங்கிக் கொண்டான். அதைச் சோழ ராசன் பார்த்துப் பயந்து எழுந்திருந்து நற்கீரரை அங்கீகரித்து உம்முடைய மகிமையைப் பார்க்கத்தக்கன பேர் யாவரென்று நற்கீரரைத் தழுவிக் கொண்டு நல்ல வார்த்தைகளைச் சொல்லித் தேவரீர் அனுக்கிரகத்தினாலே தமிழறிவாளை யெழுப்பி இரட்சிக்க வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணிக் கொண்டான். அப்போது நற்கீரர் சந்தோஷப்பட்டு அவளை யெடுத்துவரச் சொல்லென்றா ரப்படியே போய்த் தமிழறிவாளை யெடுத்து ஒரு கட்டிலின்பேரிலே போட்டுக் கொண்டு வந்து நற்கீரர் முன்னே வைத்தார்கள். பட்டணத்திலுண்டான சகல ஜெனங் களும் வந்து புதுமையாகப் பார்த்துக் கொண்டிருக்கிற சமையத்திலே நற்கீர தேவருந் தமது கமண்டலத்தில் ஜலங் கொண்டு வந்து அபிமந்திரித்துத் தமிழறிவாள் பேரிலே யிறைத்துச் சொன்ன வெண்பா,

வீறா யிவளுக்கும் மிக்கோரும் வேந்தனுக்கும்
மாறாக நாம்வந்த வாறறியக் – கூறாய்
விழுந்தநிண முள்ளடங்கி வெள்ளெலும்பு மொன்றா
யெழுந்திருக்க வேண்டு மினி.

என்று சொன்னவுடனே வயிறுபீறுண்டுச் சரிந்து விழுந்திருந்த நிணமனைத்து முள்ளடக்கி ஒன்றிப் பொருந்தி நித்திரை கொண்டிருந்து நீங்கினவள் போலத் தமிழறிவாள் விழித்துப் பார்த்து அந்தக் கவிக்குப் பயன்சொல்லிக் கொண்டெழுந்தாள் - பயன்சொன்ன விபரம், பாரை பாரையென்றெழுந்திருந்தாள் - அதற்கு நற்கீரதேவர் சொன்னவிபரம் பூரைபூரை யென்றார் - அதன்பிறகு அந்தச் சபையைப் பார்த்து வெட்கித் தலையை யிறங்கிக் கொண்டு நின்றாள் - நின்றவளைப் பார்த்து - நற்கீரர் சொன்ன வெண்பா,

சிறந்த தமிழின் றிறமறிய மாட்டாமல்
திறந்தனையோ வுந்தனைக்கொன் றோமோ – அறிந்த

செந்தமிழாஞ் சோழனுக்குச் சேரவந்து நின்றுதொழுஞ்
சொந்தமுன் னாச்சியுடன் சொல்

என்று நற்கீரதேவர் சொல்லத் தமிழறிவாள் சோழராஜனைப் பார்த்துச் சொன்ன வெண்பா,

நானே பழிபடைத்தேன் நாடாதென் னாவுரையால்
தேனார் கமலத் திசைமுகனார் – தானே
தலையோட்டி லுள்ளபடி தப்புமே சொல்லீர்
கலைகோட்டி மாமுனியே காண்.

என்று தமிழறிவாள் சொல்லிச் சோழராஜன் அந்த வசனத்தைக் கேட்டு சந்தோஷிக்கத் திரும்பவுந் தமிழறிவாள் சொல்லுவாள், தமிழுக்கு அகஸ்தியன் வடமொழிக்குப் புலத்தியனு மிகவர் களுடைய கல்வியை அறியும் போது என்னையொழிய மற்றாருமில்லையென்றிருக்க வேண்டாம் கல்வி யதிகங்கண்டு பிரமனானவர் சரஸ்வதியை நாவிலே தரித்துக் கொண்டார் - விஷ்ணுவானவர் மார்பிலே தரித்துக் கொண்டார் - ஈஸ்வரன் சங்கத்தின்கீழே யிருக்கிறார் என்று சொல்ல, சோழராஜன் சந்தோஷப்பட்டுத் தமிழறியும் பெருமாளைக் கையைப் பிடித்துக் கொண்டு நற்கீரர் கையிலே கொடுத்து இவளை நான் பெற்ற பெண்ணாக வளர்த்தேன். இந்தப் பெண்ணைத் தேவரீர் கலியாணம் பண்ணிக் கொள்ளும் உமக்கு வேண்டிய ராச்சியமும் விட்டுச் சிறிது திரவியமுங் கொடுக்கிறேன் என்று சொன்னான். அந்த விசேஷங்கேட்டு நற்கீரர் சோழராஜனைப் பார்த்துச் சொன்ன வெண்பா,

ஆறோர் கடமை யடவுடனே கொண்டுமிக
வீறா யுலகாளும் வேந்தனே – கூறா
யெனக்கிவளு மேமகள்கா ணென்றன் மருகன்
றனக்குரியா ளாவளினி தான்

என்று சொல்லிக் கேட்டுச் சோழ மகாராஜன் ஏனையா மகளென்கிறீர் அப்படிச் சொல்லவேண்டாம். இவளைக் கலியாணம் பண்ணிக் கொள்ளுமென்ன அதற்கு நற்கீரர் சொல்லுவார். இப்போது செத்தவளைத் திரும்பவும் நாம் எழுப்பினோமே ஆனபடியினாலே நமக்கு மகளல்லவோ. இதுவுமல்லாமல் நம்முடைய மருமகன் ஒரு பையலிருக்கிறான் அவனுக்கு இவளைக் கட்டிவைக்க வேண்டுமென்று வெகு பிரயாசைப்பட்டு இராத்திரியெல்லாமிவளுடனே தர்க்கித்தோ மென்றார். அதுகேட்டுச் சோழ ராஜன் சந்தோஷப்பட்டுத் தேவரீர் மருமகனுக்கு நாங்களெத்தனை புண்ணியம் பண்ணி

னோம் அப்படியே மருமகனை யழைப்பியுமையா வென்றான். அதுகேட்டு நற்கீரர் அங்கேயிருந்த படியே தானே அடா விறகு தலையா இங்கே வாடாவென்று கூப்பிட்டழைத்தார். அந்த விசேஷங்கேட்டு விறகுதலையன் பாசிப் பல்லும் பூசாமுகமும் வெந்த வீட்டுக் கழி மரம் போல காலுங் கையும் அரையிற் சுற்றிய கொடியும் அதிலே சொருகிய அரிவாளும் இவ்விதமான கோலத்துடனே வந்து நின்றான். அப்போது தமிழறிவாளும் பார்த்து முன்னாலே நாம் இவனைக் கடைத்தெருவிற் கண்டு காறியுமிழ்ந்தோமே. அவன்தான் வந்தான் என்ன அதிசய மென்று வெட்கித் தலையையிறங்கிக் கொண்டு வெகுவாய் மனது சஞ்சலமாயிருந்தாள். சோழ ராஜனுங்கண்டு மிகவு வியாக் கூலத்துடனே நற்கீரரைப்பார்த்து சுவாமி இவளிருந்த இருப்பும் இவள் நடபடிக்கையும் வெகு பிரகாசமாய்க் கீர்த்தி யடைந்திருந்தும் இராச்சிய முழுவதும் அறியுமே; அப்படிக் கொத்தவளை யிப்படிக் கொத்தவனுக்குக் கட்டி விக்குறோ மென்றா லதற்கு நான் சொல்லப் போகிற தென்ன விருக்கிறது. தேவரீர் சித்தத்திற்குச் சரியானபடி செய்து கொள்ளுங் களென்றான். அப்போது தமிழறியும் பெருமாளும் நற்கீரர் பாதத்திலே சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு கைகட்டி நின்றுக் கொண்டு சொன்ன வெண்பா,

பாதம் பணிந்தேன் பழையதமிழ் முனியே
யேதுமறியே னினியுரை யேன் – பேதையேன்
செய்பிழை பொறுத்து திருவுளத்துக் கேற்றபடி
யெய்துவித்துக் கொள்ளு மினி

என்று சொல்லிச் சிந்தை வியாக்கூலமாய் நொந்துக் கொண்டிருக்குந் தமிழறிவாளையுஞ் சோழ ராஜனையும் பார்த்து நற்கீரதேவர் முன்பிறப்பு உணர்த்திய விபரங்கேளுஞ் சோழ ராஜாவே, முன் ஜென்மத்திலேயிந்தத் தமிழறிவாள் ராஜ குமாரத்தி. இந்த விறகு தலையனும் ராஜகுமாரன். இவர்கள் இரண்டுபேரும் இச்சை யானதுஞ் சாவடியிலே யிவனை யிருக்கச் சொல்லி ஓலையெழுதிப் போட்டதும் அங்கே கபடு வந்து இரண்டுபேருஞ் சீவனைப் போக்கிக் கொண்டு ஆவேசமாயிருந்ததும் ஔவையார் கையிலே வரம்பெற்றதும் பிற்பாடு இவள் வந்து மரகதவடிவி வயிற்றிலே பிறந்து தமிழறிவாளானதும் இராஜகுமாரன் போய் விறகுதலையன் வயிற்றிலே பிறந்ததும் பூருவம் இவளுக்கு பிரம்ம சிருஷ்டிப்பு ஐந்து வயது அதிலே பன்னிரண்டு வயது கன்னிகையா யிருந்ததும் ஒரு வருஷம் ஆவேசமாயிருந்ததும் அப்பாலிப்போது இருப்

பதைந்து வயது கன்னிகழியாமலிருந்ததும் இந்தப் பிறப்பிலே அந்த பன்னிரண்டு வருஷமும் அந்த ராஜ குமாரனுடனே கூடி வாழத்தக்கதாக நற்கீரர் வந்து ஒரு இராத்திரியெல்லாம் இவளுடனே தர்க்கப் பிரசங்கம் பண்ணி செயிப்பாரென்று ஔவையார் சொல்லிப்போனதும் இவை களை யெல்லாம் ஆதியோ டந்தமாய்த் தெரியத்தக்கதாக முதற்பிறப்புணர்த்திச் சொல்லிக் காண்பித்து அப்போது ஔவையார் என்பேரைக் குறித்துச் சொல்லிப் போன படியினாலே நாம்வந்து புத்தி செலுத்தினோமென்றார். அப்போது சோழ ராஜனுந் தமிழறி வாளும் மரதவடிவியும் நற்கீரரை நமஸ்கரித்து தேவரீர் சித்தத்திற்குச் சரியானபடி செய்துக் கொள்ளுமென்றார்கள். அப்போது நற்கீரதேவருந் தமிழறிவாளைப் பார்த்துச் சொன்ன வெண்பா,

> ஊருமுறையூரே ஒண்டொடி யாங்கன்னிகை நின்
> பேருந் தமிழறிவாள் போராமே – நேரா
> யுனை விரும்புவானை யுந்தெய் வந்தந்த
> மனையிடத்துப் போயிருந்து வாழ்

என்று சொல்லிக் காண்பித்து அந்நேரமே பச்சைப்பந்தல் போடுவித்து நல்ல முகுர்த்த வேளையிலே அந்த விறகு தலையனுக்குத் தமிழறிவாளைக் கலியாணம் பண்ணி வைத்துச் சோழராஜனைக் கொண்டு இவர்களிருப்பதற்கு உப்பரிகையும் ஊரும் விடுத்து பூஷண வகைகளுங் கொடுப்பித்து நீங்கள் இரண்டுபேருஞ் சுகமாக வாழ்ந்திருந்து ஔைவாயர் அனுக் கிரகப்படிக்குச் சிவனுடைய பாதார விந்தஞ் சேரக்கடவீர் களென்று ஆசிர்வதித்து அனுப்பி வைக்க இவர்களிரண்டு பேரும் நற்கீரதேவர் பாதத்திலே சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணி அனுப்பிவித்துக் கொண்டு தங்களரண்மனைக்குப் போனார்கள் பிற்பாடு நற்கீரருக்குச் சோழராஜன் ஒரு வரிசை பூஷணங் கட்டுவர்க்கமுங் கொடுத்துப் பச்சைப் பல்லக்கு மிட்டு நமஸ்கரித்து நற்கீர தேவரை மதுரைக்கு அனுப்பி வித்தான். நற்கீரதேவருஞ் சோழராஜன் கையிலனுப்பிவித்துக் கொண்டு விருது பாடிவைத்துக் கொண்டு மதுரைக்கு வருகிறபோது பாண்டியராசாவுஞ் சங்கத்தாரும் எதிர்கொண்டு வந்து சந்தோஷப்பட்டு நற்கீரதேவரை யழைத்துக் கொண்டு போனார்கள். நற்கீரதேவரும் உறையூருக்குப் போய்த் தமிழறிவாளை வென்ற விபரமெல்லாம் விஸ்தாரமாகவேதான் சொன்னார். அதுகேட்டு பாண்டியராசன் மகாசந்தோஷத்தை யடைந்து நற்கீரதேவருக்கு வேண்டிய வெகுமானங்கொடுத்

தான். சங்கத்தாருடனே கூடிச் சங்கப்பலகையின் மீதெழுந்த ருளியிருந்தார். இப்பால் தமிழறிவாளும் ஔவையார் அனுக்கிரகப்படிக்கு இருபத்தைந்து வயதளவுங் கன்னி கழியாம லிருந்தபின்பு நற்கீரதேவர் அருளினால் பூருவோத்திரமறிந்து பன்னிரண்டு வருஷம் வரைக்குஞ் சகல சம்பத்தையும் சவுக்கியமாய் அதிக சந்தோஷத்துடனே யனுபவித்துக் கொண்டிருந்து பிற்பாடிருவரும் மோக்ஷத்தை யடைந்தார்கள்.

தமிழறியும் பெருமாள் கதை முற்றிற்று.

அளகேசுவரராசன் கதை

அழகாபுரி என்றொரு பட்டணம். அதிலே அளகேசன் என்றொரு ராசா. அந்த ராசாவுக்கு ஏலவார் குழலாள் என்றொரு பெண்ணுண்டு. அந்த அளகேசன் என்கிற ராசா ராச்சிய பாரம் பண்ணுகுற காலத்தில் இந்தப் பெண் அழகுள்ளவள் ஆனபடியினாலேயும் புத்தி வித்தையிலே அதிக சாமார்த்தியம் ஆனபடியினாலேயும் ராசா இந்தப் பெண்ணுக் கிச்சையான புருஷன் வந்தால் ஒழிய மற்றொருவருக்கும் விவாகம் பண்ணிக் குடுக்கப் போகாதென்று ஒரு உப்பரிகை கட்டி அந்த உப்பரிகையிலே எலவார் குழலாள் எங்குற பெண்ணையும் அவளுக்குப் பிரியமான தோழி மாரையும் கூட வைத்தார். இப்படியே அவ்வுப்பரிகைக்குள்ளே பனிரெண்டு வயசு மட்டும் இருகிற நாளிலே மறு தேசத்தில் ஒரு மண்டலாபுரி என்கிற பட்டணத்திலே சங்கா ராசா வென் றொரு ராசா இருந்தார். அவருக்கு நூற்றியெட்டு தேவி மாருண்டு. அவர்களெல்லாருக்கும் பிள்ளையில்லாததுனாலே வெகு தபசு பண்ணி இவர்களில் ஒருத்தி ஒரு பிள்ளையுண்டாயிருந்து நல்ல சவுந்தரிய முள்ளதாய் பெற்றாள். அந்த பிள்ளை பிறந்த உடனே ராசாவும் தேவிமாரும் வெகு சந்தோஷப்பட்டு அந்தப் பிள்ளையை நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியுமாக வளர்த்தார்கள். இப்படி வளர்க்கப்பட்ட பிள்ளையை பள்ளிக் கூடத்தில் வைத்தாலும் வாத்தியார் அடிப்பாரென்றும் சிலம்பம் படிக்காவிட்டால் செட்டி அடிப்பானென்றும் செல்வமாய் வளர்த்தார்கள். இப்படியிருக்கிற நாளிலே ஒரு நாள் ராசா தன் பிள்ளையைப் பார்த்து இந்த மூடனான பிள்ளை என்னத்துக்கு இங்கு இருக்குறது. இந்த பிள்ளை இல்லா விட்டால் என்னவென்று கோபித்துக் கொண்டு யிவன் எங்கேயாகிலும் போய் விடச் சொல்லுங்கோள் என்று தேவி மாருடனே சொன்னான். தேவிமாரும் குமாரனை அழைப்பித்து ராசா உன் பேரில் மெத்த கோபமாயிருக்குறார். நீ எங்கே யாகிலும் போய் பிழை யென்று கொஞ்சம் திரவியத்தைக் கொடுத்தனுப்பி விட்டார்கள். அப்படியே ராசகுமாரனும் பிறப்பட்டு அளகாபுரி என்கிற பட்டணத்தில் வந்தான். வந்தவன் தெரு வீதியிலே போகும் போது உப்பரிகையின் மேலிருக்குற எலவார் குழலி என்கிற ராசகுமாரத்தி. இவனைக் கண்டு தான் இவனோடே

கூடவேணுமென்று தன் காதிலிருக்கிற ஓலையைக் கழுற்றி தன் கைநகத்தினால் எழுதி நான் உம்மைக் கண்டு பேசவேணும் இராவைக்கு நான் வருகிறேன் வருமளவும் மண்ணாயம் என்கிற திருவாசலிலே இருமென்று எழுதி தான் குளித்தோடுகிற மஞ்சள் நீராற்றிலே போட்டாள். அதையிந்த ராச குமாரன் கண்டெடுத்துக் கொண்டு போய் தனக்கு ஓலை வாசிக்கத் தெரியாத படியி னாலே ஓலையைக் கையிலே பிடித்துக் கொண்டு இருந்தான். இப்படியிருக்கையில் அந்த திருவாசலிலே ஒரு குஷ்டரோகி உடம்பெல்லாம் சொறிபிடித்திருக்கிறவன் அந்தத் திருவாசலிலே பள்ளிக் கூடம் வைத்துக் கொண்டி ருப்பான். அவனிந்த ராச குமாரனைக் கண்டு எவனயாவி ராசாவே ஓலையை திருப்பித் திருப்பி பார்க்குறீர் நான் வாசிக்கவோ வென்று கேட்டான். நல்லது வாசியென்று அவன் கையிலே ஓலையைக் கொடுத்தான். அவனுமதை வாங்கித் தனக்குள்ளே தான் மெதுவாய் வாசித்துக் கொண்டு தானந்தப் பெண்ணை யனுபோகம் செய்ய வேணுமென்று நினைத்துக் கொண்டு வாத்தியார் ராசகுமாரனை பேய் கொண்ட ராசகுமாரனே நீர் ஏன் இந்த நிற்பாக்கியமான பட்டணத்துக்கு வந்தீர். அய்யோ இந்தப் பட்டணத்து ராசா முன் அநேகம் ராச குமாரர்கள் வந்தார்கள். அவர்கள் எல்லாரையும் கொன்று போட்டான். உம்மையுங் கண்டால் கண்ட உடனே கொல்லுவான். நீரிந்தச் சனமே இந்தப் பட்டணத்தைவிட்டு போக வேணுமென்றெழுதியிருக்கு தென்று சொல்லி நீர் ஏன் இங்கிருக்குறீர் போமய்யா என்று சொன்னான். ராசாகுமாரன் இந்தச் சேதிகேட்ட மாத்திரத்தில் இந்த ஓலையை முதலாய் கேளாமல் மூடன் ஆனபடியினாலே பட்டணத்தை விட்டு பிறப்பட்டுப் போனான்.

அவன் போன பிறகு குஷ்டரோகி எழுந்திருந்து தேங்கா யோட்டிலே நல்லெண்ணை வார்த்துக் கொண்டு மஞ்சளும் அரைப்பும் அரைத்துக் கொண்டு ஆற்றுக்குப் போயி தலை முழுகி உடம் பெல்லாஞ் செங்கல்லாலே தேய்த்தும் மஞ்சள் அரைப்பைத் தடவி குளித்துப் புடவையுந் தப்பிக் காய வைத்துக் கட்டிக் கொண்டு சந்தனம் கெந்தபொடி பூவிது வெல்லாம் இரண்டு காசுக்கு வாங்கிமேலே பூசிக் கொண்டு திருவாசலில் வந்திருந்தான். அப்போது சாமம் பதினைந்து நாழிகை சென்ற பிறகு இராச குமாரத்தி தோழி மாரை பொற்பிள்ளையத்திலே பாலும் பழமும் பலகாரமும் பரிமள கெந்தவர்க்கங்களும் திரவியம் ஆடையாபரணங்களும் கொண்டு

வரச் சொல்லி தான் உப்பரிகைக்குள்ளிருந்து நூலேணி வழியாக இறங்கி பின்னாலே அவர்களை வரச் சொல்லி முன்னாக மண்ணாட்ட மென்கிற திருவாசலிலே வந்து தங்கியிருக்கிற குஷ்டரோகியை ராசகுமாரனென்று கட்டித் தழுவிக் கொண்டாள். தழுவின உடனே அவன் தலைமயிற் அணிற் பிள்ளை கூண்டு போலவும் மீசை வெள்ளாட்டு மீசை போலவும் கைகள் வெந்த வீட்டில் பிடுங்கின கைமரம் போலவும் கால்கள் எண்ணக்காரர் போலவும் உடம்பெல்லாம் துர்க்கந்தமாயிருந்தது. பலாக்காய் முள்ளுபோலவும் பிடவை யெல்லாம் மத்திப் பான்றொயத் தாய் போலிரத்தச் சீழ்களும் மிகுந்த துற்கெந்தமாயிருந்தது. ஆனபடியினாலே இவள் பன்னிரெண்டு வயது மட்டாக பரிமள சுகங்களைப் பூசிக் கொண்டு சுத்தயாயிருந்த படியினாலே இந்த துர்க்கந்தம் பொறுக்க மாட்டாமல் இறந்து விட்டாள். இவளிறந்த உடனே அந்த குஷ்டரோகி அவ்விடத்தை விட்டப்பாள் போயி விட்டான். அவன் போன பிறகு முன் வரச் சொன்ன தோழிகள் திருவிளக்கும் பொற் பள்ளயத்தில் சலமும் வாசனை கஸ்தூரி பரிமள சுகந்தங்கள் ஆடையாபரணங்கள் கொண்டு வந்தவர் களந்த இராச குமாரத்தி மரித்துக்கிடக்குறதைப் பார்த்து அங்காலாய்த்து நாமிங்கே வைத்துக் கொண்டிருக்கலாகா தென்று உடனே எடுத்துக் கொண்டு நூலேணி வழியாக வெளி உப்பரிகைக் குள்ளே கொண்டு போய் வைத்து ராசா உடனே உமது குமாரத்தியை விஷம் தீண்டி செத்துப் போனாளென்று சொன்னார்கள். அவளுடலையும் அடக்கம் பண்ணின பிறகு அவளுடைய ஆவேஷம் அந்த திருவாசலிலே ஒரு வருஷமாக நின்றது. அந்த திருவாசலிலே வந்து நித்திரை பண்ணின பேரை எல்லாங் கொல்லும். ஆகையால் யாருமந்த திருவாசலிலே வந்து படுக்குறதில்லை.

இப்படி இருக்குற நாளையிலே ஒரு நாள் ஔவையார் அளகாபுரி பட்டணத்துக்கு வந்து அங்கே விளையாடுகிற பயல்களையழைத்து தம்பிமாரே நான் இங்கே ராவைக்குப் படுத்துக் கொள்ள இடமுண்டோ வென்று கேட்டார். அதற்குப் பிள்ளைகள் சொன்னது அம்மையாரே இந்தப் பட்டணத்திலோரு திருவாசலுமுண்டு அந்த திருவாசலிலே யாதமொருவர் படுத்துக் கொண்டால் அதிலொரு பேய் இருக்கிறது. படுத்திருக்குறவர்களை அந்தப் பேய் கொன்று போடுகிறது என்று சொன்னார்கள். அப்போது ஔவையார் நல்லது தானே பேயைப் பேயடிக்குமோ என்றவள் வந்து திருவாசலிலே படுத்துக்கொண்டு நித்திரை பண்ணினாள். நித்திரை பண்ணுகையில் முதற்சாமத்தில் அந்தப் பேய் வந்து

எற்றெற்றென்றது. அப்போது ஔவையார் அருளிச் செய்தவெண்பா.

வெண்பா விருகாலிற் கல்லாணை வெள்ளோலை
கண்பார்த்து கையா லெழுதானை – பெண்பாவி
பெற்றாளோ பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
யெற்றோமற் றெற்றோமற் றெற்று.

என்று சொல்லக்கேட்டு ஆவேசம் திரும்பிப்போய் மறுபடி சாமத்துக்கு வந்தது. யெற்றெற் றென்றது. அவ்வையார் சொன்ன வெண்பா.

எண்ணாயிர மாண்டு நீறிற் கிடந்தாலு
முண்ணீரமில்லா கிளிஞ்சலைப்போல் கனமாய்ப் – பொற்றோடி
மாதர் புணர் முலைமேல் சாற்வாரை
யெற்றோமற் றெற்றோமற் றெற்று

என்று சொல்லக் கேட்டு ஆவேசம் திரும்பிப் போய் நாலாஞ் சாமத்துக்கு யெற்றெற்றென்று வந்ததுக்கு அவ்வையார் சொன்ன வெண்பா.

கருங்குளவிக் கெட்டாக் கவித்த கனிபோல்
விரும்பினக் கொன்றீயாங் தடைவாழ்க்கை – யறும்பனுவல்
பற்றி யிருந்த பழம்பொருளைக் கொள்ளாரை
றெற்றோமற் றெற்றோமற் றெற்று

என்று அவ்வையார் நாலு சாமத்துக்கும் கவிசொன்ன படியினாலே அந்த ஆவேசம் வந்து அவ்வையாரை வணங்கி னானாரென்றும் எனக்கு மோட்சம் எப்போது கிடைக்குமென்று கேட்க, அவ்வையார் சொல்லுவாள் வாரும்பொண்ணே இந்தப் பட்டணத்து ராசாவின் குமாரத்தியுனக்குப் பிரமதேவன் கட்டளைப் படிக்கு ஐம்பத்தொன்பது வயது சென்றால் ஒழிய உனக்கு மோட்சமில்லை. நீ பன்னிரண்டு வயதுப் பரிகையிலிருந்த தாயி பிறிதொரு ராசகுமாரனுக்காயி அந்த ஒரு வருஷமாகி ஒரு வயதிருந்தா ஆக பதிமூன்று வயது போக்கின நாற்பது அறுவயது சென்றால் ஒழிய மோட்சமில்லை என்றாள். இப்பால் எனக்கு ஒரு வகை சொல்லி கட்டளையிடுமென்று ஆவேசம் காலில் விழுந்ததுக்கு அவ்வையார் சொல்லுவாள் வாராயா வேசமே நீயொரு பாம்பின் வயிற்றிலே பிறந்து அந்த ராசாவின் குமாரனைக் கடிப்பாய். அவன் உன்னை அடிப்பான் அப்போ ரெண்டு பேரும் சீவனை விட்டு இறந்து காமபுரமென்றொரு பட்டணமுண்டு. அந்த பட்டணத்திலே கள

புத்துச் சோழனென்று ஒரு மன்னனுண்டு. அவருடைய அரண்மனையிலே முந்நூற்றம்பது ஆயிரம் பெண்களுண்டு. அந்தப் பெண்களுக்கெல்லாம் தலைவியானள் மரகத வடிவி என்றொரு பெண்ணுண்டு. அவள் வயிற்றிலே நீ போய் பிறப்பாய். அப்போ தந்த பட்டணமெல்லாம் செண்பகப்பூ வாசனையாயிருக்கும். ஆகையால் செண்பகவடிவியென்று பேரிடுவார்கள். பிறகு உன்னைப் பள்ளிக்கூடத்தில் படிக்கவைப் பார்கள். அப்போது அதிக சாமார்த்தியாவாய் அதற்குப் பின்னுனக்கு தமிழறியும் பேருமிடுவார்கள் இதுவுமல்லாமல், நீ பிறக்கும் காலம் வசந்த காலம் மக்காலத்திலே ஒரு பெண் பிறக்கும். அவளுக்கு வசந்த மாலை என்று பெயருண்டாகி உனக்குப் பாங்கியாயிருப்பாள். அந்த ராசகுமாரனும் அந்த பட்டணத்திலே ஒரு விறகு தலையன் வயிற்றிலே பிறந்திருப் பான். நீ கன்னியழியாமலிருந்து நாலு வயது மட்டும் தேடித் தின்பாய். பின்பு, அந்த விறகு தலையன் மகன் உன்னை கலியாணம் பண்ணுவான். நீ இருபத்திரண்டு வயது மட்டும் கூடியிருந்த பின்னுனக்கு மோட்சம் கிடைக்கும் என்று அவ்வையார் திருவுளம் பண்ணினாள்.

அதற்குப் பின் அவ்வை யாருக்கு நமஸ்காரம் பண்ணி ஆவேசம் போய் விட்டுது. அப்போது காப்புறு நகரங் காந்தக் கல்லாலே கோட்டை கட்டி மெழுகுச் சிலையினாலே கவுசனை போட்டிருக்கும். ஆனபடியினாலே அந்த பட்டணத்துக்கு உரையூரென்று பெயர் உண்டாச்சுது. அவ்வூரிலே களபுத்துச் சோழ ராசாவின் அரமனையிலே பிறக்கத்தக்கதாக ஒரு பாம்பின் வயிற்றிலே அடைந்து சென்மித்துப் பிறந்து சிறிது நாளைக்குப் பிறகு முன் மூடனாயிருந்த ராசகுமாரன் காட்டில் வரக்கண்டு இந்தப் பாம்பு அவனைக் கடித்தது. அவனுமந்தப் பாம்பையடித்தான். அடிப்பட்ட பாம்பும் சென்றது. கடிப் பட்ட ராசகுமாரனும் சீவனை விட்டிறந்தொரு விறகு தலையன் வயிற்றிற் பிறந்தான். பாம்பு உறையூரில் மரகத வடிவி வயிற்றில் சென்மித்தாள். சென்மித்த உடனே பட்டணமெங்கும் செண்பகப்பூ வாசனை சூழ்ந்து கொண்டது. அதனால் இந்தப் பெண் பிறந்த உடனே செண்பக வடிவியென்று பெயருமிட்டு சிறிது நாளைக்குப் பிறகு, இந்தப் பெண்ணைக் கொண்டு போய் ராசாவுக்கு காண்பித்தார்கள். ராசாவும் இந்தப் பெண்ணழகைக் கண்டு பிராமணரை அழைப்பித்து சாஸ்தரங்கேட்டார். அவர் களும் பிள்ளை பிறந்த நேரத்தைப் பார்த்து நாள் நட்சத்திரம் கணித சாஸ்திரங்களை சோதித்து ராசா உடனே சொன்னார் கள். மகா நல்லது. இனிமேல் இந்தப் பெண் அதிக சாமத்தி யாவாள் தண்டிகை பல்லக்கேறுவாள் என்றார்கள். அப்போது

ராசாவும் சந்தோஷப்பட்டு தாசிமாரை அழைப்பித்து இந்தப் பொண்ணை நிலவரையில் வைத்து வளர்க்கச் சொல்லி சிலவுக்கு வேணுமென்றதை கட்டளையிட்டு இன்னமும் வேணு மென்ற காரியத்துக்கு தம்முடனே சொல்லச் சொல்லி அனுப்பினார். அப்படியே தாதிமார் கொண்டு போயி நிலவரையில் வைத்து வளர்க்கும்போது, அந்த காலம் சித்திரை மாசம் வசந்த காலம் அக்காலத்திலொரு பெண் பிறந்தது. அந்தப் பெண்ணுக்கு வசந்தமாலை என்று பெயர்கள். அந்த காலத்தில் தானே பன்னீராயிரம் பெண்கள் பிறந்தார்கள். வளர்ந்த செண்பகவடிவிக்கு பாட்டாதாரைக் கொண்டு சங்கீதமும் நாடகரைக் கொண்டு நிறுத்த வித்தையோடு நூற்றெட்டு தாளவகையும் ஆடக்கற்றாள். அதின் பிறகு பரத்தியாயரை யழைப்பித்து பள்ளிக் கூடத்தில் வைத்து படிப் பித்தார்கள். வடுகு, கன்னடம், ஆரியம், இளந்தமிழ், செந்தமிழ், கொடுந்தமிழ் முதலான பதினெட்டு பாஷையும் கற்று, அம்பத்தோர் அட்சரமும் அறிந்து, அறுபத்தினாலு கலைக் கியாணமும் தொண்ணூற்றாறு தத்துவமும் பதினென் புராணமும், நன்னூல், காரிகையும், சிந்தாமணி, ராமாயணம் முதல் பலவுங் கணக்கதிகார முதல் பல கணக்கும் மற்ற இலக்கண, இலக்கியங்களும் குறையறக்கற்று வல்லவராய் பனிரெண்டு வயதான உடனே ராசாவுக்கு அறிக்கை பண்ணி னார்கள். ராசாவும் கொலுவிலிருந்து கொண்டு இவளை வரவழைத்தான். இவளும் வந்த உடனே அங்கிருந்த சபையைப் பார்த்து சொன்னதென்ன வெனில், வெண்பா.

ஆசுகவி வாணர்முன் அன்பாயேன் புன்சொல்லைக்
கூசாமன் முன்னினுனு கூறுவென் – நேசியா
வெறுக்க கடவீரோ வித்தையறிஞோரே பொறுக்கவென்று
தானிரு ந்தாள் போய்.

அப்போதன்பத்தாறு தேசத்து வித்து வாங்கிஷருங் வேதியர் வித்தியதரரும் இவளோடு தர்க்கம் பண்ணவர் களையும் வேத தர்க்கம் பண்ணும் வேதியர்களையும் சகல சாஸ்திரங்கற்ற வித்தியாதரர்களையும், இலக்கண இலக்கியம் படித்தவர்களையும் வென்று, அல்லாமல் சங்கீத ராகத்தோடு பாடிய நளின வினோத்தமும் அன்றி நூற்றெட்டு தாள வினோதத்தோடு நடனமாடிய சிற்பலங்காரத்தையும் அந்த ராசா சபை எல்லாம் பூரித்து அங்கமெல்லாம் புளகிதமாகி பளபளாவென்று மெச்ச ராசாவும் இரு புயங்களும் புடைத்து உடலமெல்லாம் மயிர்க்கூச் செறிந்து மனமிக்க மகிடசியாய் அவளை தன்கிட்ட வரவழைத்து பற்பல அணி பூணும்,

ரத்தினம் இழைத்த பொன் ஒட்டியாணம், பதக்க முத்தாவடம், பவழத்தாவடம், மாணிக்கத் தாவடம், சிரசாபரணம், பாதரந்தண்டை, வெண்டைய மற்றும் பட்டுச் சேலை, சரிகை சேலை, மேகலை, புனுகுசவ்வாது, பரிமளசந்தனமும் பாக்கு வெத்திலையும் கொடுத்து தண்டி பல்லக்கும் வளதொழிவ சந்தமாலைக்கு ஆடையாபரணம் பல்லக்குங் கொடுத்து, நித்தஞ் சிலவுக்கு ஆயிரம் பொன் கொடுக்கக் கட்டளை பண்ணி உறையூரில் தமிழர் மண்டபங் கட்டியதிலே அறுபத்தி நாலு சூஸ்திர வாசலும் பளிங்கு மாமண்டபமும் போசன சாலையும் கட்டிக் கொடுத்து வரும் வழியில் குங்குமச் சேறுவிடுத்து கட்டி முடித்த மண்டபத்துக்குள்ளே போகச் சொல்லி ராசா தமக்கு ஆனை, குதிரை ரதங்களால் சதுரங்க சேனை புடைசூழ பேரிகை முழங்கி சின்ன மெக்காளம், மொடா, டம்பமாய் பட்டணம் வலமாய் சுற்றி, அந்த மண்டபத்திற் போய்ச் சேர்ந்தாள். சேர்ந்த மண்டப வாசலில் வீரசேனை, சேர்வைக்காரர் காத்திருக்க தமிழறியும் பெருமாள் வாழ்ந்திருந்தாள். இப்படி பன்னிரண்டு வயது துவக்கி இருபத்து நாலு வயதளவும் கன்னியழியாமல் இருந்து கொண்டு வந்தவர்களுக்கு யெதிராக தன்னூழியக் காரிகளை அனுப்பி இந்த பாட்டைச் சொல்லச் சொல்லுவாள். அதாவது,
வெண்பா

> துய்யஞ்சு பானந்தொடுத் தனங்கனிப் பொழுது
> மெய்யஞ்சு விட்டாலும் வேண்டுவளே – பொய்யாத
> கையஞ்ச றியாதகாளை தோற் சேருவளோ
> மெய்யஞ்சா பெற்ற பின்.

அவர்கள் இதற்குப் பயன் சொல்லத் தெரியாமற்றொட்டு ஆயிரத்து ஐம்பது பொன்னும் கொடுத்துப் போவார்கள். இப்படிக்கு அவள் தமிழைப் பாராட்டிக் கொண்டிருக்கிற படியினாலே மன்னர் மன்னரும் பற்பல துறைகளும் செல்வக் குமாரர்களும் மந்திரி பிரதானிகளும் தீவு தீவாந்திரத்தாரும் பல கவிவாணரும் இந்தப் பாட்டுக்குப் பயன் அறியாத படியினாலே ஆயிரத்து ஐம்பது பொன்னும் கொடுக்க வாங்கி நோட்டக் காரனைப் பார்வையிடச் சொல்லி களஞ்சியத்திற் சேர்க்க கொடுத்தவர்களும் தோற்றுப் போவார்கள். இப்படியிருக்க இவளுடைய அழகு சவுந்தரியமும் புத்தி விஸ்தாரமும் கல்வி தெளிவும் உலகமெங்கும் விளங்கியதனால் சோழி என்கிற பட்டணத்திலே இருக்கப்பட்ட சோழி என்கிற ராசா இவள் வல்லமையைக் கேட்டு களபுத்துச் சோழனுக்கு பாற்குடங்

கட்டி வைத்து தமிழறியும் பெருமாளை பார்க்க வேணுமென்று தமது ஸ்தானாபதிகளை அந்த ராசாரண்டைக் கனுப்பி அவரை கிட்டழைத்துக் கொண்டு வாருங்கோ ளென்னார். ஸ்தானாதிபதிகளும் போய் களபுத்து சோழ ராசாவைக் கண்டு சோழ ராசா என்பவர் தமிழறியும் பெருமாளைப் பார்க்க வேணுமென்கிற மனதாய் உம்மை கேட்டழைத்துக் கொண்டு வரச்சொன்னாரென்று கேட்க்க ராசா அவளை அனுப்பி வைக்கக்கூடாதென்னார். ஸ்தானாபதிகள் திரும்பி வந்து சோழி என்கிற ராசா உடனே சொன்னார்கள்.

அப்போது அந்த ராசாவும் மிகவும்கோபித்துக் கொண்டவனுக்கித்தனை வீராப்போ பார்ப்போம் அவனிருக்கிற உறையூரை பிடித் தழிப்பேன் என்று அந்த ஷணமே தனது சதுரங்க பெலத்துட படையெடுத்து தானும்போய் அந்த பட்டணத்தைச் சுற்றிக் கொண்டு யுத்தம் பண்ணயிலங்கையேறி காந்தக்கல் கோட்டையைப் பிடித்து அந்த ராசாவையுங் கொன்று போட்டு தானுறையூர் சோழனென்று பேருமிட்டுக் கொண்டு அங்கே தானேயிருந்தான். அப்போ தமிழறியும் பெருமாளை கொலுவுக்கு வரச்சொல்லி ஏவலாளை அனுப்பி னான். அன்னேரமே தமிழறியும் பெருமாளும் வசந்தமாலையும் தண்டிகை பல்லாக்கு மேலேறிக்கொண்டு நாலாயிரம் பெண்கள் வாழும் பரிசையும் எடுத்துக் கொண்டுவர தனை புடைசூழ்ந்து வர சங்கீத வாத்திய மேளங்களுடனே வந்திறங்கி கொலுவி லிருக்கிற ராசாவைக் கண்டார்கள். அப்போ ராசாவும் இவளைக் கண்ட உடனே மதிமயங்கி விழுந்தான். விழுந்த ராசாவை ராசாவின் தேவிஅவரைச் சுற்றி திரைக் கட்டச் சொல்லி அந்த திரைக்குள்ளே தான் வந்து தன்னழகிய ரூபத்தை அவருக்கு காட்டி ராசாவை யெடுத்துமோக விகார மயக்கத்தைத் தேற்றினாள். பின்னையும் அந்த ராசா கொலுவிலிருந்த மந்திரி பிரதானி படைத்தலைவர் தளகரதா சேனாதிபதி யாதுரைத் தனர். சம்பிறிதி கணக்கர் காரியக்காரன் அனைவரும் இருக்க இவர்களுக்கள்ளே சிலர் மூர்ச்சை போனவரும் சிலர் மதிமயங்கி னவரும் சிலர் சீவனை விட்டிறந்த வருமாய்ப்போனார்கள். அன்னேரம் ராசா திடுக்கென எழுந்த உடனே விலையறப் பெற்ற வஸ்திரங்களையும் கேசாதிபாத மட்டுமணிய ஒரு வரிசை ஆபரணங்களுங் கொடுத்து தினம் தினம் இரண்டு நேரமும் கொலுவுக்கு வரச்சொல்லி அனுப்ப அதற்கு தமிழறியும் பெருமாள் ராசாவை நோக்கிச் சொன்னது எனக்கு ஆபரணங் கொடுத்தாலும் என்னத்துக்கு, பிரதி யுத்தாரச் சொல்லாதபேரை நான் சேரேனென்று சொன்னாள். அந்தப்

படியே ஆகட்டுமென்றி ராசா சொல்லி அனுப்பினார். அப்படியே இவர்களும் தங்கள் மண்டபத்துக்குப் போயிருந்து தினந்தின மிரண்டு நேரமுங் கொலுவுக்கு வரப்போக இருப் பார்கள். இப்படி இருக்கிற நாளையிலே ஒரு நாள் காலமே கொலுவில் வந்திருந்து மத்தியானம் வீட்டுக்குப் போம்போது முன்சொன்ன விறகு தலையன் தலைமே லெடுத்துக் கொண்டு பீளைக் கண்ணாய் கோட்டுவாய் வடிந்தவனாய் அழுக் கடைந்த மேனியனாய் கையில் வெட்டறிவாளுந் தோளில் கோடாலியும் வைத்துக் கொண்டு இவர்களுக்கு எதிராக வந்தான். வந்தவனை தமிழறியும் பெருமாள் கண்டு காரித்துப்பி பாங்கியுடனே சொல்லுவாள். வெண்பா,

பாரிவனை பாங்கியும் நீ பங்கமுற்ற வங்கமுள்ளா
னாரிவனைச் சேர்வா ரறிந்துறையாய் – பேரிழைகேள்
பூர்வத்திற் றொந்தப் புருஷனென்றார் பொற்றொடியார்
சேருவறென் றாய்ந் தே.

தமிழறியும் பெருமாள் சொன்னதுக்கு மறுமொழி பாங்கி சொல்லியும், தமிழறியும் பெருமாள் இப்படிப்பட்ட அவலக்ஷணம் உள்ளவனை அனுபோகஞ் செய்யத் தக்கவர் உண்டோ சீச்சி என்று காரியுமிழ்ந்து போம்போது வசந்த மாலை சொல்லுவாள். வெண்பா

சண்பகத்தை மோரின் சடத்துக்கா காதெனினும்
பண்பகத்தார் மோராரோ பாருலகில் – பண்பகத்தார்
புல்லாரும் நல்லாரும் பொற்பாரும் பொற்பில்லாடு
தல்லாரையும் சேர்வா ரின்று.

இப்படிப்பட்ட குணமுண்டே ஆயிரங்கோடி தவம் பண்ணி மானிட சென்மமாய் பிறக்க வேணும். பிறந்தாலும் இன்னும் மாயிரங்கோடி தவம் செய்துதான் பிள்ளையாய் பிறக்க வேணும். இப்படி பிறந்தாலும், இன்னும் ஆயிரங்கோடி தவஞ்செய்து அறிவுள்ளவனாய் பிறக்க வேணும். இப்படிப் பிறந்தாலும் அறிவும் வடிவும் உள்ளவனாய்ப் பிறப்பதரிதே. ஆதலால், ஆண்பிள்ளைகளைத் தூஷணிக்கலாமோ வேண்டாம் என்றாள். விறகு தலையன் தன்னை காரியுமிழ்ந்து சீச்சி யென்றதைக் கேட்டு மிகவுஞ் சினந்து ஒரு பெண் கண்டு இப்படி சின்னமாக நிந்திக்கிறதோ என்று இரு கண்களும் சிவந்து விறகு கட்டையும் யெறிந்து போட்டு உடனே ஆரண்யமான காட்டுக்குள்ளே பிறப்பாட்டுப் போனான். அந்த காட்டுக்குள் ஒரு துற்கா தேவி கோவிலுண்டு அந்த கோயிலிலே

போய் மெத்தவும் இளைப்புடனே பேசமாட்டாமற்படுத்துக் கொண்டிருந்தான். அப்போ துற்கா தேவி பிறப்பட்டு இந்த வனத்துக்குள்ளே மனிதன் யாதென்று நினைத்து நீ யாரடா என்று கேட்டாள். அப்போதிவன் மெத்த விடாய்பட்டு கிடந்தவன் எழுந்து தாயே நான் விறகெடுத்துப் போய் பட்டணத்தில் தினமானம் விற்று வயறு வளர்த்துக் கொண்டு வந்தேன். இப்போதோ ராசா வீட்டு வெள்ளாட்டி என்னைக் கண்டு காரி துப்பினாள். ஆகையால் இப்படிப் பட்டவளை கூடிச் சேர வேணும் இல்லாவிட்டால் சாகவேணும் என்று சொன்னான்.

அதற்கு துற்காதேவி சொல்லுவாள், நீ அப்படி செய்வதில் என்ன புண்ணியம், ஒன்றுமில்லை. நீ போற வழியிலே ஒரு சந்தன விருஷம் இருக்குது. அந்த மரத்தை வெட்டிக் கொண்டு குபேரனைப் போல இரு என்று அடையாளஞ் சொன்னாள். அப்போது நல்லதென்றவன் திரும்பி வந்து சந்தன மரத்தைக் கண்டு ஒரு சுமை அயிரம் பொன் பெறும். இந்த சுமையெல் லாம் வெகு திரவியத்துக்கு விற்கலாமென்று நினைத்துக் கொண்டு ஒரு செட்டி வீட்டிலே சில கட்டு போட்டான். அதை யெல்லாஞ்செட்டி வாங்கிக் கொண்டு நீ கேட்ட மட்டும் பணம் தருகிறேன் இனித் தேவை யில்லை என்று சொல்ல இவன், ஆயிரத்தைம்பது பொன் மாத்திரம் வேணுமென்று வாங்கிக் கொண்டு, வாணியனுக் கொரு கட்டும் நாவிதனுக் கொரு கட்டும் வண்ணானுக்கொரு கட்டும் மருத்துவ பிராமணனுக்கு ஒரு கட்டும் கெந்த பொடிகாரனுக்கு ஒரு கட்டும் பொயண்டருக்கு ஒரு கட்டும் கொண்டு வந்து போட்டான். யிவர்கள் அல்லாரும் நீயேன் கொண்டு வந்து போடுகுறாய் என்று கேட்டார்கள். அதுக்கவன் சொல்லுவான் நான் தமிழறியும் பெருமாளண்டை போக வேணும். அது காரியத்துக்கு நீங்கள் வரவேணுமென்றான். அப்போது நாவிதன் சவரம் பண்ணினான், அப்போது வானியன் எண்ணையும் அரைப்பும் கொண்டு வந்தான். வண்ணான் உடுக்க வேண்டிய நல்ல வஸ்திரங்களைக் கொண்டு வந்து கொடுத்தான். மருத்துவ பிராமணன் மருந்துண்டை கொடுத் தான். பூமாலைக் காரன் மாலை; பூச் செண்டு பூப்பந்து, கஸ்தூரி, பரிமள கந்த வர்க்கங் களைக் கொண்டு வந்து கொடுத்தான். ராசா வுடைய ஊழியக் காரர் வந்து இவனுக்கு ஆடை ஆபரணங்களைத் தரித்தலங் கரித்தார்கள். செட்டி ஆயிரத்தைம்பது பொன்னும் பாக்கு வெத்திலையுங் கொண்டு வந்து கொடுத்தான். ராசாவின் பல்லக்குகாரர் தண்டிகையை கொண்டு வந்து கொடுத்தார்கள். பணிவிடைக்காரர் பணிவிடை செய்து வரவும், அரமணை

வாசக்காரரும் சேவுகர் புடை சூழ்ந்து வரவும், மேளதாள சங்கீத காரரும் ரிங்கித ராகவாச்சியங்களியம்பி வரவும் விறகு தலையன் தண்டிகையின் மேலேறிக் கொண்டு மகா வாடம் பரத்தோடு மன் மதனைப் போலே தமிழறிவாளிருக்கும் விடத்துக்குப் போனான். அப்போது தமிழறிவாளுடைய ஊழியக்காரர் சிவந்து யாரென்று கேட்டாள். அதற்கு விறகு தலையனவளை நோக்கி உங்கள் நாச்சியரிடத்துக்கு வந்தே னென்றாள். இந்த விசேஷத்தைக் கேட்டு நல்லதென்றாள். தமிழறிவாளுடனே போய்ச் சொன்னாள். இவளும் நல்ல தென்று அவன் கொண்டு வந்த பொன்னை வாங்கி தோட்டக் காரன் கையில் கொடுத்து பார்வையிட்டு பொக்கிஷத்தில் சேருங்கள் என்றாள். அப்படியே தோழிகள் பொன்னை வாங்கி பார்வையிட்டு பொக்கிஷத்தில் சேர்த்தபின், வந்த பரிவார மேளதாக சங்கீத காரருக் கெல்லாம் பாக்கு வெத்திலை கொடுத்தனுப்பி விட்டார்கள். விறகு தலையன் மாத்திரம் அங்கே காத்திருந் தான். பின்பு தமிழறிவாளும் வசந்த மாலையும் நாடக சாலையிலே வந்திருந்து சற்று நேரத்துக்குப் பிறகு இவனை அழையாமல் எழுந்து போனார்கள். அதற்கு விறகு தலையன் நானித் தனை பொன் கொடுத்தும் என்னை அழையாமல் போனதென்ன என்று கேட்டான். இதைக் கேட்ட இருவருந் தோழிகளை அனுப்பி பழமொழி புது மொழி யுண்டோ வென்று கேட்டனுப்ப அப்போதிவன் எனக் கொன்றுந் தெரியாது என்று சொன்னான். ஆனபடியினாலே நாம் வந்தபோது ஒன்னும் சொல்லவில்லை கேட்டபோது ஒன்றுந் தெரியா தென்றான். இவனைக் கொண்டு நமக்கு அக்கரை யில்லை என்று பேசாமற் போய் விட்டார்கள்.

பின்பு இவன் அங்க தானே அன்று இரவு முழுதுமிருந்து பொழுது விடிந்த உடனே என் கையிற் பொன்னை வாங்கிக் கொண்டே என்னை அழையாமற் போனதென்ன என்று இவளிருக்கிற சயன கூடத்துக்கு போவோமென்று போகையில் அங்கிருக்கிற தோழிகளெல்லாருங் கூடிக் கொண்டு இவனை அடித்து பிடரியை மடக்கித் தள்ளிவிட்டார்கள். அதற்கிவன் மித மில்லாத கஷ்டிபட்டு இவர்கள் செய்குற அனிதத்துக்கு கேழ்வி முறை யில்லையோ வென்று வெளியே போய் ராசாவண் டையிற் போய் நடந்த செய்தியைச் சொல்ல அதற்கு ராசா அவள் சொன்ன கவிக்கும் பயன்தெரியாதபடியினாலே உன்னை தள்ளி விட்டார்கள், போவென்று சொன்னான். இப்படி ராசா சொன்னதைத் கேட்டு மகா நல்லதாச்சு என்று பிறப்பட்டு மதுரைக்குப் போய் சங்கத்தார் முன்னே முறைப்பாடு சொல்லி கூவினான். அவர்கள் இதை ஒன்றுங்

கேட்டவர்களல்ல. அதற்கிவன் உங்களுக்கு சங்கத்தாரென்று பேரேன்? கூட்டமேன் நான் வந்த காரியத்தை இன்னதென்று கேளாமல் பாராமுகமாயிருந்தால் நான் சும்மா போவேனோ என்று சங்கத்தாருக்கு சாப்பிட வருகிற பாற்கஞ்சியை கொண்டு கொடுக்க வொட்டாமல் மறித்துப் போட்டான். அப்போது சங்கத்தார் இவனை அழைத்து என் பிள்ளாய் நீ வந்த காரிய மென்ன வென்று கேட்டார்கள். அப்போதிவன் சொன்னது.

ராசா வீட்டு வெள்ளாட்டி ஒருத்தி என் கையில் ஆயிரத்தைம்பது பொன் வாங்கிக் கொண்டு என்னை தன்னண்டையில் அழையாமல் தோழிகளைக் கொண்டடித்து ஒட்டி விட்டாள். இதை ராசா உடனே சொன்னேன். ராசாவும் அவள் சொன்ன கவிக்கு பயனறியாத படியினாலே ஓட்டி விட்டாள் போவென்று சொன்னான். இதற்கு மேல் இனி நானென்ன செய்வேன் உங்களண்டைக்கு வந்தேன் என்றான். அப்போது சங்கத்தார் சொன்னது. நல்லது ஒரு வெண்பாவும் எழுதிக் கொடுத்து ஆயிரத்தைம்பது பொன்னுங்கட்டிக் கொடுத்து அவளண்டைக்கு அனுப்பினார்கள். அப்போதும் அந்த ஆயிரத்தைம்பது பொன்னும் வாங்கிக் கொண்டு கவியையும் வாங்கி வாசித்துப் பார்த்தந்த கவிக்கு பதிலாகவள் எழுதின வெண்பா,

> அய்யஞ்சிறுபத் தஞ்சோ ரிரவைத்தான் பெறினும்
> வெய்யகணை யைந்துமேல் வரினுந்தைய – னல்லாள்
> கையஞ் சறியாத காளைதோற் சேருவளோ
> மெய்யஞ் சறப்பெற்ற மின்

பின்னுமொரு வெண்பா.

> ஆடை பருத்தி தருமா கிலங்கொருத்தி
> யேடா ரருபத்தி நூற்றென – செய்வாற்
> மூடாகல் வித்திறமை யுண்டாகில் கற்றநூற்றன்னை
> சவிப்பரோ சங்கத் தவர்.

இப்படி இந்த கவியை எழுதி விறகு தனலையன் கையிற் கொடுத்தாள். அதை அவன் வாங்கிக் கொண்டு போய் சங்கத்தார் கையிற் கொடுக்க, அவர்களும் அந்த கவியை வாசித்துப் பார்த்து நாமெழுதின கவிக்கு ஒரு பெண் சாதியோ மறுகவி எழுதுகுறது என்று நாற்பத்தொன்பது பேருங் கோபித்துக் கொண்டு அவள் கிட்டப் போவெழுந்திருந் தார்கள். அப்போது சங்கத்தாருள் ஒருவனாகிய நற்கீர தேவர் ஒரு பெண் பிள்ளைக்காக நாற்பத்தொன்பது பேரும் போக வேணுமோ நாமொருவனாப் போய் அவளுடனே தற்கித்து

வென்று வருகிறேன் என்று சொன்னார். பின்னுமோர் சபதம் சொன்னது வெண்பா.

சென்று றையூர்புகுந்து சேயிழையைக் கண்டுமிக
வென்று தமிழுரைத்து மின்னனையை – யென்று
விருந்திக்கச் செய்தமிளா வெறுவிய னாவென
மருந்திருக்கூர் நகரில் வந்து

இப்படிச் சொல்லிக் கொண்டு பிறப்பட்டு நற்கீர தேவர் வரும் போது, மற்ற நாற்பத்தெட்டு பேரும் அரகரா வென்று இருசெவிகளையும் கையால் மூடிக் கொண்டு நல்ல தென்றனுப்பினார்கள். அப்படியே விறகு தலையனும் நற்கீர தேவருமாய் வரும்போது எண்ணையிலொரு சீலையைத் தோய்த்துக் கொண்டு ஒரு மூங்கிற்கணுவும் ஒரு காந்தக் கல்லும் ஒரு கரும்பும் செம்பருத்தி பூவும் ஒரு கழற்கொடியும் நாழிகை மணலும் ஒரு நண்டும் ஒரு தேங்காயும் கொண்டு வரும் போது காட்டுக்குள்ளே ஓர் இருளனும் ஓர் இருளச்சியும் கல்லைக் கிழங்கு பிடிங்கித் தின்றுக் கொண்டிருக்கக் கண்டவ் வழியையுங் கடந்து உறையூரில் வந்தொரு சுமை வாழைத் தண்டைக் கட்டிக் கொண்டு தம்முட உடுப்பையுங் கடுக்கென் மோதரமெல்லாம் விறகு தலையனுக்கு கொடுத்து விறகு தலையன் துணியை வாங்கி தாமரையிற் சுற்றிக் கொண்டு வாழைத் தண்டு சுமையை தலையிலெடுத்துக் கொண்டு உறையூர் தெருவில் விலை கூறிக் கொண்டு போக விலை கேட்க குறவர்களுக்கு ஆயிரத்தைம்பது பொன்னென்று சொல்லிப் போக இதைக் கண்டவர்கள் இந்த வெறகு எரிவதெப்போ வென்று கேட்க நற்கீரதேவர் சொல்லும் வெண்பா

உள்ளீரம் பச்சை உலரா விறகிதுவே
கொள்ளீர் விறகுதலைக் கோதையீர்மெள்ள – கலைக்கு
விலைநல்குங் கனங்குழலீர் கொள்ளீரவிமெள்ள கொள்ளீர்
விலைக்கு விறகோ விறகு

பின்னையும் சொல்லுவார் வெண்பா

சாலவுலத்துண்டு சாலத்தால் புகையும் பொய்
நீலவிழிமாதரே நின்றெறியு மேலாய் – கலைக்கு
விலை நல்குங் கனங்குழலீர் கொள்ளீர்
விலைக்கு விறகோ விறகு

யென்றிப்படி சொல்லுகிற கவியை கேட்டுப் போய் தமிழறியும் பெருமாளுக்குச் சொன்னார்கள். அதுக்கவள்

தன்னண்டையிலிருக்கிற தோழிகளை அனுப்பி விறகு விலை என்ன வென்று கேட்டு வரச் சொன்னாள். அப்போது பாங்கி வந்து விலையென்ன என்று கேட்டார்கள். அப்போது நற்கீரதேவர் சொல்லுவார் வெண்பா.

சிந்தையுடன் பற்றிகொண்டார் தாமறிவார் சேயதிதனை
நந்தும் விறகளியீர் நாரியரே – யிந்த
விறகுவிலை தன்னை விலைக் கூறக்கேளீர்
விறகாயிரம் பொன் விரைந்து

பின்னையுஞ் சொல்லுவார் வெண்பா,

அரவணை யிலேதுயிலு மாய னறிவா
தெரியவிலை செப்பு வன்ரீற் – புரியுங்
கலையணியுஞ் சிற்றிடையின் காரிழையீர் நீவிர்
விலைவிறகு கொள்ளீர் விரைந்து

இப்படிச் சொன்ன கவிகளை தோழிகள் கேட்டுக் கொண்டு போய் தமிழறியும் பெருமாள் உடனே சொல்லுவாள். அப்போது, தமிழறியும் பெருமாளும் வசந்த மாலையிருவரும் யோசனை பண்ணிக் கொண்டு இவன் என்னைக் கன்னியழிக்க வந்தவன்தான். இது நிசமென்று தோழியரே அவன் போவதுக்கு முன்னே விலை கேட்டு நீங்கள் அங்கே தானே நில்லுங்கள் என்றாள். அப்போது இரு நூறு பெண்கள் மாதளங்கனியைப் போல கொங்கைகளைக் காட்டிக் கொண்டு விறகு தலையன் கிட்டே வாடா வாடா விறகைக் கொண்டு மண்டப வாசலிலே போடா போடா வென்று பூவையர் சொல்ல அதற்கு விறகு தலையன் சொன்ன வெண்பா,

வெய்யோன் கதிரெறிப்ப வேற்கண்ணாள் பின்றொடரப்
பைய வருவேன் பயனறியேன் – துய்யமலர்த்
ஐடங்கண் வாயந்த மயிலனையீர் கொள்ளீர்
விலைக்கு விறகோ விறகு

விறகு தலையன் சொல்ல கற்றுச் சொல்லும் பெண்கள் கேட்டுக் கொண்டுபோய் தமிழறிவாளுக்குச் சொன்னார்கள். அதற்கவளின்னம் போய் அவன் சொல்லுகிற கவியெல்லாம் கேட்டுக் கொண்டு வாருங்களென்று அனுப்பினாள். அப்படி வந்தவர்கள் விறகு தலையனைச் சுற்றி நின்றுக் கொண்டு பாப்பார்கள். அப்போது விறகு தலையன் கட்டை தரையிலூன்றி சும்மாட்டு தலையாலதை முட்டிக் கொண்டு நிற்கிறவன், மண்டபத்து வாசல் முன்னிற்கும் புளியமரத்தைப் பார்க்க அந்த மரத்தின் மேல் ஒரு கொக்கு தன்னிறகை தாழ்த்தி

குத்திக் கொண்டிருந்தது. அதை இவன் கண்டு சொன்ன வெண்பா,

புளியிலி ருக்கின்ற புன்தலையின் கொக்கு
தெறியே னக்குச் செய்யாய் – கிளிமொழியா
ளும்மைப் பழித்தாளே லெம்மிலும் தூரியார்
எம்மைப் பிரிந்தாரிப் போது.

என்றிக் கவியைச் சொல்லி தூங்கி விழுந்தாப் போலே மயங்கி விழுந்தான். இந்தக் கவியும் அவனிருக்கும் வர்த்தமானமும் தமிழறியும் பெருமாளுக்குச் சொன்னார்கள். அவளிந்தக் கவியைக் கேட்டு விறகு தலையனை இரண்டாங் கட்டிலே அழைத்துக் கொண்டு வந்து, பாயுந்த தலையனையும் போட்டு கொடுத்தார்கள். அதின் மேல் வந்திருந்தவன் சொன்ன கவி வெண்பா,

பொல்லாத ஓலைப்பாய் பூற்றப்பாய் தானானோன்
வெல்லான் தமிழ்மடந்தை வாசலிலே – நல்லவர்கள்
சொந்தால் மடவீரோ செய்வரோ யிப்படியே
சாய்ந்தாலென் னோலைப்பாய் தான்.

இந்தப் பாட்டையும் கேட்டுக் கொண்டு போய் அவளுடனே சொன்னார்கள். தமிழறிவாள் அவனுக்கொரு கருப்பாட்டுத் தோலைப் போட்டு மூன்றாங்கட்டிலே கொண்டு வந்து வையுங்களென்று சொன்னாள். அப்படியே தோழிகள் அவனை மூன்றாங் கட்டிலே கூட்டிக் கொண்டு வந்து விட்டு கறுப்பாட்டுத் தோலைப் போட்டு கொடுத்து படுத்துக் கொள்ளச் சொன்னார்கள். விறகு தலையன் அந்த தோலின் மேலிருந்துக் கொண்டுச் சொன்ன வெண்பா,

மைத்தோல் சயன மரவாழுவதோ யிப்புவியில்
மெய்த்தோல் வருந்திக் கிடஉடம்பே – யித்தூரம்
வந்தெறு காத மதுமட வாடகா
கவிந்த மதிநன்றாச் சினி

இந்தக் கவியுங் கேட்டுக் கொண்டு போய் தமிழறி வாளுக்குச் சொன்னார்கள். அதற்கவன் விறகு தலையனை நாலாங்கட்டுக்கு அழைத்துக் கொண்டு முழுப்பூனப்பாயை போட்டுக் குடுங்கள் என்று சொன்னாள். அப்படியே தோழிகள் விறகு தலையனை நாலாங்கட்டிலே அழைத்து வந்து பூனைப் பாயை போட்டுக் கொடுத்தார்கள். அதின் மீது விறகு தலையன் இருக்க அங்கே காற்றடிக்கிறதும் பனிவீசுகிறதையும் பார்த்துச் சொன்ன வெண்பா,

ஊசி முனையில் ஒளித்துக் கோத்தாப்போல்
வீசும்பனி வந்தென்றன் மெய்தீண்ட – ஆசை
முலையிறுக்கக் கட்டி முயாங்கா மலையோ
நிலையிடையே யான்பெறுவே னின்று

இந்தக் கவியையுங் கேட்டுக் கொண்டு போய் தமிழறி வாளுக்குச் சொன்னார்கள். அப்போதவ நல்ல கவினாயகனா யிருக்கிறான் என்று இவள் நினைத்து விறகு தலையனுக்கு துப்பட்டி சோமன் பாகை கொடுத்து அஞ்சாங் கட்டிலே கொண்டு வந்து வைத்து போசனமிடச் சொன்னாள். அப்படியே தோழிகள் அவனை அஞ்சாங் கட்டிலே கூட்டிப் போய் வைத்து மூவகை உடும்புங் கொடுத்து கொட்டுக் கூடையில் சளமுங் கொண்டு வந்திட்டார்கள். அந்தச் சோற்றிலே கறுப்புஞ் செனமும் செகப்பும் பல நிறமுள்ளதைக் கண்டிவன் சொன்ன கலித்துறை.

கல்லார் குறிஞ்சி சிகப்பு நற்பச்சை கறுப்புமுல்லை
நெல்லார் மருதமு நிறமணநெய்தல நிதிவனப்பு
வல்லாண் முகின்முல்லை மானார் தமிழறிமா மடந்தை
யில்லா ளிருகின்ற சோறுநமக்கு வந்தொய்தியதே.

இந்தப்பாட்டையுங் கேட்டுக் கொண்டு போயவளுக்குச் சொன்னார்கள். அதைக் கேட்டு தமிழறிவாள் பயந்து அவருக்கு மெல்லிய சம்பாவரிசிசாதமும் நல்ல பதார்த்தமும் தேன் சர்க்கரை திரட்டுபாலிதமும் போட்டு சாப்பிடச் சொல்லி சந்தனம் பூக் கஸ்தூரி பாக்கு வெற்றிலையுங் கொடுத்து நல்ல கட்டிலிலே மெத்தை தலையணையும் போட்டு கொடுக்கச் சொன்னாள். அப்படியே தோழிகள் அவரை அழைத்துப் போய் கட்டில் தலையணை மெத்தையும் போட்டுக் கொடுத்து போசனஞ் சாப்பிடச் சொல்லி இவர் ஒன்றும் சாப்பிடாமல் கட்டிலின் மேலிருந்து கொண்டு சொன்ன வெண்பா,

குடவன் கடிக்கக் குளிர்வாடை வீசக்
கிடவென் றிடத்தே கிடந்தெ – மடநெல்லீர்
மென்குறங்கை தீண்டவிதி யிலையோ விப்போதே
யென்குறங்கை யான்றழுவிக் கொண்டு

இந்த வெண்பாவையும் தமிழறிவாள் கேட்டு இவர் வித்து வான்றான் என்றறிந்து இவரை தான் இருக்கும் கட்டிலுக்கு வரச் சொல்லி செயிதி அனப்பினாள். அப்போது இவளண் டைக்குப் போறபோது சூஸ்திரத்தினாலே செய்த யானை

தழுவிக் கொண்டு வந்தது. அந்த யானைக்குத் தெங்கையை கொடுத்தார். யானை அதை வாங்கிக் கொண்டப்புறம் போச்சுது. வொப்பாலே புகையில் புலி பாய்ந்து வந்தெதிர்த்தது. அதுக்கு செம்பருத்திப் பூவைப் போட்டார். அதைக் கண்டப்பாலே வோடிப் போச்சுது. மறுபடியப்பால் போன போது ஒரு குரங்குத்தாவிக் கொண்டு வந்துது. அதின் முன்னே நண்டைப் போட்டார். அதைக் கண்டு குறங்கோடிப் போச்சுது. பின்னையும் அப்புறம் போன போது கரடி யொன்று குதித்துக் கொண்டு வந்தது. அதுக்கு முன்னே கறும்பைப் போட்டார். அதைக் கறடி கவ்விக் கொண்டப் பாலே போச்சுது.

பின்பு போனபோது வழியில் கோழிச் சண்டை, கிடாப் பாச்சல் மல்லக செட்டி யுத்தம் இது முதலான சூஸ்திரங் களெல்லாங் கடந்துபோற போது பின்னொரு வாசலிலே வாசற்படியிலே இரண்டு சூஸ்திரப் பதுமை இருக்கிறது. அந்த பதுமை வாசலில் நழையச்சே ஒரு பதுமை போறவர்களை தலையைப் பிடித்துக் கொள்ளுகிறது. பின்னொரு பதுமை தலையை முக்கி தலையின் மேலே மூத்திரம் பெய்யும். இவர்அதை அறிந்து வாசற்படியிலே போய் ஒரு விரலாலே வாசற்படியின் மேலே யூணினார். அப்போ திரண்டு பதுமையும் கவுந்து வந்து அதின் பேரிலே காந்தக் கல்லால் அடித்தார். அதுகள் பொன் மெழுக்கான படியினாலே உருகிப் போச்சுது. அப்பால் போறபோது குங்குமச் சேறிருந்தது. அதைக் கண்டிறங்கி அப்பால் போகத் துடை மட்டுஞ் சேறான படியினாலே அதை மூங்கிள் கணுவைப் பிளந்து சேறெல்லாம் வழித்துப் போட்டு எண்ணைச் சீலையாலே துடைத்துப் போட்டான். அங்கேயொரு வெள்ளிவட்டிலே யுழக்குப் பன்னீர் கொண்டு வந்து கொடுத்தார்கள். அந்த பன்னீரை தொட்டு துடைத்து ஆழாக்கு மீந்து போச்சுது. இந்தப் பன்னீரையுங்கள் நாச்சியார் தலையில் வாருங் கொளென்று அனுப்பி அப்புறம் போறபோது அங்கொரு பளிங்காழி மண்டபம் இருந்தது. அந்த மண்டபத்தை தண்ணீரோ வென்று சந்தேகப்பட்டு தன் கையிலிருந்த கொடியை அதன் மேலெறிந் தான். அதுழ கல்லோசைப் பட கெட்டதனாற். தன் கையி லிருந்த மணலைபோட்டு அந்த மண்டபத் துக்குள் நடந்தப் பாற் போனான். அங்கே சயனக் கூத்திற் படுக்கை வீட்டிலே யிரண்டு கட்டிலுண்டு. அதிலொன்று களிற்றாகிய ஆண் யானை தந்தத்திலும் வேறொரு கட்டில் பிடி யானையாகிய பெண் யானைத் தந்தத்திலும் செயிது மேலே கவுசனை போட்டு மூடியிருந்தது. பெண்ணியானை தந்தக் கட்டிலே பெண் சாதியிருக்கிற தென்றறிந்து ஆண் யானை தந்தக் கட்டிலே

மேலொரு புறத்தில் நிலைக் கண்ணாடியும் மற்றொரு புறத்தில் குரங்கு குத்து விளக்குமாய் வைத்திருந்தது. இது கால் மாடு தலைமா டென்றறிந்து கட்டிலின் மேலே போயிருந்தான். அச்செய்தியை தமிழறிவாளுக்குச் சொன் னார்கள். அவளிந்த சேதியைக் கேட்டு சிலச்சில பெண்களை அனுப்பி அவனுக்கு காலையும் கையையும் பிடிக்கச் சொன்னாள். பின்னையும் ஒரு பெண்ணை சிங்காரித்து அவனண்டையிற் போகச் சொன் னாள். அப்போதிவன் வந்த பெண்களைக் கண்டு இவர்கள் யார் என்று அறியச் சொன்ன வெண்பா,

வந்தவரா ரென்றறிய மங்கையே நீர்விளக்கை
நந்தலுறச் செய்யன்றா நாரியு – மந்தச்
சுடரொளியை தூண்டித்து கிலிற்த்துடைக்க கடையான
குட மென்றான் கண்டு.

இந்தக் கவியைக் கேட்டுப் போய் தமிழறிவாளுக்குச் சொன்னார்கள். அதன் பிறகு அஞ்சாறு பெண்களை சிங்காரித்து அவனண்டைக் கனுப்பினாள். அவர்கள் நிற்கிற நிலையைக் கண்டு விறகு தலையன் சொன்ன வெண்பா,

குறிக்காட்டுந் தொண்டரே கொங்கைதனைக் காட்டி
நெறியாக நீங்கள் வந்துநின்றால் – சிறு புலிதான்
தீரப் பசித்தாலும் தின்னுமோ புல்தனைச்
சோர்கிடப் பதல்லால் சொல்

அவர்களிதைக் கேட்டு வெட்கிப் போய் சொல்லத் தமிழறிவாள் தனக்குச் சற்றேரக் குறைய விணையாயிருக்கிற ஒரு பெண்ணை சிங்காரித்து அவனண்டைக்குக் கனுப்பினாள். அவளையுங் கண்டு விறகு தலையன் சொன்ன வெண்பா,

ஆடை யுடையு மாபரணமும் பூண்டு
வாடை பரிமளமாய் வந்தாலும் – மாடை
நிறமஞ்சளும் பொன்னாகுமோ வல்லோர் மயங்கிமதியெஞ்
சிறனை சேர்வாரோ வின்று

அவளும் வெட்கி இந்த கவியை தமிழறிவாளுக்கு வந்து சொல்ல அப்போது தமிழறிவாள் தன் தோழியான வசந்த மாலையை அழைத்து தோழி நீ போகவேனும் அல்லாவிடில் நான் போக வேனும் இப்படியிருக்கிற சமயத்திலே நீ தான் போவென்று சொன்னாள். அதற்கவள் நல்ல தென்றலங் காரமாயுடுத்திக் கொண்டு உள் அச்சமாய் அன்ன நடையாகி நடந்து நின்று நின்று மிரண்ட பார்வையாக வந்தாள். இதைக் கண்ட விறகு தலையனான நற்கீரர் சொன்ன வெண்பா.

முத்து நகையு முகாவெழிலு மெய்ஞான
சத்திசிவம் போன்ற தையலே – சித்திரமா
மின்சிலம்பு கொங்கை மேலசைய வந்ததேவன்
பொன்சிலம்பு னோகப் போ

இப்படி சொன்ன கவியை வசந்தமாலை கேட்டு தன்னை சக்தி சிவமென்றதே போது மென்று சந்தோஷமாய் திருப்பிப் போனாள். இதையுந் தமிழறிவாள் கேட்டு சந்தோஷப்பட்டு வசந்த மாலையுடனே நானே போய் வாரேனென்று சொல் வதற்கு வசந்தமாலை சொல்லுவாள். வாராய் தமிழறியும் பெருமாளே நீ யிருந்த துரைத்தனத்துக்கு நீயிருந்த முன்னுடைய மேன்மைக்கும் உன்னுடைய கல்வி கேள்விக்கும் ஒரு விறகு தலையனைச் சேரலாமோ இது முறைமையன்று என்று சொன்னாள். இந்த விசேஷத்தைக் கேட்டு தமிழறிவாள் சொல்லுவாள். வெண்பா.

கல்லானொருவன் றோள் சேர்வதிலுங் கற்றவனொ
டல்ல படுவதமை யாதோ – நல்ல
கரும்புக்கு வேலியிட்டுக்க காப்பாஞ் சொல்லாய்
விரும்புவரோ வேம்பின் கனி

இந்தப் பாட்டை வசந்த மாலைக்குச் சொல்லி ஆயிரம் பெண்கள் தன் பின்னால், புடை சூழ்ந்துக் கொண்ட வர நக்ஷத்திரங்களுக்கு நடுவில் வருமொரு பூரணச் சந்திரன் போல நடந்து பிடியானை தந்தக் கட்டிலின் மேற்றிரையைப் போற்றிருக்க வந்து நித்திரைக்குள்ளே யிருந்தாள். அவளைப் பார்த்து நற்கீர தேவர் சொல்லுங் கலித்துறை,

கருகிவிழித்த கயற்கண்களாற் கொடுங்கா மனையு
முருகெ விழித்துக் காவுளச் செய்யா வொளிப்பதென்றோ
குருகு பதத்து விளநீர்க் கலச சூயமி ரண்டும்
பருக விரித்தி லையோ வெய்ய காமப்பசிகெடவே

இப்படிச் சொன்ன கவியைக் கேட்டு தமிழறிவாளுமதற் குத்தான் கொண்டு வந்தேன். நீரெந்தவூர் நுமது பேரென்ன சொல்லு மென்றாள். அப்போது நற்கீர தேவர் சொல்லுவார். வாரும் பெண்ணே நீ தமிழறியும் பெருமாளென்று பெயரிட்டுக் கொண்டு தமிழறிமண்டபமும் கட்டிக் கொண்டு வருவார் கையில் ஆயிரத்தைம்பது பொன்னையும் வாங்கிக் கொண்டு இருக்குற நீ அறிந்து சொல்வதல்லாமல் நான் சொல்லலாமோ வென்றார். அதற்குத் தமிழறிவாள் சொன்ன வெண்பா.

அய்யஞ்சிரு பத்தைஞ்சோ றிரவேயான்பெறினும்
வெய்யகணை அஞ்சுமேல் வறினுந் – தையனல்லாள்
கையஞ் சறியாத காளைதோற் சேர்வளோ
மெய்யஞ் சிறப்பெற்ற மின்

இந்தக் கவியைக் கேட்டு நற்கீர தேவர் சொல்லுவார். அய்யஞ்சிறு பத்தஞ்சாவது, மலைத் திரவிய மஞ்சு, காட்டுத் திரவிய மஞ்சு, நாட்டுத்திரவிய மஞ்சு, நகரத்திரவிய மஞ்சு, கடற்றிரவிய மஞ்சு என்று சொன்னார். அதற்குத் தமிழறிவாள் வகையென்னா வென்று கேட்டாள். அதற்கு நற்கீரதேவர் சொல்லுவார். மலைபடு திரவியங் குங்குமந்தற கோலமுடன் கோஷ்ட மிளகிலும் பொங்கத் திரவியமைந்தாம் காட்டுத் திரவியம் நாபியிரலி தெனல்லாக்கும் ல்லாமற் சொபமயிற் பீலியை யைந்தாஞ் சொல். நாட்டுத் திரவியம் செந்நெற் சிறுபயறு சீரான செங்குவளை கன்னற் கதலி யொடைந்து. நகரப்படுந்திரவியம் கண்ணாடி பித்தன் கருங்குரங்கு காட்டானை மண்ணாளும் வேந்தனோடைந்து.போ கடற்படு திரவியம் சங்கு, மொக்கொலை, தாளம், பவழம், உப்பு வங்கக் கடலை வகை வெய்ய கணை யைந்தாவது முல்லை, அசோகு, முழு நீலஞ் சூகப்பு நல்ல நளினமுமைந்தாம். கையஞ்சாவது எண்ண லெழுதலிலை கிள்ளல், பூத்தொடுத்தல் பண்ணலிவை யோடைந்தாம். மெய்யஞ்சாவது, கொட்டாவி, நெட்டை, குறுகுறுப்பு, நெட்டுயிரப்படி நட்டு விழித்தலோடைந்து. இப்படிச் சொன்ன பிறகு பின்னையுந் தமிழறிவாள் சொல்லு வாள் - இராவணன் பட்டிறந்த தெந்தமாதம் பாரத முடிந்த தெந்தமாதம், சீதை சிறையிருந்த தெந்தமாதம், இரண்ணியன் பட்ட தெந்தமாதம், ஈச்சுரனஞ்சுண்ட தெந்தமாதம், காமனை யெரித்த தெந்தமாதம் இவற்றைச் சொல்ல வேணுமென்றாள். அதற்கு நற்கீர தேவர் சொல்லுவார். இராவணன் பட்டது புரட்டாசி மாதம். ஈச்சுவரன் நஞ்சுண்டது மாசி மாதம். காமனை யெரித்தது பங்குனி மாதம், சீதை சிறையிறுந்தது சித்திரை மாதம், யிந்த மாதத்திலே யாதாமொருவன் தன்னூரை விட்டயலூருக்குப் போனால் ஊறு கொண்டு யிறப்பனென்று சொன்னார். அதற்கவள் எந்தமாதம் நல்லதென்று கேட்டாள். அப்போது நற்கீர தேவர் சொல்லுவார் கலிப்பா.

தையலவாள் வாகூட்ட மிருந்ததுந்த க்கனதானும்
வெய்யமனம் வேண்டி விரும்புவார் மேதினிக்குள்
மிக வாழ்வார் காணுமே

என்று சொன்ன பிறகு தமிழறிவாள் பின்னுஞ் சொல்வாள் விருத்தம்.

பச்சையா வெள்ளை யாவாபலகையிற்று யின்று வாழ
வச்சியா தொருவரில்லை யிரண்டு வீற்றி ரிந்து காட்டும்
மெச்சநாயக னேகேளும் வெற்றிலை யல்லக் கண்டீர்
மெச்சியே கண்ணார பாப்பார் விளம்பிவால் பொருளைத் தானே

என்று சொல்ல நற்கீர தேவர் சொல்லுவார் கவி.

பச்சையாய் முந்திக் காட்டி பரிவுடனுலர்ந்து வெள்ளை
மிச்சமாய் காட்டுமல்லாமல் மெலவாட் முதயெல்லோரு
மச்சியாரில்லைக் காண்டால் யாவருநத்திக் கொள்வார்
மெச்சநாயகியே கேளாய் விரும்பிய ஓலைதானே

அதற்கு பின்னும், தமிழறிவாள் சொல்லுவாள் விருத்தம்,

ஆகாத முன்றியிலே சேனைகண்டேன்
ராசாபடை யின்றியிலே யானைக்கண்டேன்
கோதான வேற்றசர் தம்மைக்கண்டேன்
குதிரையுடன் படுகளமுங் கூடக்கண்டேன்
வாகாகமற பொருதி வெட்டக்கண்டேன்
மறுகியான் கண்டுதலை சாய்த்தவாரே.

என்று சொன்ன கவிக்கு நற்கீர தேவர் சொல்லுவார்,

நிதி தங்க மன்றியிலே சேனைகண்டேன்
கரிபரி மாவுங் தேருங்கண்டேன்
முதிராச ரதங்களையும் முந்தக்கண்டேன்
முனையிலே நின்றிருவா வெய்யக்கண்டேன்
சதுரங்கந் தானுமிது வென்றா னல்ல
தார்குழலே நீ தலையுஞ் சாய்க்க வென்றான்.

பின்னையுந் தமிழறிவாள் சொல்லுவாள் கவி.

சக்கரமும் வலம்புரியுந் தரித்த மாயன்
தானுரலிற் கட்டுண்டு தயங்கா நிற்பாற்
மிக்கதொரு வடம்புனைந்து வெண்ணை காட்டி
வெற்படுத்து மற்றொருதி வேலைசூடி
நிக்கனைவா பெற்ற வருந்தேவா தேவாதிரு
மாலு மல்லவிது செப்ப கேளீர்

இந்த கவிக்கு நற்கீர தேவர் சொல்லுவார் கவி.

குன்றாத மொழியுடைய வண்மை யாரை
கோவின் பின்னே திரிவர் கொள்ள வெலோன்
னொன்றாத கடல் கடந்து வெண்ணை காட்டி
யுரவுடனே யனைந்திட்டு முழலா நிற்ப
மன்னருங் குன்றெடுத்தி மல்லுக் கட்டி
வானவர்கள் போற்றவரும் மலை போலெ

தமிழறிவாள் சொல்லுவாள் கவி.

வடிவுடைய பிறையனிவா வணிகரெல்லாம் வழிபடுவார்
வழிப்பட்டுச் சந்திக் கூலிக் கணிவா திருமேணியடியும்
பட்டேயப்பேரு மிக விரும்பி யெண்ணங் கொள்வீர்
கொடி முடியுந்த தன்னாகத் தன்னைத் தீண்டி குற்றமெனும்
வெற்றிதானை மாற்றி வியாபாரபடிமுழுதும் மாளவிப்
பாரிருந்தாப் போல
பாங்குடையார் நீரிதனைப் பார்த்துக் கொள்வீர்*

என்று சொன்ன கவிக்கு நற்கீர தேவர் சொல்லுவார்.

படிமுழுதும் யேற்றுகின்ற பரமனாகி பரிந்து
கடுவருந்துகின்ற சிவன்னபாற் திடமுடைய நான்முகனும்
அரியுஞ்சூழ் தேவரெல்லாம் யிறைஞ்சி வருந்திங்கட்சூடி
வடிவனியுந்த முலை மடவார் மயக்கந் தீர்த்து
வரிகையுள்ள திருமேனி யடியும் பட்டு
படி முழுது மாளவிக்கும் வல்ல தாமே
பரமனார் தானுமல்ல பணமு மாமே*

என்று நற்கீர தேவர் சொல்ல பின்னையும் தமிழறிவாள் சொல்லுவாள் வெண்பா.

பரச்சி விழுந்தெழுதும் பந்தமொரு நாள்குளதாய்
வாச்ச களம் புகுந்து மாந்த – ரையும்
ஏச்சு படைவீரர் தங்களையும் மேற்காணு
மடையுரவு மல்ல வது*

என்று சொன்ன கவிக்கு நற்கீர தேவர் சொல்லுவார் வெண்பா.

கம்பில ளதளதாய் காலொரு நால்குளதாய்
பைம்பொற்கல் மெங்கும் பாச்சியதாய் – வெம்போத
மாவுமல்ல மாக்கால நாணமான் னினைய
பூவலருங் கண்ணாய் பொருள்
நீரிலானது தொமோரு மூன்று நெடுங்கானில்

* இக்குறியிடப்பட்டவை இலக்கணப் பிழையுடையன.

வாய்த்தது தானொரு மூன்று
ஊரி லாடவும் பாடலிமொரு மூன்று
மொருள்ள பொதையும் விண்ணுதல் தென் முனி
பாரில் மேவிய வெல்லர்க்கு மிவர் பனி
ரெண்டு வருஷமும் பாரியே*

என்று சொன்ன கவிக்கு நற்கீர தேவர் சொல்லுவார். நீரில் முள்ளுவது மிதுனமாகிய இரட்டை நெடுங்கால மீன் புணர்ச்சி மகாமகா கடக மாகில் மூன்றாவது மேஷம், ரிஷபம், சிங்கம், ஊரில், மூன்றாவது துலாம், மீனம், விருச்சிகம் வேசையாகிய கன்னியும், தனுசாகிய வில்லும் முனியாகிய கும்பமும் ஆக பன்னிரண்டு ராசியென்று சொன்னாள். பிறகு நற்கீர தேவர் சொல்லும் வெண்பா.

ஒருவரொருத்தியா வூரிலா புக்குவொரு வாக்கு
கொருவரையும் பொருளை ஒருவருமே – தண்ணிலே
தான் கொன்று தாமிருவரும் சென்றே
யுன்னி யொள்ளுவர் குறவு

யென்று, நற்கீர தேவர் சொல்லவப்போது தாதிமாரை யழைத்து திரையை வாங்கிப் போடச் சொல்லி தன்னை விசிறியாலே விசிறச் சொன்னாள். அப்படியே தாதிகள் செய்த பின் தமிழறியும் பெருமாளை நற்கீர தேவர் கண்டு சொல்லுவார் வெண்பா.

இன்னம் விறகுதலைய னென்றோ நீயிருந்தாய்
கன்னல் மொழிமானே கருத்தினிலே – யுன்னாதே
போரார் தடமுலைமேல் புலகாதவர் தம்மை
யோரார் குழலா ளியம்பு

என்றிக்கவியைச் சொல்லும் போது விடிய காலமாச்சுது. அந்த வேளையிலே மறுபடி நற்கீர தேவர் சொல்லும் வெண்பா.

நச்சுத் தேரேறி நடுகாட்டில் வேடுவிச்சி
பச்சைக் கொடிபோற் பரந்தாளே – யிச்சித்து
மேலை வனங்களைந்து மீண்டு வனம்புகுந்து
மூலப்பனங் களைந்தான் முன்

என்று நற்கீர தேவர் சொன்னதுக்கு, தமிழறியும் பெருமாளதற்குப் பயன் சொல்லத் தெரியாத படியிலே தோற்றுப் போனதென்ற றிந்து நற்கீரதேவர் பெண்ணே யென்கிட்டவாராதே யெனக்கு தோஷமங்கே தானே யிருமென்று வேறொரு கவி சொன்னார் வெண்பா.

---

* இக்குறியிடப்பட்டவை இலக்கணப் பிழையுடையன.

கொங்கரும்பு போன்ற குவிமுலையா யுன்றனிரு
மாங்கனியை வவ்வுமென வந்தாயோ – ஏங்கி
யிருக்கு மிவர்தன்னை யிப்போது கண்டு
செருக்கி நீவாழ்வாய் தெளிந்து

இப்படிச் சொல்லும் பாட்டைக் கேட்டு தமிழறிவாள் வெட்கப்பட்டு, இனியெனது சென்மம் மென்ன சென்மன்று நிலைக் கண்ணாடியை உடைத்து கண்ணாடி யில்லை யாலே வயிற்றைக் கீறிக் கொண்டு செற்றாள். நற்கீரர் அங்கே தானே பொழுது விடியுமட்டுங் காத்திருந்தார். பொழுது விடிந்தபின் தமிழறிவாளை எழுப்ப தாதியள் வந்து பார்க்க இவள் செற்றுக் கிடப்பதைக் கண்டு வசந்த மாலையும் மற்றவரும் இவளைப் பல்லக்கின் மேல் வைத்துக் கொண்டு உறையூர் சோழராசா முன்னே வைத்து முறையிட்டார்கள். வசந்தமாலை வெண்பா,

அய்யா உனக்கபைய மண்டினரை யீடேற்றுங்
கையா யுறையூரின் காவலா -- மையா
சிலைநுதலாள் நற்றமிழை தொந்தவளை வெய்யோன்
கொலைசெய்து வென்றான் குறித்து

வேறொரு வெண்பா.

மறையூரும் பூங்குழலாள் வஞ்சி மகிழ
முறையூரின் மன்னனெனு முத்தமா – நிறையூரில்
போனமகளை போற்றிநறும் பூவணையில் யெதுவினர்
வெனமகளைக் கொன்றா னிவன்

இப்படிச் சொல்லக் கேட்டு ராசா சொல்லும் வெண்பா.

குறித்திந்த கோதையரைக் கொன்ற வகையைப்
பிரித்தெனக்கு முன்னின்று பெட்பாய் – கறுத்தநிறக்
காசாம்பு மேனியுந்தன் கண்ணானே செய்தபிழை
கூசாமற் சொல்லாய் குறித்து

என்று சொன்னதற்கு நற்கீரதேவர் சொன்ன வெண்பா.

கொற்றவர் கல்வியுறுங் கோதையர்க்கு செந்தமிழிற்
கற்றநூல் பாவைக் கழறினேன் – இற்றை
இருளடைந்த சொற்பயனை யேதென் றறியாமல்
மருளடைந்துதான் மறித்தாள் வந்து

மறுபடியும் நற்கீரர் தமிழறிவாளைப் பார்த்துச் சொல்லும் வெண்பா.

அப்போது மாரணங்கை அன்பாக நற்கீரர்
கொப்பெளவே பார்த்துணைநான் கொன்றேனோ – யிப்போதே
பெற்ற உயிர் மீண்டு யெழுந்து ராசச்சபையில்
விற்றிருந்து சொல்லாய் விரைந்து

என்று நற்கீரர் சொன்ன உடனே, தமிழறிவாள் எழுந்து உக்காந்து கொண்டு ராசாவை நோக்கிச் சொன்னதாவது அய்யா ராசாவே நான் இருபத்துனாலுவயதாளவும் இந்த தமிழைப்பாராட்டினேன். என்னை வெல்லும் படியாய் தேச தேசத்திலுள்ள வித்துவாங்கிஷரும் கற்ற பெரியோருமென்னை நாடிவர நான் சொன்ன கவிக்கு மறுமொழி சொல்லாமற் போனார்கள். இற்றை நாளிவர் ஈசுரனோ பெருமானோ யென்மேலன்பு வைத்து சோதிக்க ஒரு விறகு தலையனாகி, வாழைத் தண்டை விறகென்று கொண்டு வந்தார். இவர் நான் சொன்ன கவிக்கெல்லாம் பயன் சொல்லி நான் சொன்ன உத்திரத்துக்கு பதில் உத்தாரஞ்சொல்லி செயித்தவர், யென்னைக் கூடாமற்றமக்கு தோஷமென்றொரு கவி சொன்னார். அந்த கவிக்கு பயன் எனக்குத் தெரியாதபடியினாலே நான் தானே நிலைக் கண்ணாடியை உடைத்து வில்லையாலே வயிற்றைக் கீறிக் கொண்டுசெற்ற தொழிய விவரென்னை கொன்றவர் அல்லவென்று சொன்னாள்.

ராசாவும் நற்கீர தேவரைப் பார்த்து சந்தோஷப்பட்டு நீர் பரமேஸ்வரன் வடிவாயிருப்பது நிசமென்று தமிழறிவாள் கையைப் பிடித்து நற்கீரர் கையில் கொடுத்து இவளை நீரெப்படி வைத்தாலும் உம்முடைய பெருமை யென்றார். அதற்கு நற்கீர தேவர் சொல்லுவார். இவள் இன்றைய வரைக்கும் ஆயிரத்தைம்பது பொன்வாங்கி பொக்கிஷத்தில் போட்டாளே, அதெல்லாம் எங்கே என்று கேட்டார். உடனே பொக்கிஷ வீட்டைத் திறந்து பார்த்தாள் இவள்; கன்னி கழியாமல் தேடின படியினாலே மாயமாய்ப் போச்சுது. அப்போதிவர் இவளுடைய வீட்டு வாசலை தமிழறி மண்டபம் இது முதலான எல்லாம் இடித்துப் போடச் சொல்லி இவளை அழைத்து வந்து, நீ இந்த விறகு தலையனுக்கு பாரியாயிருப்பாயென்று கட்டளையிட்டார். அதற்கு அவள் தேவரீர் திருவுளம் பற்றானபடி யல்லாமல் எனக்கு வேறொன்று மில்லை யென்று சொன்னாள். அப்போது ராசாவின் முன்பாக அந்த விறகு தலையனுக்கு தமிழறியும் பெருமாளைக் கலியாணம் பண்ணி வைத்தார். இவ்விரண்டு

பேருஞ் சமுசாரமான பிறகு நற்கீர தேவர் மதுரைப்பட்டணத்திற் சங்கத்தாரிடத்திற் போய் விட்டார். பின்பு தமிழறிவாளும் விறகு தலையனும் ரதியும் மன்மதன் போற் கூடி வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

அளகேசுவரராசன் கதை முற்றும்

தமிழறி மடந்தை கதை

*சோளிமாநகர் மென்றொரு பட்டணமதிலே கோளி என்னு மொரு ராசா. அந்த பட்டணத்துக்குச் சூள்வலிய காந்தத்தினாலே கோட்டையிட்டு அந்தக் கோட்டைக்கும் காதெண் பூதங்களை நிறுத்தி உறை போட்டிருக்கும். மாத தானவந்தக் காலத்திலே உறையை வாங்கிப் போட்டால் பூதங்கள் வந்து மதானகைய யாயுதங்களை விழுங்கிப்போடும். அப்படி கட்டிக் கொள்ள வேணுமென்று மந்திரிமாருடன் சொன்னதின் பிறகு மந்திரிமார் ஆராய்ந்து பார்த்து எழுபிபிரக் கடலுக் கப்பா... .....மரத்திலே துளசி பசுந்தடி வெட்டி வந்தால் அந்தத் தடியைக் கண்டவுடனே பூதங்களெல்லாம் ஓடிப் போம். அப்பாலந்தக் கோட்டையைக் கட்டிக் கொள்ள லாமென்று மந்திரிமார் சொன்னார்கள்.

அந்த நேரமே ராசாவானவர் அதுக்கான ரிசிகளை அழைப்பித்து துளசி பசுந்தடி கொண்டு வரச் சொல்லி அனுப்பிவிச்சார். ரிசிகளும் போய் வெட்டிவந்தார்கள். சதுரங்க தெண்டியுடனே சென்று அந்த கோட்டையுரைகளுக்கு முன்னே துளசி பசுந்தடி கொண்டு அடித்துப் பூதங்களையும் முடுக்கி வலிய காந்தக் கோட்டையும் கையக கொண்டு, அந்தக் கோட்டைக்கு ராசாவாயிருக்குந் கோளியன் என்கிற ராசாவையும் பிடித்துச் சிறை காவலிலே போடுவிச்சு அதின் பேரிலே யுறையூர் சோளபுரி யென்று பெயரிட்டு ராசிய பரிபாலனம் பண்ணியிருந்தார்.

அப்படியிருக்கிற நாளையிலே அய்யோத்தியாபுரி யென்றொரு பட்டணம். அந்தப் பட்டணத்தை ஆண்டு வருகிற அரிச்சந்திரனென்னும் ராசனுக்குத் தெய்வத்தானென்னும் பெயர். அந்தப் பிள்ளையைப் பள்ளிக்கு வைத்தார்கள் அந்தப்பிள்ளை படியாமல் வாத்தியாரைக் கட்டிப் போட்டுச் சுண்டு விரலுங் கையுமாய்த் திரிந்தவன் அப்படியிருக்கிற காலத்திலே அப்பட்டணத்திலிருந்து ராசாவினுடைய ஓலை வந்தது. அந்த ஓலை வாசிக்கிறதற்கு ராச குமாரனைக் கூட்டி வந்து ஓலையைக் குடுத்தார்கள். ஒன்றுந் தெரியாமல் நின்றவுடனே ராசாவுமவனைச் சீறிப்பார்த்து வாத்தியாரைக் கூட்டி வரச் சொல்லி கேட்டவுடனே, வாத்தியார் சொன்ன

* இப்பனுவல் சிதைவடைந்துள்ளது

செய்தி அடியேனைக் கட்டிப்போட்டு காடேரித் திரிந்தவனே அல்லாமல் படித்தவனே அல்லாத தேவரீருடனே அடியேன் சொல்லச் சமுகங் கிடையாமலிருந்தே னென்று வாத்தியார் சொன்னார். அதின் பிறகு ராசாவும் மகனை மிகுதியுங் கோவித்துக் கொண்டு யிப்படிக் கொத்தப் பிள்ளை முகத்திலே முழித்தாலும் பாவமென்று சொன்னார். அதின் பிறகு தெய்வத்தார் னென்கிற ராசகுமாரன் சிறுபிள்ளைப் புத்தியாய் மனதிலே வேகங்கொண்டு யிப்படிக் கொத்தத் தகப்பன் கண்ணிலே முழிக்கப்படாதென்று -------------- பிறப்பட்டு நாலு நாளைப் பயணித்ததுக் கப்பரம் போய்ச் செல்லுகிறபோது, அளகாபுரி யென்றொரு பட்டணமிருந்தது.அந்தப் பட்டணத்தை ஆண்டு வருகிற அளகேந்திரனென்கிற ராசா, அவருக்கு ஒரு குமாரத்தி யுண்டு. அவள் பெயர் ஏலவார் குழலி யென்றும் செண்பகவல்லி யென்றும் பேர். அவள் சுகசரீர மாயிருப்ப ------ --- சுகமெப்படி யென்றால் நித்தமாயிரங் குடம் தண்ணீர் பண்ணீர் கொண்டு வந்து, அதிலே புனுகு, சவ்வாது, சந்தனங் கஷ்த்தூரி குங்குமம் ------------------- ரோசனையிது வெல்லாம் வேதித்து பளிங்கு மாமண்டபத்திலே நின்று குளிப்பாளவள். குளிக்கிற தண்ணீர் ஒரு ஆறாக ஓடும். அந்த ஆற்றுக்குப்பேர் பன்னீராறென்றும் பரிமள சுகந்தனென்றும் பேர். அந்த ஆற்றிலே முழுகிறதும் குளிக்கிறதுஞ் சனமது அசனம் பண்ணுகிற பெரும் பூசை பண்ணுகிற பேரும் உளர். வழிபோறப்போ சீலையைத் துவைத்துப் பிழிந்து சரீரத்திலே வாசங்கட்டிக் கொள்ளுகிற பேரும் இப்படி ஆத்தங்கரையிலே தெய்வத்தார் என்கிற ராசாகுமரன் சென்று அந்தத் தண்ணீர் வாசனையாயிருக்க தன்னுடைய வலது காதிலே அணிந்திருக்கிற கெடிந்தளவு ஓலையை வாங்கி தன்னுடைய நகத்தினாலே சீட்டுக் கவிதை யாகத்தானே எழுதினாள். வெண்பா,

ஆற்றில் மிதியாமல் லக்கரைக்குப் போறவனே
கீற அப்புகளுடைய கெம்பீரா – சேரயிரு
பெருமாக யின்றுரா வுனையடைய வேணும்
வருவேன் றிருவாசல் வா.

வசனம் - என்று ஓலையும் எழுதி மறுபடி தன்னுடைய தோழி மரகத வல்லியுடனே ரகசியமாகத் திருவாசல் கூடத்திலே யிருக்கச் சொல்லி வாய் சனமாகச் சொல்லி யனுப்பி விட்டாளந்தத் தோழியானவளுந் தெய்வத்தார் னென்கிற ராச குமாரன் கிட்ட வந்து சீட்டுக்கவியைக் கொடுத்துத் தன்னுடனே ராச குமாரத்தி சொன்ன செய்தியுஞ் சொல்லி யனுப்பிக்

கொண்டு போனாள் --------------- ரது ராசகுமாரன் நல்லதென்று நல்லதென்று சீட்டுக் கவியை வாசிக்கத் தெரியாதபடியினாலே சீட்டுக் கவியையுங் கையிலே படித்துக் கொண்டு ராச குமாரத்தியிருக்குச் சொன்னயிடத்திலே வந்து திருவாசல் மண்டபத்திலே ஒரு சொறி சிறங்கன் சரீர வருத்தமாகப் படுத்திருந்தான். அவன் வசத்திலே ராசகுமாரன் தனக்கு குடுத்தனுப்பிவிச்ச சீட்டுக்கவியை வாசிக்கச் சொல்லிக் குடுத்தான். அந்தச் சொறியன் சீட்டை வாங்கி தன் மனதிலே யுள்ளிட்டுக் கொண்டு ராசகுமாரனுடனே கேளும் காணும் ராசகுமாரனே யிந்தச் சீட்டிலே யிருக்கிற வாசகம், மகா பாதகமாயிருக்குது. இப்போது அரை நாழிகை சென்றவுடனே யும்மை யிந்த வூரிலே வெட்டிக் குலைக் கழுவிலேப் போடவேணுமென்று யிந்தச் சீட்டைக் கண்டவுடனே ஓடிப்போகச் சொல்லியு மெழுதி யிருக்கு தென்று உபாயமாகச் சொன்னதையரியாமல் ராச குமாரன் சொறியனுடனே நாமிந்த நாட்டில் யென்ன குற்றஞ் செய்தோம் நம்மையிப்படி யெல்லாம் அவகதியாதி நினைக்கக் காரியமென்ன வென்று கேட்டவுடனே பின்னுஞ் சொறிய னுபாயமாகச் சொல்லுவான், வாருங்காணும், யிந்த ராச குமாரத்தி குளித்து களிச்சோடுகிற ஆத்திலே மிதியாமல் போனீரென்று மது வெகுத்தமென்றும் கொல்லுகிறோமென்று மெழுதியிருக்கு தென்று சொறியன் சொல்ல, ராசகுமாரன் மனது கலங்கிச் சொறியனை வாழ்த்தி வணங்கிக் கொண்டு ------ தேசம் நோக்கி போனதின் பிறகு சொறியனுந் தனக்கு யிந்த ராசகுமார சுகியை பாரியாக்கிக் கொள்ள வேணுமென்று, பொழுது புகு முன்னே சரீர சுத்தி செய்ய வேண்டுமென்று பரிமள சுகந்த னாற்றிலே சென்று குளிச்சி முழுகிப் பல்லு விளைக்கிச் சீலை துவைத்து மெல்லாம் முருக்கிச் செங்கல்லினாலே தேய்த்துச் சுத்தம் பண்ணி தேகமெல்லாஞ் சாந்து குங்குமம் சவ்வாது கெந்தப்பொடி கொண்டு பூசி சொறி நாற்றந்தீர -------------------- மணம் பண்ணிக் கொண்டு திருவாசலிலே படுத்திருந்தான்.

பிறகு பொழுது புகுந்து பத்து நாழிகை சென்றதின் பேரிலே செண்பகவல்லி யென்கிற ராசகுமார சுதியுமந்த ராசகுமாரன் பேரிலே வைத்த காதல் மிகுதியினாலே அவள் கையுடனே அசனமும் பலவகை ஆபரணங்களும் பட்டுக் கனமுல்லா பட்டு பச்சை வடம், பரிமள சுகந்தம், பாக்கு, வெத்திலை, கற்பூரம், வேதித்த சுண்ணாம்பு, பட்டுமெத்தை தலையணைக் கச்சுக் கட்டிலிப்படிக் கொத்த பதாரா மெல்லாந் தோழியள் வசத்திலே எடுப்பிச்சிக் கொண்டு தீ வெட்டியும் போட்டுக் கொண்டு தோழிமாறுடனே வருகிறபோது, யிந்த

ராசகுமாரத்தி அந்த ராசகுமாரர் பேரிலே வைத்த காதல் மிகுதியினாலே திருவாசலிலே சென்று முன்பின் விசாரியாமல் கொண்டு போன பண்டபதார்த்தங்களை யுமுபசரியாமலங்கே யிருந்த சொறியனை ராசகுமாரனென்று மனவேகத்துடனே தழுவிக்கொண்டாளப்போது, சொறியன் சரீரமெல்லாம் பலாக்காய் முள்ளுப் போலேயும் ------ தழுவினால் போலவுமிருக்கிறது கண்டு யிந்த சொறியனுக்கோ ஆசை கொண்டோமென்று பெருமூச் செறிந்து ஆ வென்றலறி மயக்கமுற்று சொன்ன விருத்தம்,

மின்னஞ்சு மின்னிடையாமே வுந்தி வாசல்
புக்கியன்னம் போலோகிய வனிவுனா குமேன்று
முன்னம் பொற் மதன்னிட்ட மோயகுளக் கொங்கை
விமமக்கன்ன ---------- காரப் பனைபோல
மேனிக் கணக்கணைத் தழுவிக் கொண்டாள்

உடனே மயக்க முற்றுக் குறையுயிராகி நிலத்திலே விழுந்தாள். மயங்கி விழுந்த ராசகுமாரத்தியை கூடவந்த தோழிமாறெடுத்து யிந்த விதி வரலாவதே தென்று கொண்டு பதாற்றமெல்லாம வ்விடத்திலே எறிந்துபோட்டு யிவளைக் கையிலா கையாக யெடுத்துக் கொண்டு போய் மேடையின் பேரிலே போட்டார் களந்த மேடையிலே முன்னாளிவளுடனே தரிசித்திருக்கிற கிளிகள் தங்களிலே தங்கள் வருத்தங்களையும் ---------------------- பேசிக்கொண்டபடி, வாரீர் கிளியினமே நாமிங்கேயிருந்து மலச் சென்னெல் கதிரைச் சிறிதென்றெண்ணி தென்ன பளத்தை காய்யென்று கொத்திப் பசியுந்தீராமல் --------- விடியும் வாட்டி மூக்கும் புண்ணாகியமாறி வந்தோமே யப்படியில்லோ யிந்த ராசகுமாரத்தி போய் வந்தாளென்று கிளியினங்கள் தங்களிலே பேசிக் கொண்டதைக் கேட்டுக் குறையுயிராய்க் கிடந்த ராசகுமாரத்தித் தன்மனந் தன்னை நோக்கிச் சொன்ன கலித்துறை,

சென்னக் கதிரைச் சித்தென்று தெங்கின்
கொங்கையா தரித்து ----------------

யெண்ணப் படாதவற்கிச்சைக் கொண்டேன் ளந்த யெற் என்றந்தக் கவியையுஞ் செண்பகவல்லியார் கிளிகளுடனே சொல்லிக் கொண்டாளது கண்டு, தோழியர்கள் தங்களிலே விசாரப்பட்டும் ------------- வுடனே, ராசகுமாரத்தியுடைய தாய் -------------- டனே தோழியர்கள் உபாயமாய் செய்தி சொல்ல,

அவர்கள் வாரும் ------------ சுவாமி ------------ முடைய குமாரத்தி செண்பக வல்லியார் ---------- ராக் காலத்திலே நித்திரையிலிறந்து போனாளென்று சொன்னார் களது கேட்டு தாயுந்தகப்பனும் வெகு கலக்கமுற்று மயங்கியழுது மேடையின் பேரிலே செத்துக் கிடக்கிற மகளிடத்திலே வந்து முகத்திலே யறைந்து --- மகளைப் பிரட்டிப் பார்த்து யிந்த வினை யெந்த வகையென்று போக்குச் செருக்கியதோ, விசந் தீண்டியதோ, பூதம் ---------------- ப்பசாசுகள் தாவியதோ வென்று யிளவு கொண்டாடி யெடுத் தடக்கிச் சடங்கு கழித்தார்கள்.

அதின்பிறகு ராச குமாரத்தியானவள் ப்சாசு ரூபங்கொண்டு முன்னாள் தெய்வத்தார் ரென்குற ராசகுமாரனையிருக்கச் சொன்ன திருவாசல் மண்டபத்தே சென்று யிருந்து தாரு மாறாகச் சொரியனையுங் கொன்று ------------------- படி அந்த மண்டபத்திலே வந்து படுத்திருக்குற பேர்களை யெல்லாம் யெத் தெறிதென்று. யனேகம் பேரையுங் கொன்று ளக்கினபடியினாலே அந்த திருவாசல் மண்டபத்திலே ஒருவரும் படுக்கியிருக்கப் படாது திருவாசல் வெறுவாசலாகக் கிடக்கிற காலத்திலே, அவ்வையானவள ந்தப்பட்டணத்திலே நீதிமுறை விளம்ப வேணுமென்று வந்தவதரித்தாள். ளவதரித்து நாலுத்தெரு வீதியும் பாத்துக் கொண்டு வருகிறபோது அந்தத் தலத்திலே நின்றபோதவ ளவ்வையைப் பார்த்து அம்மா யிந்தத் திருவாசலிலே ஒரு பெண்பிசாசு வருகிறபேரை யெல்லாங் கொன்று வெகு பாதகஞ் செய்து விடும். யிந்தக் கூடத்திலே படுத்திருக்க வேண்டாமென்று சொல்ல, அவ்வையானவளும் வாசலைப் பாத்து பேச்சியுடையப் பிள்ளையாயிருக்க யென்னைப் பேயடிக்குமோ வென்று அவர்களுக்கேற்ற உத்தரஞ் சொல்லிப் போட்டு, திருவாசலிலே மண்டபத்திலே படுத்து நித்திரை கொள்ளுகிறபோது முதற் சாமத்திலே பிசாசு அவ்வையிடத்திலே வந்து யெத்தெத்தென்று வந்தவுடனே அவ்வை ஞானதிட்டியாக யிது ஒரு பெண் பிசாசு என்றறிந்து ப்பிசாசைப் பார்த்து அவ்வை சொன்ன வெண்பா,

> வெண்பா விருகாலிற் கல்லானை வெள்ளோலைக்
> கண்பார்த்துக் கையா லெழுதானைப் – பெண்பாவி
> பெற்றாளோ பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளென்
> றெற்றோ மற்றெற்றோமற் றெற்று.

என்று அவ்வை சொன்ன வெண்பாவை, கேட்டுப் பிசாசு தன்னிலே யுள்ளொதுங்கி யிதுவரை நாம் கொன்ற பேர்களிலே யிந்தக் கிழவியைப் போலே தெளிந்து பேசினவர்களில்லை யென்று பிசாசு மறுசாமத்துக்கு வருவோமென்று விலகிப்போ

யிரண்டாஞ் சாமத்துக்கு மப்படியே சொல்லி வந்தது. அப்போது அவ்வை சொன்ன வெண்பா,

பானமுளதோ மலையுளதோ ------- னாலுந்
தானமுளதோ தன்கையுள்தோ – மானிலத்திலே

யெற்றோ மற்றெற்றோமற் றெற்று

யிந்த வெண்பாவையுங் கேட்டு விலகி மறுபடி மூன்றாஞ் சாமத்துக்கு மந்தப் படியிலே சொல்லி வந்தது. அப்போ அவ்வை சொன்ன வெண்பா

எண்ணாயிர மாண்டு நீறிர் கிடந்தாலு
முள்ளீரமில்லா கிளிஞ்சலைப்போல் கனமாயப் – பொற்றொடி
மாதர் புணர் முலைமேல் சாற்வாரை
யெற்றோமற் றெற்றோமற் றெற்று.

யிந்த வெண்பாவைக் கேட்டு ப்பிசாசு மிதுவெண்ணவகை யென்றறிய வேணுமென்று விலகி நின்று நாலாஞ் சாமத்து மப்படியே சொல்லி வந்தது. அவ்வை சொன்ன வெண்பா,

கருங்குளவிக் கெட்டாக் கவித்த கனிபோல்
விரும்பினக் கொன்றீயாங் தடைவாழ்க்கை – யறும்பனுவல்
பற்றியிருந்த பழம் பொருளைக் கொள்ளாரை
யெற்றோ மற்றெற்றோமற் றெற்று.

யிப்படி நாலு சாமத்துக்கு மவ்வையிடத்திலே வந்தனுகிய ப்பிசாசு வெட்கப்படவேணுமென்று நாலு வெண்பாவையுஞ் சொல்லித் தன்னை -------- தபடிக்கு விலகிக் கொண்டது கண்டு பிசாசு விவள் நமக்குத் தெய்வமென்றறிந்து அவ்வைகாலிலே சாட்டாங் கமாகத் தெண்டம் பண்ணிப் பிசாசு சொல்லும்படி, தாயே நானிந்த ராச்சியத்துக்குக் கத்தனான ராசாவின் குமாரத்தி. நானொரு ராசகுமாரனுக்கு யிச்சைப்பட்டு யென்தோழி யானவள் வசத்திலே சீட்டுக் கவியெழுதி குடுத்து யிந்தத் திருவாசலிலே வந்திருக்கச் சொல்லி யனுப்பினேன். அந்த சீட்டு அவன் வாசிக்க அறியாதபடியினாலே ஒரு சொறி சிரங்கன் யிந்தக் கூடத்திலே படுத்திருந்தான் அவன் வசத்திலே குடுத்து வாசிக்கச் சொன்னான். அந்தச் சீட்டையுள்ளிட்டுக் கொண்டு யவனுடனே கவடுத் திரமாகச் சொல்லியவன் போனதின் பிறகு யிந்தச் சொறியன் பா வாசனைப் பண்ணிக் கொண்டு என்னைத் தனக்குப் பாரியாக வேணுமென்று யிருந்தான். அதின்பிறகு நானந்த ராசகுமாரன் பேரிலே வைத்த காமவேக மிகுதியினாலே

கூட வந்த தோழியரைப் பிறகே விட்டு நான் முன்சென்று திருவாசலிலே யிருந்த சொறியனை ராசகுமாரனென்று தழுவிக் கொண்டே னப்போது அவனிருந்த சுரூபமென் பேரிலே யனுகினவுடனே வுயிர் குறைந்து கிடந்தேன். னதின் பிறகு நிரைகுறையுயிருங் கிளிக ------- ளெக்கின படியினாலே பட்சிக்கு யேச்சாச்சுதோ வென்று------------ பட்டு யிறந்து யிப்படி யொரு ஆவேசப் பிசாசாகத் திரியிரேனினி மேலெனக்கு யுன்னாலே யீடேற்றம் வரவேணுமென்று கேட்கப் பிசாசு சொல்லும்படி யின்னு மொரு சென்மம் மிப்படி ராசகுலத்திலே பிறந்து அந்த ராசகுமாரனுக்குப் பாரியாக வேணுமென்று பிசாசு சொல்ல அவ்வை சொல்லும்படி,

வாராய் பெண்ணே, அந்த மூடனுக்கு யிச்சித்தப் படியினாலே யுனக்கினி ராசகுலமில்லை. யவன் கணக்கறியா தபடியினாலே யவனுக்கும் ராசகுலமில்லை. யானா வினிமேல் சோழராசாவின் பட்டணத்திலே யுறையூரிலே சோழ ராசாவின் வாசல் பரிவாரத்தார் குலத்திலே பிறந்தும் மகா அதிரூப சவுந்தரியாய் வெகு தமிளுக்கு வல்லமை யாயிருக்கக் கடவ தென்று, மந்த ராசகுமாரன் கணக்கறியாதவனான படியினாலே விறகு தலையனாகப் பிறந்துச் சோழராசாவின் பட்டணத்திலே விறகு வித்து திரியக் கடவதென்றும், நீ யவனுக்குப் பாரியாகக் கடவதென்றுஞ் சாபமிட்டு அந்தச் சொறியனையும் யிளிக் குலத்திலே பிறந்து யிவா கையினாலே குலையுண்டு சாக வேண்டுமென்று வரங்குடுத்து அவ்வையும் போனாள்.

அதின்பிறகு, அவ்வை சாபத்தின்படியே சோளராசாவின் பட்டணமான திருச்சிராப்பள்ளி யுறையூரிலே ராசாவின் வாசல் பரிவாரத்திலே மரகதவல்லி யென்கிற ஆலத்திக்காரி வயிற்றிலே சென்மித்து மகா அதிரூப சவுந்தரியாகப் பிறந்து --------- தென்று புரோகிதரைப் பிடித்துச் சாதக முறைவருத்தி யிந்தப் பிள்ளைப் போத்தி வளர்க்கச் சொல்லிச் சோளராசவுங் கட்டளை யிட்டார். அதின்பிறகு அந்தப் ---------------------------- மானதின் பேரிலே ராசாவின் சமூகத்திலே கொண்டுபோய் விட்டார்கள். ளந்தப் பெண்ணைச் சந்தோஷப்பட்டு யிந்த பெண்ணுக்குத் தில்லை பெண் பெருமா ளென்று பேருங் குடுத்துப் பள்ளிக்கு வைக்கச் சொல்லிக் கட்டளையிட்டா ரந்தபடிக்கு, அஞ்சு வயதிலே பள்ளிக்கு வைத்து ஏழு வயதிலே ஆடல்பாடல் வருத்தி ஒன்பது வயதிலே சிலம்பம் வருத்தி, பதினோ ------- யுத்தத்துக்கு வல்லமையாக்கி பன்னிரண்டு வயதிலே ------------------ திவாகரந், தொல்காப்பியம் சிந்தாமணி சிலப்பதிகாரம் நன்னூல் பெரு

நூல் மதனனூலும், ஆசு மதுரஞ் சித்திர ------------- கணக்கதிகாரம் யவதான சட்டம் கயிலாச வீனை ருத்திரவீனை ------------------ பதினெண்பாசையும் வருத்தி பஞ்ச லட்சணங்களை பாசை யுள்ள தெல்லாம் மகர வயதின் பிறகு தில்லை பெண்பெருமா ளென்கிற பெண்ணை சோளராசாவின் சமூகத்திலே யிவள் கத்த விதாரணங்களெல்லாங் காணவேணு மென்று அளைத்துவரச் சொன்னாரதின்பிறகு, ராசாவைச் சென்று கண்டு தன்னுடைய தோழிமுறைமையெல்லாங் காண்பித்து லட்சண வித்தகமும் படித்தவுடனே ராசவும் வெகு பிரியப்பட்டு யாழைக் கொண்டு வரச் சொல்லிச் சொன்னா ரந்தப்படி யாழைக் கொண்டு வந்து குடுத்தார்களந்த யாழை வாங்கி வாசித்தபிறகு தொனி மந்தமான --------------- கம்பியிலே மயிர் ------------------------- கிடக்குதென்று சொன்னாளது சேதிகண்டு மறுபடி யாழைக் கொண்டு வந்து குடுத்தார்கள். அந்த யாழை வாங்கி வாசித்து அதுவுந் தொனி பேதக மானது கண்டு பாத்து பட்டமூங்கி லடியாழ் ளென்று சொன்னா ளதின்பிறகு ஒரு யாழைக் கொண்டு வந்து குடுத்தார்கள். அந்த யாழை வாசித்து யிது சொன்ன ----------- க்கு தொனி சொன்னது கண்டு யிது பச்சை மூங்கிலா --------- யிருக்கு சொன்னவுடனே யிந்தாண்டாளுக்கு --------------- ராசாவானவர் கேட்டவுடனே ------------ கொண்டு வரச் சொல்லியிந்த பாலிலே யிந்த பச்சை மூங்கிலடி யாழை வாங்காதென்று சொன்னா ளந்தபடிக்கு பாற்குடத்தில் யாழை சொன்னபடி சரியானதுக் கண்டு சோளராசாவுமிவள் பேரிலே வெகு சந்தோஷமாய்த் தமிழறி மடந்தை யென்று பேருங்குடுத்து வெகு வரிசை பண்ணி அனுப்பி விச்சுத் தமிழறிமடந்தையைப் பார்த்து சந்தோஷப் பட்டு மதுரையிலே பாண்டின் வாசலிலே சங்கத்தா ரிருக்கிறாப் போலே நம்முடைய வாசலிலே தமிழறி மடந்தை யிருக்கிறதென்று சந்தோஷப்பட்டு யானைகளு ----------- சேனை வந்து பட்டணப் பிரவேசம் வரச் சொல்லிக் கட்டளையிட்டா ரந்தபடிக்குத் தமிழறியும் பெருமாளுந் தோழியல் ----------------- பெருமாளை யுங் கூட்ட யாழைக்கரத்திலே வைத்து ------------- தமிழறியும் பெருமாள் வீதியுலா கண்டு ராச --------------------- சந்தோஷப்பட்டு வித்து வாங்கிஷா லட்சண காரரைப் பார்த்து தம்முடைய பட்டணமிருக்கிற சிறப்பு ------------ மனுநீதியுடனே கொலுவிருக்கிறதுக்கு தமிழறியும் பெருமாள் யானைக்கு க ----- தத்திலே பவனி வருகிறதுக்கு மவளழகுக்கும் யெதுகை சொல்லுபடி யுறையூர் சோழபுரமென்கிற பட்டணம் தெய்வ லோகத்துக்குச் சரியென்றும் சோள ராசாவைத் தேவேந்தி ரனுக்குச் சரியென்னும் சூரத்தனத்திலே அரிச்சுனனுக்குச் சரியென்று மந்த தமிழறிமடந்தை யேறி வருகிற ஆனை

அயிராவதத்துக்குச் சரியென்றும் தமிழறியும் பெருமாளைச் சூரிய பிரகாசமென்று -------- யென்று மவளுடைய கொண்டை காரிமேகம் நீர்கொண்டு கவிந்தாப்போலவும் தலைமயிர் கூந்தல் பனைவிரிந்து விழுந்தாப் போலவும் முகம் பூரணச் சந்திரன் போலவும் ---------------- நெற்றிக் கதிரறி லிளம் பிறை போலவும் புருவம் சுன்ன கரும்பு ---------------- மூக்கு கிளிமூக்குப் போலவும் முருக்கம் பூப்போலவும், சிறு பவளக் கொடிபோலவும் கையிரண்டும் மயில் சங்கழித்துத் தூக்கினது போலவும் விரல் பயிற்ற நெற்றுப் போலவும் நகங் கிளி மூக்குப் போலவும் தோளிரண்டும் ---------------- சேர்த்தாப் போலவு மார்பு சித்திரப் பாவைக்குச் சிறந்தொப்ப மிட்டது போலவும் தனகிரி செப்புக் கண்டகோடு போலவும் தனகிரியின் காந்தி சூரிய காந்தம் போலவும்----------------------

----------போலவும் ரோமம் மேறு மொழுகிக் கிடக்கிறது போலவும் தொப்புள் உந்திச்சுழி போலவு யிடை துடையிடை போலவும் கடி தடம் பாம்பின் படம்போலவும் கடிதடாகம் பொற்கலம் போலவும் பொற்கலத்தில் பரப்பிய கீரை விரை போலவும் -- சிறு கமுகுத் தோப்புப் போலவும் துடையிரண்டும் வளைத்தண்டு போலவும் முள்ளங்கால் கன்னி விரால் போலவும் உள்ளங்கால் செம்பஞ்சு போலவும் யிப்படியெல் லாம் யெதுகை சொல்லியு மிதுவுந் தமிழறியும் பெருமாளுக் கிணையல்ல வென்று ------- வரிசை பண்ணினதின் பிறகு தமிழறி மடந்தையும் பட்டணப் பிரவேசம் வந்து சோளராசாவின் சமூகத்திலே வந்து ராசாவையும் வணங்கி நின்று, தமிழறி மடந்தை பிரதி சொன்னபடி தனக்கு விசுவாசம் நித்தமாயிரம் பொன்னென்றும் மேல் சிலவுக்கு அஞ்ஞூறு பொன் னென்றும் தன்னுடனே ------ கவியும் பாஷைக்கு பாஷையும் உத்திரப் பிரதி உத்திரமுஞ் சொல்லி தன்னுடைய தமிழை வென்றவர்க்குத்தான் மென்று மவர்கள் தனக்கு நாயக மென்றுந் தனக்கு வேறே அரண்மனை கட்டித் தரச் சொல்லியும் மந்த அரண்மனை அறுபத்து நாலு வாசலுங் குங்குமச் சேறு மிருட்டறையும் பளிங்கு மண்டபமுஞ் சூத்திரபொம்மை முதலான அரண்மனையும் கட்டி யுக்கார ------------- ராசவரிசை முதலான தெல்லாங் கட்டளையிடச் சொல்லிக் கேட்டாளந்தபடிக்கு ராசாவும் உத்தரவு குடுத்தாரந்தபடி அறுபத்துநாலு வாசல் கொண்ட அரமனையு மதில் வெகு கபட சட்டங்களு முண்டாக்கி அந்த அரண்மனை வாசலிலே அசையா மணியும் போட்டு விசுவாசமாக யிருக்கிற காலத்திலே மறுதேசத்து ராசாக்கள் யிவளுடைய அழகுங் கீர்த்தியுங் கேட்டு வந்து

விசுவாசம் ஆயிரம் பொன்னும் மேல்சிலவுக்கு அஞ்னூறு பொன்னுங்குடுத்து யிவளுடனே --------- உத்தரஞ் சொல்ல தமிழ் பாராட்ட மாட்டாம லடித்துத் தள்ளிவிட்ட ராசாக்கள் ஆயிரத் தஞ்னூற்று நாற்பது ராசாக்கள் தோற்று ஓடிப் போனார்கள் ளிப்படித் தமிழைப் பாராட்டி வருகிற காலத்திலே காவெரியாற்றிலே சித்திரை சிலந் தீர்த்தமாட வேணுமென்று ------------ தமிழறிமடந்தையுந் தோழியியலறியும் பெருமாளும் ----- முண்டாகிய பெண்களுமாகப் புதுப்புனலாடி வருகிற வழியிலே முன்னாளவ்வை சாபதத்தின்படியே அயோற்றிப் பட்டணத்து அரிச்சந்திர ராசாவின் குமாரன் தெய்வத்தார் ரென்னுஞ் சோளராசாவின் பட்டணத்திலே யுறையூர் சோழ புரத்தில் ஒரு விறகு தலையன் வயிற்றிலே மறு சென்மம் பிறந்து வந்து தானும் விறகு தலையனாக விறகுங் கட்டிக் கொண்டு யருவாளுங் கோடாலியுமிடுப்பிலே சொருகிக் கொண்டு சுமை தாங்கியில் விறகு கட்டையுஞ் சாத்திச் சிம்மாடையுந் தலைக்கு ----- போட்டுச் சிம்மாட்டின் பெரி--------- கொடுங்கை வைத்துப் படுத்து நித்திரையாகக் கெடக்கிறபோது வாயினீர் வடிந்து கொடுங்கை--------- யெரும் பரிக்கக் கிடக்கிற தைத் தமிழறிமடந்தை கண்டு இவனைப் பார்த்து இவனையும்,

பெண்---வென்று நிந்தனைப் பண்ணி முகஞ் சுளித்து தோழி யியலறியும் பெரு மாளுடனே கேட்க அப்போது யியலறியும் பெருமாளென்கிற பெண் தமிழறியும் பெருமாளைப் பார்த்துச் சொன்னபடி,

வாராய் பெண்ணே யெத்தனையாகிலும் யெண்ண யெண்ணி யெழுத்தா வாசித்தாலும் பெண்மதி மீதுக்காதோ வென்று சொன்னாள். ளதின் பிறகு தமிழறிமடந்தை விறகு தலையனைப் பார்த்து சொன்ன வெண்பா.

வண்டி யெறும்பரிக்க வாய்னீ ரொழுகிவிழ
கண்டவர்கள் --------------- நகைக்க
உண்டோ ----------------- கூடுவளோ
சேருவளோ யின்றொருத்தி செப்பு

என்று தமிழறிமடந்தை சொல்ல தோழி யியலறியும் பெருமாள் சொன்ன வெண்பா.

ஏழைக்குத் தக்கது ------------- ஆனாலும்
ஏழைக்குப் பாங்கியாக இல்லையோ – தோழிகேள்
வல்லாள தமிழறிவாளே னேயா மகிற
பொல்லாங் குரையாதே போ

என்று யியலறியும் பெருமாள் சொல்லத் தமிழறிமடந்தை சொன்னபடி வாராய் தோளி யெப்படியாகிலும் பொருந்திய வனை தன்பத்தவென்று தோள் சேருவாளோ யென்று நகைத்துக் காரியுமிழ்ந்து போனாள்.

அது கண்டு விறகு தலையன் முழித்துயிவள் சொன்ன ------- தன்னை நிந்திச்சு காரியு மிழ்ந்ததும் கண்டு தோழி யியலறியும் பெருமாள் சொன்ன அனுமானமுங் கேட்டு விறகு தலையன் லெட்சைப்பட்டு நாமுமிப்படி ஒரு ஆணாபிறந்து ஒரு பெண்ணாக பிறந்தவள் நகைக்கவுங் காரியமேது. ஆயிரங்கோடி புண்ணியஞ் செய்தல்லோ ஒரு ஆண்பிறக்க வேணும். ஆயிரங்கோடி பாவஞ் செய்தல்லோ ஒரு பெண் பிறக்கவேணும். பெண்ணாக பிறந்து யிவளொருதாதியாக இருக்க யிவள் நகைக்க யிந்தச் சடலமெடுத்தோமே யென்று விசாரப்பட்டுப் பலபல நினைவு நினைந்து மனசு தேறியிவ ளொரு தாதியல்லாமல் மற்றப் படியல்ல வென்று தினமொரு காசாகிலும் சம்பாதித்து யிவளுக்காயிரம் பொன்னுங் கொடுத்து, ஒரு நாலாகிலும் நான் கூடி யனைந்து நிந்தனைப் பண்ண வேணுமென்று கருத்திலே நினைந்து முன்னாளவ்வை சாப மோசத்தின்படியே விறகு தலையன் கருத்திலே நினைந்து மறுநாள் வெட்டருவாளுங் கோடாலியுமெடுத்துக் கொண்டு போய் மலை யடிவாரக் கெடுவிலே ஒருத்தருஞ் சஞ்சாரமில் லாத தலத்திலே போய் ------யென்று துட்டமிருகங்களுக்குப் பயப்படாமல் ----------------------------னொருவனுண் டென்று மனதிலே தியானித்துக் கொண்டு விறகு பார்க்கு மிடத்திலே முன்னாள் விட்டகுறையாக முன்செய்த புண்ணிய பலத்தினாலே சந்தனமரங் கண்டா னந்த மரத்தைப் பார்த்து சந்தன மரமென்றறியாமல் இந்த மரம் வெட்டிப் பிளந்து விற்றால் நமக்கு வயற்றுக்குச் சிலவு போக பத்துப் பணமிச்சம் பிடிக்கலாமென்று அந்த மரத்திலொரு கொப்பு வெட்டிப் பிளந்து அழகிய சிராயாக ஒரு கெட்டுக் கட்டிக் கொண்டு உறையூர் சோளபுரமென்கிறப் பட்டணத்துக் கடையிலே விறகு போட்டுக் கொண்டு நிற்கிறபோது ராசாவின் கருவூலத்துக்குக் குரியான செட்டி விறகு கட்டையும் வாசனையுங் கண்டு ஒரு சிராய் பிடிங்கி முகர்ந்து பார்த்து விறகினுடைய ------------ மறியாத பொக்களைப் போலே விறகு தலையனுடனே யிதுவென்ன விறகென்று கேட்க விறகு தலையன் சொன்னபடி யென்ன மரமோ தெரியாது. ஒரு மரம் பருமரமாக மலைக் கெடுவிலே பட்டு நின்னுது. அதிலே ஒரு கொப்பு வெட்டிப் பிளந்து கொண்டு வந்தேனென்று, சொல்ல செட்டியுஞ்

சந்தோஷப்பட்டு வுடனே விலையதிகஞ் சொல்லி விறகுக் கட்டை தன் வீட்டிலே எடுப்பிச்சுக் கொண்டு கூட்டிப்போய் விறகு தலையனுக்கு ஆசனமுமிட்டு துப்படி வெட்டி ---- மாலை யுங் குடுத்து நித்தியல் வீட்டிலே மூன்று நேரமும் அசனமிடச் சொல்லி, நாலு நாளைக்கொரு ------- சொல்லி கட்டளையிட்டு விறகு தலையனை யழைத்து வரும்பிள்ளாய் நீ எத்தனை கேட்டாலுந் தருகிறேன், யிந்த விறகில் ஒரு சிறாய்ப்பொடி போகாமல் வெட்டி வந்து போடென்று செட்டிசொல்ல நல்லதென்று விறகுதலையனந்த மரத்தினுடைய ------- முதல் வெட்டி வந்து ------- செட்டி வளவிலே போட்டு வருகிற நாளை யிலே கட்டுக்கொரு விறகுமேல் விறகாகக் கொண்டு வந்து -------- முதல் குப்பை யெடுப்பானவரைக்கும் கொடுத்து தனக்கு வெளைக்குத் தரவேணுமென்று சொல்லி வந்தா னதின் பிறகு தனவார் செட்டி விறகுதலையனைப் பார்த்து உனக்கு வேண்டிய தென்ன வென்று கேட்க விறகு தலையன் சொன்னபடி தான் விறகுக் கட்டுச் சாத்தித் திரையாகப் படுத்திருந்தும் தமிழறி மடந்தைத் தீர்த்த மாட வந்ததும் தனக்கு யுதாசீனம் பண்ணி னதும் சொல்லக் கேட்டு தனவார் செட்டியுமுடனே சந்தோஷப் பட்டுத் தமிழறிமடந்தைக்கி விசுவாசம் ஆயிரம் பொன்னும் மேலச் சிலவுக்கு அஞ்ஞூறு பொன்னும் யிவன் தனது சிலவுக்கு இருநூறு பொன்னும் ஆக ஆயிரத்தெழுநூறு பொன்னுங் குடுத்து தமிழறிமடந்தை வெகு தமிழுக்கு வல்லவளுடனே தமிழ் பாராட்டக் கூடாதென்று அவளெது சொன்னாலும் பேசாதிருவென்று புத்தியுஞ் சொல்லி யனுப்பினா னதின்பிறகு விறகுதலைய னாவிதனிடத்திலே போய்ச் சவரமும் பண்ணிக் கொண்டு யேகாலி யிடத்திலே போய்த் துரை மக்கள் கட்டி ரசகலவையிலே ஒரு சிவடுசலவையும் ------------ கொண்டு அதுக் குண்டாகிய விலையுங் குடுத்து தட்டான் வசத்திலே சிறிது பொன்னுங் குடுத்து, ராசவரிசை யுடைமைகள் செய்து தரச்சொல்லி வாங்கிக் கொண்டு ராசாவின் வாசல் மந்திரிக்குப் பரிதானஞ் சிறிது பொன்னுங் குடுத்து, அடியேனுக்கு இன்றைக்கு இப்பொழுது தம்முடைய வரிசையெல்லாங் கட்டளையிடவேணுமென்று விறகுதலையன் கேட்டு மந்திரி யுடனே நல்லதென்று தன்னுடைய வரிசையுள்ள தெல்லாங் கட்டளையிட்டு, தண்டிகை ----- கட்டளையிட்டுத் தானும் ராச வடிவு செய்து கொண்டு --------- வாசனையாக்கி வகை கொண்டு அலங்காரமாகக் கட்டியங்கூறி வந்த தமிழறிமடந்தை அரமனை நோக்கி வருகையிலே தன் கையிலே யிருந்த ஆயிரத்தஞ்ஞூறு பொன்னையுங் அடப்பக்காரன் வசத்திலே குடுத்து உத்தண்டமாகத் தமிழறிமடந்தை யரமனை வாசலிலே

வந்திறங்கியவன், விசுவாசச் சாவடியிலே பொருந்தி அவள் வாசல் அசையாமணியைத் தட்டி யாராவாரத்தோடுங் கூடியிருக் குறபோது, அசையாமணி ஓசை கேட்டு வாசல் காவலர் --------- வந்து விசாரித்துத் தமிழறிமடந்தையுடனே அறிக்கைப் பண்ணி னார்க ள ----- தின்பிறகு கொல்லைச் சேவுகர் கணக்குப்பிள்ளை நோட்டக்காரர் முதலான பேரை யனுப்பி ஆயிரத்துஞ்னூறு பொன்னையும் வாங்கிக் கருவூலத்திலே போடச் சொல்லி கட்டளையிட்டா ளதின்பிறகு விறகு தலையனுடைய அடப் பகாரன் வசத்திலே யிருந்த ஆயிரத்தஞ்னூறு பொன்னையும் வாங்கிப் பாருவையிட்டுக் கருவூலத்திலே போட்டு மறு செய்தி தமிழறியுமடந்தையுடனே சொல்லக் கேட்டு விசுவாசமாயிரம் பொன்னும் மேலச்சிலவுக்கு அஞ்னூறு பொன்னும் சரியாக வந்துதோ வென்று கேட்டு விறகு தலையனான ராசாவையுந் தன்னுடைய போசனக் கொலுச் சாவடியிலே வந்திருக்கச் சொல்லி யூழியக்காரிச்சிய முடனே சொல்லியனுப்பினா ளவர்கள் வந்து சொன்னவுடனே விறகுதலையனு மடப்பக் காரனுமாக போசனக் கொலுச் சாவடியிலே போயிருந்ததின் பிறகு, பொழுது புகுந்தவுடனே விறகுதலையனைச் சங்கத்துக்குப் போய் வெண்ணீர் விட்டுக் கொள்ளச் சொல்லி சலவை கட்டிக் கொள்ளச் சொல்லி சளம் பண்ணச் சொல்லி யூழியக் காரிச்சியள் வந்து சொன்னார்கள்.

அந்தப்படி விறகு தலையனும் ஆசனம் பண்ணினான். வுடனே உத்திரச்சாவடியிலே யிணைக் கட்டிலாக இரண்டு கட்டில் போட்டு அங்கே வந்திருக்கச் சொன்னார்களதின் பிறகு விறகு தலையனுங் கால் மாடு தலைமாடு அறியாமலக் கால் மாட்டுப் பக்கத்திலே போயிருந்தானதின் பிறகு தமிழறி மடந்தையும் தோழி யியலறியும் பெருமாளும் ரவண்டாகப் பெண்களுடனே சங்கீராகம் படிக்க கட்டியங் கூற சாயமரை யிரட்ட வெற்றி கூறி விருது முழங்க காளாஞ்சி பிடிக்கப் பாவாடை யிரட்டப் பன்னீர்ச் செம்புபக்கம் வர கன்னியர்கள் களியலடிக்க கையிலா கையாக வந்து உத்திரச் சாவடி புகுந்து தானுமொரு கட்டிலின் பேரிலே யிருந்து விறகு தலையனை ---- -------- பரியந்தம் பாத்து யிவன் லெட்சண வானாக யிருக்கிறான். தமிழொன்று மறிந்தவனல்ல வென்று தோழியியலறியும் பெரு மாளைப் பார்த்து வாராய் தோழி, வெறுங்குடமுமல்ல நிறைகுடமுமல்ல அரைக்குடமென்று தமிழறி மடந்தை சொல்ல தோழி யியலறியும் பெருமாள் சொன்ன விருத்தம்.

என்று தோழி யியலறியும் பெருமாள் சொல்ல யிவனை யென்ன வென அறியவேணுமென்று தமிழறிமடந்தை விறகுதலை யனைப் பார்த்து ------------- காணும் பேசாதிருக்கிறீரென்று கேட்க மறு உத்திரஞ் சொல்லாமலிருந்து ஆடல் பாடல் பாத்திருந்தான். தோழி யியலறியும் பெருமாளிவனைப் பார்த்து, யேதுகாணும் ராசகுமாரனே மவுனமாக யிருக்கக் காரியமே தென்று தமிழறி மடந்தைச் சொல்லுகிற கவியைக் கேட்டு உத்திரப் பிரதி உத்திரஞ் சொல்லு மென்ற வுடனே ஒரு கவி சொல்லென்று விறகு தலையன் சொன்னா னதின்பிறகு தமிழறிமடந்தை சொன்ன நொடி விருத்தம்.

கட்டிய நன்கரையான் கால்பலது முடையான்
கொட்டியுமாம் ------------- முளைத்தடும்
நட்டனை யல்லவே நான் -------------
தூயிட்ட ------------ லாடும் மேறியு மல்ல.

வென்றாள். யிந்தக் கவிக்குப் பயனறிந்துரையாமலிருந்த வுடனே, இவன் மூடனென்று தோழி யியலறியும் பெருமாளைப் பார்த்துத் தமிழறிமடந்தை சொன்ன 'பா'

தோழிமுகம் பார்த்து தோகை நகையாக
கோழியிது சேவலென முள்கூறவுமே – உள்ளிவியக
மேதினியில்லை யென்விதியாக மேதினில்லை னெண்பிறந்து
மதியாயு மென் முகத்து

என தமிழறிமடந்தை சொல்லத் தோழி இயலறியும் பெருமாள் சொன்ன வெண்பா,

அத்திக்காய் முத்தலென்று வதிலுளவிரை பழுத்தோதிற்
திக்கவே பழுத்தால்த் தின்னாரோ – முகத்தத்தில்

என்று தோழியியலறியும் பெருமாள் சொல்ல தமிழறியும் பெருமாளெழுந்திருந்து அரமணைக்குள் போரபோது விறகு தலையன் பிறகே வருகிறது கண்டு யூழியக்காரிச்சிகளை விட்டு அவனை தெண்டமாக அடித்து சாவடிக் கப்பாலே தள்ளி விட்டார்க ளதின் பிறகு விறகுதலையன் தலையேரி ----- முதலும் பறித்துக் கொண்டு அடித்துத் தள்ளி விட்டார்களென்று

பட்டண மெல்லா முறையிட்டு ராசாவினுடைய அரமனை வாசலிலே சென்று ----- வென்று முறையிட்டான். முறையிட்டச் சத்தத்திலே யிவன் வார்த்தையை ஒருதருங் கேளாத படியி னாலே ஒரு -------------- கொண்டு வருகிறபோது, அங்கே ஒரு ராசகுமாரன் தமிழறிமடந்தைக்கு ஆயிரத்தஞ்ஞூறு பொன்னுங் குடுத்து ----- யிருக்கிற னிவனைப் பார்த்து வாரும் பிள்ளா யவள் செய்யிற அவ ----- கியாதி யிங்கே ஒரு தருங் கேளார்கள். மதுரை யிலே சங்கத்தாரிடத்திலே சென்று அவர்களுடனே உங்களைச் சோழ ராசாவின் வாசல் ஆலத்திக்காரி தமிழறிமடந்தையுங் களை நிந்தாசனை சொன்னா ளென்று, உங்களுக்குஞ் சொன்னாளென்று சொல்லு. யதின் பிறகு அவர்களுங் கேளாதிருந்தால், சொக்கநாத சுவாமி கோவிலே யிருந்து சங்கத்தாருக்கு மத்தத்துரை மக்களுக்கும் பால் குடம் பிறப்படும் மதிலே சங்கத்தாருக்கு வருகிற பால் குடத்தை யடித்துடைத்தா லதுமுன்னிலையாக வுண்ணை யழைத்துக் கேட்டு யிவள் தமிழை வென்று யுனக்குப் பாரியாக சித்தம் வார்களென்று ராசகுமாரன் சொன்னது கேட்டு, விறகு தலையனு முன் அவ்வை சாபமுடியும் படியாக, உடனே மதுரைக்குச் சென்று சங்கத்தார் வாசலிலே நின்று முறை யிட்டா னதுகேளாமல் வாளிருந்தார்க ளதின் பிறகு விறகு தலையன் சொக்கநாத சுவாமி திருக்கோவில் சென்று சுவாமியும் சேவித்துக் கொண்டு கோபுரவாசலிலே வேவு போட்டிருந்தா னதின்பிறகு மதுரை மாநகரிலே யுண்டாகிய துரை மக்களுக்குஞ் சங்கத்தாருக்கும் பால்குடம் சந்தி கால வேளையிலே பிறப்பட்டது. அதிலே துரை மக்களுக்குப் போற குடத்தை விட்டுச் சங்கத்தார் நாற்பத்தொன்பது பேருக்கும் நாற்பத் தொன்பது குடம் பிறப்பட்டுது. அதிலே ஒரு குடத்தை அடித்துடைத்தான். அதிலே ஒரு குடமுடைந்த படியினாலே வாயொடு அரிக்கண்டம் போட்டாப்போலே சுமந்து வந்தவன் கழுத்திலே யிருந்தது. அந்த வாயோடடையுங் கழுத்திலே சுமந்து கொண்டு சங்கத்தார் கூடியிருக்கிற மண்டபத்திலே போனானது கண்டு சங்கத்தாரிவனுடனே செய்தி கேட்டார்கள். அப்போது கல்வடைக் கழுத்தன் சொல்லும்படி, கோபுர வாயிலே யிருந்தெருருவனடித்துடைத்தானென்று சொன்னவுடனே யிவனைக்கூட்டி வரச் சொல்லிக் கட்டளையிட்டார்க ளந்த படிக்குச் சங்கத்தார் கூட்டிவரச் சொன்னார்களென்று சொன்னதுகேட்டு விறகுதலையன், சங்கத்தாரிடத்திலே சென்று முகாவணக்கமாகக் தெண்டம் பண்ணி கைகட்டி நின்றா னப்போது சங்கத்தாரிவனைப் பாத்து யேது பிள்ளாய் நடந்த செய்தியென்ன வென்று கேட்கிறபோது விறகு தலையன்

சொல்லும்படி, உறையூரிலே விறகு தலையனாகப் பிறந்து, தன்னைத் தமிழறியுமடந்தை உதாதீனஞ் சொன்னதுந் தோழியியலறியும் பெருமாள் சொன்னதும், அதின்பிறகு லெட்சைப்பட்டுத் தான் பணந் தேடவேணுமென்று விறகு தேடி போனயிடத்திலே சந்தனமரம் பட்டுநின்றது. அந்த மரத்தைச் சந்தனமர மென்றறியாமல் விறகு வெட்டி வந்து கருவூலச் செட்டி கண்டு, அந்த மரத்தினுடைய சல்லிவேர் முதலாகக் கொண்டு வரச் சொல்லிச் சொன்னது மந்தப்படி கொண்டு வந்து போட்டு ஆயிரத்தஞ்னூறு பொன் வாங்கி தமிழறிமடந்தைக்கு குடுத்ததும் அவளிடத்திலே போனதும் தான் உத்திர சூத்திரஞ் சொல்ல வகையறியாமலிருந்ததும், அதுகண்டு அவளடித்துத் தள்ளி விட்டதும் மறுபடி தன்னை அடித்துத் தள்ளுகிறபோது தான் சங்கத்தார் வகை ---------------- னென்று சொன்னதும், அது கேட்டு வெகு கோபமாக உதா தீனஞ் சொன்னா ளுங்களுக்குச் சங்கப் பட்டமில்லை யென்றுஞ் சங்கப் பலகையில்லை யென்றும் தனக்கெதிரியில்லை யென்றுஞ் சொன்னாளென்று, விறகுதலையன் சொல்லி அடியே னுக்கு யெப்படியானாலுந் தேவரீர்மார் கிடாடஷத் தினாலே அவள் தமிழை வென்று அடியேனுக்கு அவளைப் பாரி யாக்கித் தரவேணுமென்று சாஷ்டாங்கமாகத் தெண்டம் பண்ணினா னதின்பிறகு சங்கத்தார் விறகு தலையனுக்கு அடைக்கலங் கொடுத்து நல்லதென்று, யிவளுக்கு யித்தனை பராசிரம மேதென்று வெகுவாய் ஆராய்ந்து பாத்து தமிழறி மடந்தைக்கு ஒரு சீட்டெழுதி குடுத்த னுப்பி செய்தி யறிவோமென்று சங்கத்தார் சீட்டுக்கவி வெண்பா

மின்னே ரிடையாய் விலைபேசி வாங்குமது
பொன்னா யிரமுண்டே போதாதோ எந்நாளுஞ்
சற்றென் றிராதே சதிராக வாங்கியது
பொற்றொடிக்குப் போதும் புகழ்.

–சுவடி குறை

முதன்மைத் தரவுகள்

1) தமிழறியும் பெருமாள் கதை, (பதிப்பாசிரியர்) கருணானந்த சுவாமிகள், சிந்தாதிரிப்பேட்டை பிரபாகர் அச்சுக்கூடம், சென்னை, 1866.

2) தமிழறியும் பெருமாள் கதை, ஓலைச்சுவடி, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை-5.

3) தமிழறியும் பெருமாள் கதை, தாள் சுவடி, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை-5

4) அளகேசுவரராசன் கதை, ஓலைச்சுவடி, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை-5

5) அளகேசுவரராசன் கதை, தாள் சுவடி, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை-5

6) தமிழறி மடந்தை கதை, ஓலைச்சுவடி, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை-5

7) அளகேசுவரராசன் கதைச் செய்யுள் உரை, தாள் சுவடி, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை-5

துணைத் தரவுகள்

1) அபிதான சிந்தாமணி, ஆ. சிங்காரவேலு முதலியார், A.E.S. வெளியீடு, புதுதில்லி, 2001.

2) சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் பேரகராதி, தொகுதி-IV.

3) சுவடிப் பதிப்பு நெறிமுறைகள், பதிப்பாசிரியர், முனைவர் த.கோ. பரமசிவம், தமிழ்ப் பல்கலைக்கழகம், 1989.

4) தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணை, தொகுதி. 1, 2, 3, 4, 5, பதிப்பாசிரியர், முனைவர் த.கோ. பரமசிவம், தொகுப் பாசிரியர், முனைவர் வே. இரா. மாதவன், புலவர். வ.வெ. நாகராசன், தமிழ்ப் பல்கலைக்கழகம், 1989.

5) கேரளப் பல்கலைக்கழகம், தமிழ்ச் சுவடிகள் அட்ட வணை, தொகுதி. 1, இரா. நிர்மலாதேவி, உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனம், 1983.

6) தமிழ்ச் சுவடிகள் அகரவரிசை அட்டவணை தொகுதி-1, பண்டிட் உலகநாதப் பிள்ளை, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை, 1925.

7) தமிழ்ச்சுவடிகள் அகர வரிசை அட்டவணை தொகுதி-II, டி. சந்திரசேகரன், அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை, 1951.

8) தமிழ்சுவடிகள் அகரவரிசை அட்டவணை-IV, தெ. ஆர். பாஸ்கரன், அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை, 1980.

9) தமிழக நாட்டுப்புற வழக்காற்றியல், அளகேசுவரராசன் கதை, - தாள் சுவடிப்பதிப்பு, டிப்ளோமா பட்ட ஆய்வேடு, மு. வையாபுரி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 2003.